# பொருளியல் நோக்கு

மலர் 26 இதழ் 01/02 ஏப்ரல்/மே 2000

வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர்
மாவத்தை,
கொழும்பு 2, இலங்கை.

பிரதம ஆசிரியர்:
கலாநிதி எஸ். எஸ். ஏ. எல். சிரிவர்தன
ஆராய்ச்சிப் பணிப்பாளர்

இணையாசிரியர்-நிர்வாக ஆசிரியர்:
டப். ஜீ. எஸ். வைத்தியநாத

இணையாசிரியர் : (சிங்களப் பதிப்பு - ஆர்திக விமசும)
ஈ. டி. சி. புஷ்பகுமார

இணையாசிரியர் : (தமிழ் பதிப்பு - பொருளியல் நோக்கு)
எம். எல். எம். மன்சூர்

*பொருளியல் நோக்கு* கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளி விவரத் தரவுகளையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.
*பொருளியல் நோக்கு* ளியீடு மக்கள் வங்கியின் ஒரு சமூகப்பணித் திட்டமாகும். எனினும், அதன் பொருடளக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.
*பொருளியல் நோக்கு* மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக் கொள்ள முடியும்.

## உயர் கல்வி அநுபந்தம்

அனோமா கொலன் கஹபிட்டிய — சிறு தொழில்கள் தொடர்பான கருதுகோளும் அண்மைய போக்குகளும்

## உலகமயமாக்கல்

ஜே. பீ. கலேகம 02 உலகமயமாக்கல்

காமினி கொரயா 20 எழுச்சி கண்டுவரும் புதிய உலகளாவிய பொருளாதாரத்தில் வளர்முக நாடுகளின் நிலை

அங்டாட் அறிக்கை 26 உலகமயமாக்கல் அதன் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமானால் வளர்ச்சியடைந்த நாடுகள் அபிவிருத்திக்கென கடுமையாக உழைக்க வேண்டும்

## அடுத்த இதழ்

சுற்றுலாத் துறை

கொழும்புத் தமிழ்ச் சங்கம் நூலகம்

# உலகமயமாக்கல்

கலாநிதி ஜே. பீ. கலேகம

உலகமயமாக்கல் என்பது உலக நாடுகளையும் அவற்றில் வாழும் மக்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு செயன்முறையாகும். அது பொருளாதார, தொழில்நுட்ப, கலாச்சார மற்றும் அரசியல் பிணைப்புக்களுக்கூடாக உலக மக்களை மிக அருகில் எடுத்து வருவதுடன், அவர்கள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்கும் நிலையையும் அதிகரிக்கச் செய்கின்றது. மிக முக்கியமானதாக இருந்துவரும் பொருளாதார கண்ணோட்டத்தில் நோக்கும் பொழுது, உலகமயமாக்கல் என்பது அனைத்து நாடுகளினதும் வளர்ந்து வரும் பொருளாதார ஒருங்கிணைப்பாகவும், தேசிய சந்தைகள் ஓர் உலகளாவிய சந்தையில் ஒருங்கிணையும் ஒரு செயன்முறையாகவும் உள்ளது. தேசிய சந்தைகள், பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றிலான அதிகரித்த அளவிலான எல்லை தாண்டிய வர்த்தகத்திலும் சர்வதேச மூலதனம் மற்றும் பணம் என்பவற்றின் அசைவுகளுக் கூடாகவும் தொழில்நுட்ப பரிமாற்றத்துக் கூடாகவும இது இடம் பெற்று வருகின்றது. புதிய சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும், செலவு அனுகூலம் மற்றும் உயர் இலாபம் என்பவற்றை கருத்தில் கொண்டு பொருளாதார நடவடிக்கைகள் தேசிய எல்லைகளைத் தாண்டி வியாபித்துச் செல்லும் பொழுது பண்ட உற்பத்தி, வர்த்தகம் மற்றும் முதலீடு என்பன சர்வதேசமயமாக்கப்படுகின்றன. அரசியல் அடிப்படையில் நோக்கும் பொழுது உலக மயமாக்கல் என்பது ஜனநாயகம், மனித உரிமைகள், அடிப்படை சுதந்திரங்கள், பால் சமத்துவம் ஒளிவு மறைவற்ற ஆட்சி மற்றும் அரசு சாரா அமைப்புக்கள் என்பவற்றின் பெருக்கம் என்ற வகையிலேயே கருதப்பட்டு வருகின்றது. இது தவிர உலகமயமாக்கல் செயன்முறை ஒரு சமூகவியல் ரீதியான பரிமாணத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அதாவது, உலக மொழியாக ஆங்கிலத்தை ஏற்றுக் கொள்வதும் பொப் இசை, ஹொலிவூட் படங்கள், நீல நிறக் காற்சட்டைகள், திடீர் உணவகங்கள் மற்றும் நவீன வாழ்க்கை மோஸ்தர்கள் என்பவற்றின் பரவலாகவும் அது நோக்கப்படுகிறது. பொதுவாக கூறுவதானால் உலகமயமாக்கல் சக்திகள் கைத்தொழில் நாடுகளிலிருந்தே தோன்றி வருகின்றன. வளர்முக நாடுகளை தம்மால் வடிவமைக்கப்படும் உலகளாவிய அமைப்புக்குள் உள்வாங்கிக் கொள்வதே இச்சக்திகளின் நோக்கமாகும். இது அநேகமாக மேலைய நாடுகளின் மூலதனம், தொழில்நுட்பம், கலாச்சாரம், எண்ணப் போக்குகள் மற்றும் வாழ்க்கைப் பாணிகள் என்பவற்றை வளர்முக நாடுகளுக்குள் ஊடுருவச் செய்கின்றன. இந்த வகையில் இது உலக நாடுகளின் பொருளாதார, கலாச்சார அரசியல் மற்றும் சித்தாந்த கொள்கைகளை ஒருமுகப்படுத்தும் (அல்லது மேலைத் தேசமயமாக்கும்) ஒரு செயன் முறையாகவே தென்படுகிறது.

## நவீன தொழில்நுட்பம்

மறுபுறத்தில், உலகமயமாக்கல் என்பது தொழில்நுட்பத்தில் ஏற்பட்டு வரும் முன்னேற் றத்தின் காரணமாக காலம், இடம் மற்றும் தேசிய எல்லைகள் என்பவற்றை சுருக்கியும் இல்லாமல் செய்தும் வருகின்றது. இணையம், இடம்பெயர் தொலைபேசி, தொலை நகல் பொறி முதலிய புதிய தகவல் தொடர்பு தொழில்நுட்பங்கள் மலிவானவையாகவும் உயர் வேகத்திறன் கொண்டவையாகவும் பரந்த ஆள்புலத்தை உள்ளடக்கக் கூடியவை யாகவும் உருவாகி வருகின்றன. அவை நிதிச் சந்தைகளின் ஒழுங்கிணைப்பினையும் பல்தேசிய நிறுவனங்களின் பரவலையும் மக்களிடையே தகவல் மற்றும் கருத்துக்கள் என்பவற்றின் பரிமாற்றத்தினையும் வியப்பூட்டும் அளவுக்கு துரிதப்படுத்தியுள்ளன. நியூயோர்க்கிலிருந்து லண்டனுக்கான மூன்று நிமிட நேர தொலைபேசி அழைப்புக்கான செலவு (1990 இன் விலைகளில்) 1930 இல் 245 அமெரிக்க டொலர்களாக இருந்து 1990 இல் மூன்று அமெரிக்க டொலராகவும் 1999 இல் மூன்று (அமெரிக்க) சதங்களாகவும் வீழ்ச்சி கண்டிருந்தது. கப்பல் சரக்கு போக்கு வரத்துச் செலவு 1930 இல் தொன் ஒன்றுக்கு 60 அ.டொலர்களாக இருந்து 1990 இல் 29 அ. டொலர்களாக வீழ்ச்சி கண்டுள்ளது. கம்பியூட்டர்களின் விலைகள் 1990 இல் 1960 இல் நிலவிய விலைகளிலும் பார்க்க 125 மடங்கு குறைவாக இருந்து வந்துள்ளது. தகவல்களை முறைப்படுத்தும் செலவு பத்து இலட்சம் தொழிற்பாடுகளுக்க 75 அமெரிக்க டொலர்களிலிருந்து 1969-1990 காலப் பிரிவின் ஒரு சதத்தின் நூறின் ஒரு பங்கிலும் குறை வாக வீழ்ச்சி அடைந்திருந்தது. அதிகம் அதிகமான மக்கள் தொலைபேசி மற்றும் தொலைநகல் என்பவற்றை உபயோகித்து வரும் அதேவேளையில், தொலைக்காட்சி யைப் பார்க்கும் மக்களின் எண்ணிக்கை இடையறாது பெருகி வருகின்றது. 1980 க்கும் 1995க்கும் இடையில் 1000 பேரில் தொலைக்காட்சி வைத்திருந்தவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரித்திருந்தது. அதாவது, உலக அளவில் தொலைக்காட்சி வைத்திருந்தவர்களின் எண்ணிக்கை 1000 பேருக்கு 120 இலிருந்து 235 வரை உயர்ந் திருந்தது. கிழக்காசியாவில் அது ஐம்பதி லிருந்து 750 ஆகவும், தென்னாசியா வில் 150 ஆகவும் அதிகரித்துக் காணப்பட்டது. இலங்கையில் உள்ள ஒரு கிராமம் Dynasty மற்றும் Baywacth போன்ற ஹொலிவூட் படங்களுடனும் கொக்கோ கோலா மற்றும் கென்டர் கோழி இறைச்சி போன்ற விளம்பரங்களுடனும் வெகு விரைவில் பிணைக்கப்பட முடியும்.

உலகளாவிய ரீதியில் தொடர்பாடல் முறைகளில் ஏற்பட்டு வந்துள்ள தொழில் நுட்ப முன்னேற்றங்களுடன் இணைந்த விதத்தில் பண்ட உற்பத்தி தொடர்பான தொழில்நுட்பத்திலும் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நல்ல தரமான பொருட்களை மலிவாகவும் பாரிய அளவிலும் உற்பத்தி செய்வதற்கான புதிய இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதுடன், மனித உழைப்புக்குப் பதிலாக தன்னியக்க முறைகள் பிரதியீடு செய்யப்பட்டு வருகின்றன. விருத்தி செய்யப்பட்ட உயிரியல் ரீதியில் மாற்றி அமைக்கப்பட்ட பீடைகளை எதிர்த்து நிற்கத்தக்க புதிய விதைகள் அபரிமிதமான விளைச்சல்களை எடுத்து வருகின்றன. தாவரங்களின் பரம்பரை இயல்புகள் மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றன. புதிய உயிரியல் தொழில்நுட் பத்தின் மூலம் விலங்குகள் உருவாக்கப்பட் டுள்ளதுடன், கால்நடைகளுக்கான வளர்ச்சி சுரப்பிகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. புதிய தொழில்நுட்பங்கள் காரணமாக பண்ட உற்பத்தியில் முன்னெப் பொழுதும் இருந்திராத அளவிலான பிரமாண்டமான விரிவாக்கம் ஏற்பட்டு வருகின்றது. இந்த நிலையில் உள்நாட்டுச் சந்தையின் நுகர்வின் பின்னர் பேரளவில் மிகைகள் தோன்றுகின்றன. எனவே, இந்த உபரி உற்பத்திகளுக்கு எளிதாக சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கென வர்த்தகத்தை தாராளமாக்குவதற்கான உந்துதல் தோன்றியது.

எவ்வாறிருப்பினும், உலகமயமாக்கல் தொழில்நுட்பத்தினால் மட்டும் நெறிப்படுத்தப் படவில்லை. தலையிடாக் கொள்கை யினையும் கட்டற்ற சந்தையினையும் வலி யுறுத்தும் புதிய தாராளவாத நாணயவாத பொருளாதாரத்தை நோக்கிய சித்தாந்த ரீதியான நகர்வினால் பொருளாதார உலகமயமாக்கலுக்கு உசிதமான சூழ்நிலை உருவாகியது. ஐக்கிய அமெரிக்கா, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம் என்பவற்றினால் முன்வைக்கப்படும் நவ தாராளவாதப் பொருளாதாரம், சந்தைச் சக்திகள் எவ்வித இடையூறுகளும் இன்றி தாராளமயமாக்கல், ஒழுங்குவிதி தளர்ப்பு, தனியார்மயமாக்கல் என்பவற்றுக்கூடாக இயங்குவதற்கு அனுமதிப்பதன் மூலமும், பொருளாதாரத்தில் அரசின் பங்கினை குறைத்து விடுவதன் மூலமும் பொருளாதார

செயல்திறனை விருத்தி செய்வதனை நோக்கமாக கொண்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து உதவி கோரும் வளர்முக நாடுகள் உதவி வழங்கலுக்கான நிபந்தனையாக இத்தகைய தாராளமய மாக்கல் கொள்கைகளை பின்பற்ற வேண்டும் என வற்புறுத்தப்படுகின்றன. உதாரணமாக, இந்தியா அதன் தீர்வை களை 1990 இல் 82 சதவீதமாக இருந்து 1997 இல் 30 சதவீதமாகக் குறைத்ததுடன், அதன் முதலீட்டுச் சட்டங்களையும் தாராளமய மாக்கியது. பொருளதாரங்கள் திறந்து வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக சர்வதேச வாணிபம், சுற்றுலாத் துறை, வெளிநாட்டு முதலீடு, தொழில்நுட்ப பரிமாற்றங்கள் என்பன பரவலான முறையில் பெருக்கம் கண்டிருப்பதுடன், மேலைய நாடுகளின் வாழ்க்கைப் பாணிகளும் கலாச்சாரங்களும் கூட வளர்முக உலகில் காலூன்றி வருகின்றன. கடந்த 50 வருட காலத்தின் போது உலகின் தலைக்குரிய சராசரி வருமானம் மும்மடங்குக்கும் மேல் அதிகரித்துள்ளது. நடுத்தர மட்ட மானிட அபிவிருத்தியை அனுபவித்து வரும் உலக மக்களின் சதவீதம் 1975 இல் 55 சதவீதமாக இருந்து, 1997 இல் 67 சதவீதமாக அதிகரித்திருந்தது. அதே வேளையில், 20 சதவீதமாக இருந்து வந்த தாழ்ந்த மட்ட மானிட அபிவிருத்தி 10 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது.

உலகமயமாக்கல் என்பது ஒரு புதிய விடயமல்ல. அது 16ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட கிழக்கிந்திய வர்த்தக கம்பெனி போன்ற வர்த்தக நிறுவனங்களின் ஸ்தாபிதத்துடன் ஆரம்பமானதுடன், ஏகாதிபத்தியவாதம் மற்றும் காலனித்துவம் என்பவற்றின் கீழ் புதிய உத்வேகத்தினை பெற்றுக் கொண்டது. பிற்பாடு 1971 இல் நிலையான செலாவணி விகிதத்தைக் கொண்ட பிரெட்டன்வூட்ஸ் அமைப்பின் வீழ்ச்சி மற்றும் 1990 கள் தொடக்கம் சோவியத் பாணியிலான சோஷலிச பொருளாதார அமைப்புக்களில் ஏற்பட்டு வந்த வீழ்ச்சி என்பவற்றை அடுத்து உலகமய மாக்கல் செயல்முறை மேலும் வலு வடைந்தது. இன்று இடம்பெற்று வரும் உலகமயமாக்கல் பழைய உலகமய மாக்கலில் இருந்து பல வழிகளிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. முன்னைய உலகமயமாக்கல் முறை பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றிலான வர்த்தகம், மூலப்பொருட்கள் மீதான முதலீடு என்பவற்றில் கவனம் செலுத்தியது. இன்றைய உலகமயமாக்கல் இவற்றுக்கு மேலதிகமாக அன்னியச் செலாவணி மற்றும் மூலதனச் சந்தைகள் என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. இணையம், ஊடக வலையமைப்புக்கள் மற்றும் கணிப்பொறி வழிப்பட்ட வடிவமைப்பு என்பன அதற்கு வசதி செய்து கொடுத்துள்ளன. இணையத்தின் உலகளாவிய விரிந்த இணைய தளம் 1990 இல் துவக்கி வைக்கப்பட்டதுடன், 1994 இல் இலவசமாக பிரவ்சர்கள் விநியோகிக்கப்பட்டன. இதனையடுத்து தகவல் தொடர்பு அமைப்பினை எவரும் இலகுவில் அணுகக்கூடிய ஒரு நிலைமை தோன்றியது. உலகமயமாக்கல் செயன்முறையை பல்தேசிய கூட்டுத்தாபனங்கள், உலக வர்த்தக நிறுவனம், சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி என்பன மேம்படுத்தி வருவதுடன், புதிய விதிமுறைகள், வர்த்தகம், சேவைகள் மற்றும் அறிவுசார் சொத்துக்கள் என்பன தொடர்பான பல்பக்க உடன்படிக்கைகள் அதற்கு ஆதரவாக இருந்து வந்துள்ளன.

## உலகமயமாக்கலின் பரிமாணம்

நாடுகளுக்கும் மக்களுக்குமிடையிலான பரஸ்பரத் தொடர்புகள் மற்றும் நாடுகளின் உலகளாவிய ரீதியிலான ஒருங்கிணைப்பு என்பன ஒருபோதும் இருந்திராத அளவுக்கு இப்பொழுது விரிவடைந்து வருகின்றன. பின்வரும் புள்ளிவிபரங்கள் இதனை தெளிவு படுத்துகின்றன:

1. உலக ஏற்றுமதிகள் 1970 களில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 17 சதவீதமாக இருந்து 1990 களில் 21 சதவீதமாக அதிகரித்தன.

2. வெளிநாட்டு நேரடி முதலீடு 1997 இல் 40,000 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்து வந்தது. இது 1970 களில் காணப்பட்ட அளவிலும் பார்க்க 7 மடங்கு அதிகரிப்பினை காட்டுகின்றது. கடல்கடந்த அளவில் நிறுவனங்களின் இணைப்பு மற்றும் கையகப்படுத்தல் என்பன வெளிநாட்டு நேரடி முதலீட்டினை தூண்டும் முக்கியமான உந்து சக்தியக இருந்து வந்துள்ளது. குறிப்பாக நிதிச்சேவைகள், காப்புறுதி, தொலைத்தொடர்பு மற்றும் ஊடகங்கள் போன்ற துறைகளில் 1997 இல் அத்தகைய 58 இணைப்புக்கள்-கையகப்படுத்தல்கள் ஏற்பட்டிருந்தன.

3. 1975 இல் 26,500 கோடி அமெரிக்க டொலர்களாக இருந்து வந்த சர்வதேச வங்கி கடனளிப்பு 1994 இல் 420,000 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருந்தது.

4 1970 களில் சுமார் 1000-2000 கோடி அ.டொலர்களாக இருந்து வந்த அன்னியச் செலாவணி சந்தைகளின் நாளாந்தப் புரள்வு 1998 இல் 1,50,000 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரித்திருந்தது.

5. 1980 இல் 26 கோடியாக இருந்து வந்த உலக சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 1994 இல் 59 கோடியாக அதிகரித்திருந்தது.

6. சுமார் 13-14.5 கோடி மக்கள் தமது சொந்த நாடுகளுக்கு வெளியே வேறு நாடுகளில் வாழ்ந்து தொழில் புரிந்து வருகின்றார்கள். இவர்கள் 1996 இல் தமது சொந்த நாடுகளுக்கு அனுப்பி வைத்த பணத்தின் மதிப்பு 5,800 கோடி அமெரிக்க டொலர்களாகும்.

7. சர்வதேச தொலைபேசி அழைப்புக்களில் செலவிடப்பட்ட நேரத்திலும் கணிசமான அளவிலான அதிகரிப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக 1990 இல் 3300 கோடி நிமிடங்கள் செலவிடப்பட்டன இது 1996 இல் 7000 கோடி நிமிடங்களாக அதிகரிக்கப் பட்டிருந்தது. 1998 இன் நடுப் பகுதியில் சுமார் 14 கோடி மக்கள் இணைய வசதிகளை பெற்றிருந்தார்கள். இந்த எண்ணிக்கை 2001 அளவில் 70 கோடியாக உயரும் என எதிர்பார்க்கப்பட்டது.

## சந்தையின் மேலாதிக்கம்

உலகமயமாக்கல் புதிய தொழில்நுட்பம், வெளிநாட்டு முதலீடு, வர்த்தக விஸ்தரிபபு, ஊடகங்கள் மற்றும் இணையத் தொடர்பு என்பவற்றுக்கு ஊடாக மனித மேம்பாட்டிற்கான பெருந்தொகையான வாய்ப்புக்களை வழங்கி வருவதுடன், வறுமையை ஒழித்து விழுமியங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் உலகளாவிய சமூகமொன்றை கட்டியெழுப்பி வருகின்றது. அதிகரித்த அளவிலான பண்டங்கள், சேவைகள், மூலதனம் மற்றும் அறிவு என்பவற்றின் தேச எல்லைகளைக் கடந்த பரவலான பாய்ச்சலானது பயனை அனுபவிக்கக் கூடியவர்களுக்கு முன்னெப் பொழுதும் இருந்திராத அளவிலான பெருஞ் செல்வத்தை ஈட்டிக் கொடுத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. வளர்முக உலகம் தொடர்பாக இதற்கான மிகச் சிறந்த உதாரணம் கிழக்காசியாவாகும். அப்பிராந்தியத்தைச் சேர்ந்த பல நாடுகள் 1997 வரையில் பிரமாண்டமான அளவிலான வளர்ச்சி மட்டங்களை சாதித்துக் கொண்டுள்ளன. ஏற்றுமதிப் பெருக்கம் மற்றும் கணிசமான அளவிலான வெளிநாட்டு மூலதனத்தின் உட்பாய்ச்சல் என்பனவே இந்த செழிப்பு நிலையை ஏற்படுத்தி வந்துள்ளன. எவ்வாறிருப்பினும், உலகமயமாக்கல் சந்தை விரிவாக்கத்தினாலேயே - வர்த்தகம், மூலதனம் மற்றும் தகவல் என்பவற்றுக்கான தேசிய சந்தைகளை திறந்து விடுவதனாலேயே- பெருமளவுக்கு நெறிப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலைமையில் அரசாங்கங்கள் சந்தைகள் மீது கட்டுப்பாட்டை வைத்துக் கொள்வது இயலாத காரியமாக இருந்து வருகின்றது. சந்தைகளை திறந்து விடுவதற்கென அல்லது கட்டற்ற சந்தைகளுக்கென கொள்கைகளையும் நிறுவனங்களையும் உருவாக்கிக் கொள்ளும் விடயத்திலேயே பெருமளவு கவனம் செலுத்தப்படுகின்றது. மக்கள் தொடர்பாகவும் அவர்களுடைய உரிமைகள் தொடர்பாகவும் அந்த அளவுக்குக் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. விழுமியங்களை பகிர்ந்து

கொள்ளும் ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்பும் முயற்சி வர்த்தக அக்கறைகளால் பின்னுக்குத் தள்ளப்படுகின்றது. போட்டிச் சந்தைகள் செயல்திறனை சாதித்துக் கொள்ள முடியும். ஆனால் அவை சமத்துவத்தை எடுத்து வரும் எனக் கூற முடியாது. உலகமயமாக்கல் சந்தை விரிவாக்கத்தின் செல்வாக்கினை கொண்டிருக்கும் வரையில் மானிட அபிவிருத்தியின் மீது அது நெருக்கடிகளை எடுத்து வரும் என்பதில் சந்தேகமில்லை. மனித அபிவிருத்திக்கு அவசியமான பல நடவடிக்கைகளும் பண்டங்களும் சந்தைக்கு வெளியிலிருந்து வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், உலகளாவிய போட்டியின் அழுத்தத்தினால் அவை உறிஞ்சிக் கொள்ளப்பட்டு வருகின்றன.

உலகமயமாக்கலின் சந்தை மேலாதிக்க நிலை எடுத்து வரக் கூடிய தாக்கங்கள் குறித்து ஐ.நா. மனித அபிவிருத்தி அறிக்கை (1999) பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"சந்தை சமூக மற்றும் அரசியல் தளங்களில் அதன் முழு ஆதிக்கத்தையும் படரச் செய்யும்பொழுது உலகமயமாக்கலின் வாய்ப்புக்களும் வெகுமதிகளும் ஏற்றத்தாழ்வான முறையில் பகிரப்படுகின்றன. ஒரு சிறு குழுவினரிடையேயும் ஒரு சில நாடுகளிடையேயும் கம்பனிகளிடையேயும் செல்வமும் அதிகாரமும் ஒன்று திரண்டு விடுகின்றன. ஏனைய நாடுகளும் மக்களும் புறமொதுக்கப்படுகின்றனர். சந்தை கைமீறிச் செல்லும் பொழுது ஸ்திரமற்ற நிலைமைகள் தோன்றுகின்றன. கிழக்காசியப் பொருளாதார நெருக்கடியும் அதன் உலகளாவிய தாக்கங்களும் இந்தப் பின்னணியிலேயே ஏற்பட்டன. சந்தையில் செயற்பட்டு வருபவர்களின் இலாப வேட்கை கட்டுமீறிச் செல்லும் சந்தர்ப்பங்களில் தார்மீக நெறிமுறைகள் மீறப்படுவதுடன், நீதி மற்றும் மனித உரிமைகள் என்பவற்றிற்கான மதிப்பும் பலியாகிவிடுகின்றது".

இன்று உலகமயமாக்கல் செயன்முறை தலைதெறிக்கும் வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. ஆனால், உலகமயமாக்கத்தின் விளைவாக பெருகி வரும் வாய்ப்புக்களை அனைத்து தரப்பு மக்களும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய ஒரு நிலைமை நிலவி வரவில்லை. உலகமயமாக்கலின் புதிய விதிமுறைகளும் அந்த விதிமுறைகளை உருவாக்கும் சந்தைகளும் உலகளாவிய சந்தைகளை ஒருங்கிணைப்பதிலேயே கவனம் செலுத்தி வருகின்றன. சந்தைகளினால் நிறைவு செய்து வைக்க முடியாத மக்களின் தேவைகள் இந்தப் பின்னணியில் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன. இச் செயன்முறை அதிகாரத்தை ஒரு சிலரின் கைகளில் ஒன்று குவியச் செய்துள்ளது. வறிய நாடுகளும் வறிய மக்களும் புறமொதுக்கப்பட்டு வருகின்றனர்.

பல்தேசியக் கம்பெனிகள்

முன்னர் குறிப்பிடப்பட்டது போல உலகமயமாக்கல் ரெுமளவுக்கு சந்தையினாலேயே உந்தித் தள்ளப்பட்டு வருகின்றது. சந்தையில் பல்தேசியக் கம்பெனிகள் முதன்மைப் பங்கினை வகித்து வருகின்றன. அந்த நிலையில் அவை உலகமயமாக்கலின் பிரதான முகவர்களாகவும் செயற்பட்டு வருகின்றன. தொழில்நுட்பத்தில் ஏற்பட்டு வந்திருக்கும் பாரிய முன்னேற்றங்கள், பிரமாண்டமான அளவிலான அளவுச் சிக்கனங்கள் என்பவற்றின் அடிப்படையில் தமது செயற்பாடுகளை விஸ்தரிக்க வேண்டிய தேவை அக்கம்பெனிகளுக்கு ஏற்பட்டுள்ளது. அவை உற்பத்தி செய்யக்கூடிய அனைத்துப் பண்டங்களையும் உறிஞ்சிக் கொள்ளக் கூடிய அளவுக்கு தேசிய சந்தை விசாலமானதாக இருந்து வரவில்லை. எனவே, தமது உபரி உற்பத்திகளை சந்தைப்படுத்துவதற்கு வேறு இடங்களை நாடிச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. அந்நிலையில் போட்டி தோன்றுவது தவிர்க்க முடியாததாகும். எனவே, இக்கம்பெனிகள் இடையறாது தமது எதிரிக் கம்பெனிகளை கையகப்படுத்துகின்றன. அல்லது அவற்றுடன் இணைந்து சந்தைகளை கைப்பற்றிக் கொள்வதற்காக போராடி வருகின்றன. செலவு அனுகூலங்களை பெற்றுக் கொள்ளும் பொருட்டு அவை தமது கைத்தொழில்களை புதிய இடங்களுக்கு எடுத்துச் செல்கின்றன. தமது சேமிப்புக்களை உயர் இலாபங்களை ஈட்டிக்கொள்ளும் நோக்கத்துடன் பணச் சந்தையில் முதலீடு செய்தும் வருகின்றன. தற்பொழுது உலக அளவில் சுமார் 53.000 பாரிய பல்தேசிய நிறுவனங்கள் இயங்கி வருவதுடன், அவை சுமார் 450,000 துணை நிறுவனங்களையும் கொண்டுள்ளன. உலக வர்த்தகத்தில் கிட்டத்தட்ட மூன்றில் இரண்டு பங்கு இந்த நிறுவனங்களின் கைகளிலேயே இருந்து வருகின்றது. குறிப்பாக தானிய உற்பத்தி, சுரங்கம் அகழ்தல் மற்றும் புகையிலை சந்தைகள் போன்ற பெரும்பாலான வளர்முக நாடுகளின் பண்டங்களை பொறுத்தவரையில் உற்பத்தி, விநியோகம் மற்றும் விற்பனை என்பன இந்த கம்பெனிகளின் ஆதிக்கத்தின் கீழேயே இடம்பெற்று வருகின்றன. உலகின் முன்னூறு முன்னணி கைத்தொழில் பல்தேசிய நிறுவனங்கள் மொத்த வெளிநாட்டு முதலீட்டில் 70 சதவீதத்துக்கு பொறுப்பாக இருந்து வருவதுடன், உலகின் உற்பத்திசார் சொத்துக்களின் இருப்பில் சுமார் 25 சதவீதத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டுள்ளன.

பல்தேசியக் கம்பெனிகள் சர்வ வியாபகமானவையாக காணப்படுகின்றன. கொக்கோகோலா, பெப்சி கோலா, மெக்டொனால்ட் ஹாம்பேர்கஸ், பிஸாஹட், ஷெல், கல்டெக்ஸ் முதலிய கம்பெனிகள் வியாபாரத் துறையில் கவனம் செலுத்தி வருகின்றன. ஹில்டன், இன்டர்கன்டினன்டல், ஹொலிடேயின் ஹோட்டல்கள், சிட்டி வங்கி, அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் வங்கி என்பனவை சேவைத் துறையில் ஈடுபட்டுள்ளன. யூனிலீவர், பிரிட்டிஷ் அமெரிக்கன் டுபாக்கோ, பாட்டா, மற்றும் நெஸ்லே ஆகிய கம்பெனிகள் பண்ட உற்பத்தித் துறையில் ஈடுபட்டு வரும் பல்தேசியக் கம்பெனிகளாக உள்ளன. இந்த கம்பெனிகளுக்கிடையில் நிலவி வரும் போட்டி. கம்பெனிகள் இணையும் நிலையையும் ஒன்றையொன்று கையகப்படுத்தும் நிலையையும் எடுத்து வருகின்றது. போயிங் மற்றும் மெக்டொனால்ட், எக்ஸல் மற்றும் மொபில் எண்ணெய்க் கம்பெனிகள் மைக்ரோசொட் மற்றும் அப்பிள் கணிப்பொறி நிறுவனங்கள் என்பவற்றுக்கிடையில் இத்தகைய இணைப்புக்களும் கையகப்படுத்தல்களும் ஏற்பட்டுள்ளன. மிகவும் தீவிரமான நிலையில் தொழில்நுட்ப மாற்றங்கள் ஏற்பட்டுவரும் ஒரு கால கட்டத்தில் நிறுவனங்கள் தமது போட்டித் திறனை தக்கவைத்துக் கொள்வதற்கும், தமது சந்தைப் பங்கினை அதிகரித்துக் கொள்வதற்கும் என கோடிக்கணக்கில் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இணைப்புக்கள் மற்றும் கையகப்படுத்தல்கள் என்பன போட்டியைக் குறைக்கும் அதே வேளையில், பிரமாண்டமான அளவிலான மூலவளங்களின் அனுகூலத்தை அவற்றுக்கு பெற்றுக் கொடுக்கின்றன. மேலும், வளர்முக உலகில் செயற்பட்டுவரும் பாரிய இலாபகரமான பல நிறுவனங்களை பல்தேசிய நிறுவனங்கள் நசுக்கியும் விழுங்கியும் வருகின்றன. உதாரணமாக, இந்தியாவில் தாராளமயமாக்கல் செயன்முறை தொடங்கியபொழுது பல்தேசிய நிறுவனங்கள் இந்திய கைத்தொழில் துறையின் மீது தமது மேலாதிக்கத்தை பரவச் செய்தன. பல உள்ளூர் கம்பெனிகளுடன் கூட்டுத்தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொண்டதன் மூலம் அவை அவற்றை கொள்வனவு செய்தன. உதாரணமாக, கொரியாவை சேர்ந்த டேவு கார் கம்பெனி இந்திய டிசிஎம் கார் கம்பெனியின் மீதான தனது பங்குகளை அதிகரித்துக் கொண்டது. பிரிட்டனைச் சேர்ந்த காஸ்டன் தொலைத்தொடர்பு நிறுவனம் மோடி குடும்பத்துக்கு உரித்தான தொலைக்காட்சியை கொள்வனவு செய்தது. கொக்கோகோலா மற்றும் பெப்சி கோலா ஆகிய கம்பெனிகள் உள்ளூர் மென்பானக் கம்பெனிகளை கையகப்படுத்திக் கொண்டன. இந்தப் பின்புலத்தில், தெரிவு செய்யும் ஓர் அணுகுமுறையை பின்பற்றுவதன் மூலம் உள்நாட்டுக் கைத்தொழில்களை பாதுகாத்துக் கொள்வதற்கென சுதேசி உத்தியொன்று பின்பற்றப்படுமென இந்தியப் பிரதமர் அறிவித்திருந்தார்.

கிழக்காசிய நாணய நெருக்கடியும் அதனை அடுத்து உதவி வழங்குவதற்கான ஓர் நிபந்தனையாக சர்வதேச நாணய நிதியம் முழு அளவிலான தாராளமயமாக்கல் கொள்கைகளை விதித்துரைத்ததும் சிரமத்தில் இயங்கி வந்த ஆசிய

நிறுவனங்களை அடிமாட்டு விலைக்கு வாங்குவதற்கான ஓர் அரிய வாய்ப்பினை பல்தேசிய நிறுவனங்களுக்கு வழங்கியது. இந்த அடிப்படையில் இணைப்புக்களும் கையகப்படுத்தல்களும் ஏற்பட்டன. இதற்கான உதாரணங்கள்: BASF (ஜேர்மனி) கம்பெனி மற்றும் டிசெங்க் (கொரியா), கொமர்ஸ் பாங்க் (ஜேர்மனி) மற்றும் கொரியாவின் செலாவணி வங்கி, பொஸ்ச் (ஜேர்மனி) மற்றும் மன்டோ மசினிரி கோர்ப்பரேஷன் (கொரியா), வொல்வோ (சுவீடன்) செம்சங் இன்டஸ்ரீஸ் (கொரியா), ABN AMRO வங்கி (நெதர்லாந்து) பேங்ப் ஏஷியா (தாய்லாந்து).

## அதிகாரமும் செல்வாக்கும்

மிகப் பெரிய பல்தேசியக் கம்பெனிகள் பெரும்பாலான வளர்முக நாடுகளிலும் பார்க்க அதிக அளவிலான வளங்களையும் செல்வாக்கினையும் தம்வசம் கொண்டுள்ளன. 1994 இல் ஜெனரல் மோட்டர்ஸ் நிறுவனத்தின் மொத்த வருடாந்த விற்பனைகள் 16400 கோடி அ.டொ.களாக இருந்து வந்தன. இது தாய்லாந்து (15400 கோடி அ.டொ.), சவுதி அரேபியா (13000 கோடி அ.டொ.) மற்றும் மலேசியா (9800 கோடி அ.டொ.) என்பவற்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தி அளவிலும் பார்க்க மிகைத்துக் காணப்பட்டது. அவை தமது செயற்பாடுகளை மிகவும் பிரமாண்டமான அளவில் விஸ்தரித்துச் சென்றுள்ளன. உதாரணமாக, ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த உணவு விற்பனை நிறுவனமான மெக்டொனால்ட்ஸ் 106 நாடுகளில் சுமார் 22,000 க்கு மேற்பட்ட உணவகங்களை கொண்டுள்ளது. அவை எந்த அளவுக்கு சக்தி வாய்ந்த நிறுவனங்களாக இருந்து வருகின்றன என்றால் தாம் இயங்கி வரும் ஒரு சில நாடுகளில் அரசாங்கங்களைக்கூட மாற்றி அமைக்கும் வல்லமையை - குறிப்பாக மத்திய அமெரிக்க மற்றும் தென்னமெரிக்க பிராந்தியத்தில் - அவை கொண்டுள்ளன. உதாரணமாக, யுனைட்புருட் கம்பெனி என்ற பல்தேசிய நிறுவனம் இலத்தீன் அமெரிக்காவில் தனது அக்கறைகளுக்கு முரணாக செயல்பட்டு வந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கும் தனக்கு அனுசரணையான அரசாங்கத்தை ஆட்சிபீடத்தில் ஏற்றுவதற்கும் தனது செல்வாக்கைப் பயன்படுத்தியது. இலத்தீன் அமெரிக்காவின் வாழைப்பழ ஏற்றுமதி வர்த்தகம் பெருமளவுக்கு அமெரிக்க கம்பெனிகளின் கைகளிலேயே இருந்து வருகின்றது. மேலும், இத்தகைய கம்பெனிகள் புதிய சந்தைகளை திறந்துவிடச் செய்வதற்கென அரசாங்கங்களிடம் தமது செல்வாக்கை பிரயோகித்து வருகின்றன. உதாரணமாக, மோட்டரோலா கம்பெனி தனது செலூளர் தொலைபேசிகளுக்கென ஜப்பானில் ஒரு சந்தைப் பங்கை பெற்றுக் கொள்வதற்கென ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் மீது செல்வாக்கை பிரயோகித்தது.

பல்தேசிய நிறுவனங்கள் பிரமாண்டமான அளவைக் கொண்டிருப்பதுடன், உலகளாவிய ரீதியில் வலையமைப்புக்களையும் கொண்டுள்ளன. அதன் காரணமாக அவை (தாம் இயங்கி வரும் நாடுகளின்) தேசிய சட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் மீறக்கூடிய ஆற்றலையும் கொண்டுள்ளன. உயர் வரி விகிதத்தைக் கொண்டிருக்கும் ஒரு நாட்டிலிருந்து தாழ்ந்த வரி விகிதங்களை கொண்டிருக்கும் ஒரு நாட்டுக்கு இலாபங்களை எடுத்துச் செல்வதன் மூலம் அவற்றால் வரிக் கடப்பாடுகளிலிருந்தும் தப்பிக் கொள்ள முடியும். குறிப்பிட்ட ஒரு நாட்டில் தாம் ஈட்டும் இலாபத்தை குறைத்துக் காட்டுவதற்காக அல்லது மறைத்துக் கொள்வதற்காக துணை நிறுவனங்களுக்கூடாக இறக்குமதி செய்யப்படும் உள்ளீடுகளின் பெறுமதியை அவற்றால் மிகைத்த அளவில் காட்ட முடியும். அல்லது ஏற்றுமதிகளை குறைத்துக் காட்டவும் முடியும். தமது பண்டங்களின் விலை அதிகரிப்புக்களை நியாயப்படுத்திக் கொள்ளும் விதத்தில், இதே விதத்தில் இறக்குமதி விலைகளை அவற்றால் திரித்துக் காட்டவும் முடியும். தமது தொழிற்சாலைகளை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப் போவதாக கூறி அரசாங்கங்களை அச்சுறுத்துவதன் மூலம் தமது நலன்களுக்கு உசிதமான நிலையில் கொள்கைகளை வகுப்பதற்கு அவற்றை நிர்ப்பந்திக்க முடியும்.

உலகச் சந்தைகளிலும் உலகச் சந்தை விலைகளிலும் பல்தேசிய கம்பெனிகளின் ஆதிக்கமே நிலவி வருகின்றது. உலகின் பத்து முன்னணி பல்தேசிய நிறுவனங்கள் 1998 இல் தொலைத் தொடர்பு துறையின் சந்தைப் பங்கில் 86 சதவீதத்தையும், பீடை கொல்லிகளின் சந்தைப் பங்கில் 85 சதவீதத்தினையும் தம்வசம் வைத்துக் கொண்டிருந்தன. அதே போல கணிப்பொறிகள் (70 வீதம்), கால்நடை மருந்துகள் (60 வீதம்), மருந்துப் பொருட்கள் (35 வீதம்) மற்றும் வர்த்தக விதைகள் (32 வீதம்) என்பவற்றுக்கான சந்தைகளிலும் கணிசமான அளவிலான பங்கினை அவை வைத்திருந்தன. வான் பரப்பு, மின்சார உபகரணங்கள், இலத்திரனியல் பாகங்கள் மற்றும் கணிப்பொறி மென்பொருட்கள் போன்ற முக்கியமான துறைகளின் உலகச் சந்தையில் சுமார் அரைவாசிப் பங்கினை ஐந்து பாரிய நிறுவனங்கள் கட்டுப்படுத்தி வருகின்றன. அதே போல மென்பானங்கள் குடிவகைகள் மற்றும் புகையிலை என்பவற்றிலும் உலகெங்கிலும் ஒரு சில கம்பெனிகளின் கைகளே ஓங்கியுள்ளன. உலக தேயிலைச் சந்தையிலும் கூட ஒரு சில பல்தேசிய நிறுவனங்களின் ஆதிக்கமே கொடிகட்டிப் பறக்கின்றது. லிப்டன், புருக் பொன்ட், புஷல்ஸ் (அவுஸ்திரேலியா), ஸலாதா (கனடா) மற்றும் குவலிட்டி ட (நியுஸிலாந்து) ஆகிய நிறுவனங்களை கையகப்படுத்திக் கொண்டுள்ள யூனிலீவர் குழுமம் உலகத் தேயிலை வர்த்தகத்தில் சுமார் 35 சதவீதத்தை கட்டுப்படுத்தி வருகின்றது. யூனிலீவர் மற்றும் லைய்ட் லியோன் ஆகிய நிறுவனங்கள் பிரிட்டிஷ் தேயிலைச் சந்தையில் 53 சதவீதத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளன. விளம்பரத் துறை இப்பொழுது 43,500 கோடி அ.டொ. பெறுமதியான ஒரு வணிகத் துறையாக இருந்து வருவதுடன், விளம்பரத் தொழிலில் பெரும்பகுதி ஒரு சில பல்தேசிய நிறுவனங்களினாலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிறுவனங்கள் தமது பண்டங்களுக்கென கிராக்கியை ஏற்படுத்துவதற்கும் அவற்றின் விற்பனையை பெருக்குவதற்குமென விளம்பரங்களை உருவாக்கி வருகின்றன. இது தவிர வளர்ச்சி அடைந்த நாடுகள் - அதாவது அவற்றின் பல்தேசிய நிறுவனங்கள் - உலகின் வணிக உரிமைகளின் 97 சதவீதத்தை தம்வசம் வைத்துக் கொண்டுள்ளன.

எனவே, இந்தச் சூழ்நிலையில் உலகச் சந்தை இலட்சிய ரீதியான ஒரு போட்டி இடம் பெறும் ஓர் இடமாக இயங்கி வரவில்லை. இங்கு விற்பனையாளர்களும் சரி கொள்வனவாளர்களும் சரி சமமாக பேரம் பேசும் சக்தியை கொண்டிருக்கவில்லை. பல்தேசிய நிறுவனங்கள் இணைப்புக்கள் மற்றும் கையகப்படுத்தல் என்பவற்றுக்கூடாக மேலும் மேலும் ஜாம்பவான்களாக உருவாகும் நிலையில் உலகச் சந்தைகள் மற்றும் உலக விலைகள் என்பவற்றின் மீதான அவற்றின் செல்வாக்கு இடையறாது அதிகரித்து செல்லும். தனியார்மயமாக்கல் இயல்பாகவே போட்டிக்கு வழிகோலுவதில்லை. மாறாக அது ஏகபோக நிலைமைக்கு வழிகோலுகின்றது. கொக்கோ கோலா நிறுவனம் ஐரோப்பிய யூனியனின் போட்டி தொடர்பான சட்டவிதிகளை மீறும் விதத்தில் செயற்பட்டுள்ளதா என்பதனை கண்டறிவதற்கென ஐரோப்பிய சமூகம் பிரிட்டன், ஜேர்மனி, அவுஸ்திரேலியா மற்றும் டென்மார்க் போன்ற நாடுகளில் அமைந்திருந்த கொக்கோகோலா நிறுவனங்களில் திடீர் சோதனைகளை நடாத்தியது. அதேபோல இந்திய விவசாயிகள் குறிப்பிட்ட ஒரு நிறுவனம் பருத்தி விதைகளில் ஆதிக்கம் செலுத்தி வருவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் உயிரியல் ரீதியாக திருத்தி அமைக்கப்பட்ட மொன்சான்டோ பருத்தி விதைகளை தீயிட்டுக் கொளுத்தினர்.

தொழில்நுட்பம் பல்தேசிய நிறுவனங்களின் கைகளிலேயே தொடர்ந்தும் ஒன்றுதிரண்டு வருகின்றது. அவை ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நிர்ணயித்துக் கொள்வதுடன், தமது கண்டுபிடிப்புக்களை ஆக்க உரிமை தொடர்பான சட்ட விதிகளின் பாதுகாப்புக்களின் கீழ் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டுள்ளன. உலக வர்த்தக நிறுவனத்தின் புலமைசார் சொத்து

உரிமைகளின் வர்த்தகம் தொடர்பான அம்சங்கள் (டிரிப்ஸ் உடன்படிக்கை) இந்நிறுவனங்கள் உலகளாவிய சந்தையில் தமது ஆதிக்கத்தை தக்கவைத்துக் கொள்வதற்கு வாய்ப்பினை அளித்துள்ளன. புதிய ஆக்க உரிமைச் சட்டங்கள் உள்நாட்டு மக்களின் பாரம்பரிய அறிவுக்கு எத்தகைய மதிப்பையும் அளிப்பதில்லை. உண்மையிலேயே அவர்களுடைய அறிவுத்திறன் மெதுவாக களவாடப்பட்டு வருகின்றது. பாஸ்மதி அரிசி, மஞ்சள், மிளகாய் மற்றும் வேம்பு ஆகியவற்றுக்கான ஆக்க உரிமையை ஐக்கிய அமெரிக்கா பெற்றுக் கொண்டிருப்பது இதற்கான சிறந்த உதாரணமாகும். பல்தேசிய நிறுவனங்களின் புதிய தொழில்நுட்பங்கள் அவற்றுக்கு பணம் செலுத்தக் கூடியவர்களுக்கே கிடைக்கின்றது. வறிய மக்களுக்கு அவை கிடைப்பதில்லை.

### கைத்தொழில்களை வளர்முக நாடுகளுக்கு எடுத்துச் செல்லல்

உலகின் மிகப் பெரிய 300 நிறுவனங்கள் மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டின் 70 சதவீதத்தினை தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளன என்பதனை ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தோம். வெளிநாட்டு நேரடி முதலீடு உலக வெளியீட்டிலும் பார்க்க நான்கு மடங்கு அதிகமாக அதிகரித்துச் சென்றுள்ளது. குறிப்பாக வளர்முக நாடுகளில் ஊழியச் செறிவு மிகுந்த துறைகளிலேயே (மலிவான ஊழியச் செலவு அனுகூலத்தை பயன்படுத்திக் கொள்ளும் பொருட்டு) நேரடி முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நவீன தொடர்பாடல் வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பன பல்தேசிய நிறுவனங்கள் வெவ்வேறு பூகோளப் பிராந்தியங்களில் தமது உற்பத்தி தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கான வசதிகளையும் அவற்றை ஒழுங்கிணைப்பதற்கான வசதிகளையும் வழங்கியுள்ளன. உதாரணமாக, மட்சுகிடா மின்சாரக் கம்பெனி அதன் பல்வேறு பாகங்களையும் செவிப்புல சாதனங்களின் துணை உறுப்புக்களையும் சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்து வருகின்றது. அவை பின்னர் வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கென இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் போன்ற நாடுகளில் ஒன்றாக இணைக்கப்படுகின்றன. வளர்ச்சி அடைந்த நாடுகள் வளர்முக நாடுகளில் நிலவி வரும் மலிவான ஊழிய விகிதங்களை பயன்படுத்தி சுமார் 58500 கோடி அ.டொ. மதிப்பு மிக்க பொருட்களை வெளியில் உற்பத்தி செய்து வருகின்றன.

அட்டவணை 1

| பல்தேசிய நிறுவனங்கள் | |
|---|---|
| நாடு | இணை வெளிநாட்டு நிறுவனங்களின் எண்ணிக்கை-1995 |
| சீனா | 15.966 |
| சிங்கப்பூர் | 10.708 |
| தாய்வான் | 5.733 |
| தென் கொரியா | 3.671 |
| ஹொங்கொங் | 2.628 |
| பிரேசில் | 7,110 |
| இந்தியா | 926 |
| இலங்கை | 139 |

பல்தேசிய நிறுவனங்கள் துணை நிறுவனங்களை உருவாக்கிக் கொள்வதன் மூலமும் பாகங்கள் மற்றும் துணை உறுப்புக்கள் என்பவற்றுக்கான உப ஒப்பந்தங்களை வழங்குவதன் மூலமும் தமது செயற்பாடுகளை உலகமயமாக்கி வருகின்றன. மேர்சடிஸ் பென்ஸ் கம்பெனி இதற்கான ஒரு நல்ல உதாரணமாகும். நல்ல சந்தை வாய்ப்புக்களை கொண்டிருக்கும் இந்தியா, இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து மற்றும் வியட்னாம் போன்ற நாடுகளில் அது உற்பத்திக் கூடங்களை ஆரம்பித்திருப்பதுடன், கார்களை முழுமையாக இணைப்பதற்கென, உலகெங்கிலும் செயற்பட்டுவரும் துணை நிறுவனங்களிலிருந்தும் மற்றும் உப ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் அது பாகங்களையும் துணை உறுப்புக்களையும் இறக்குமதி செய்து வருகின்றது. கம்பெனியின் சொந்த தொழிற்சாலை ஒரு காரின் 40 வீதத்தை - அதாவது இயந்திரம், கியர்பெட்டி, அச்சுக்கள் மற்றும் உடல்பாகம் முதலியவற்றை - உற்பத்தி செய்வதுடன் ஏனைய பாகங்கள் வெளியிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. எனவே, பென்ஸ் கார் உண்மையிலேயே ஒரு பல்தேசிய காராகவே இருந்து வருகின்றது. இலங்கையில் இயங்கிவரும் பெரும்பாலான ஆடைத் தொழிற்சாலைகள் ஆடைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கும் பல்தேசிய நிறுவனங்களின் வழங்குனர்களாக அல்லது உப ஒப்பந்தக்காரர்களாகவே இயங்கி வருகின்றன.

சிங்கப்பூரை உதாரணமாக எடுத்து நோக்குவோம். அங்கு சுமார் 100,000 தொழிலாளர்கள் அமெரிக்காவுக்கு சொந்தமான தொழிற்சாலைகளில் அமெரிக்காவுக்கு அனுப்பி வைப்பதற்கென இலத்திரனியல் உறுப்புக்களை தயாரித்துக் கொண்டிருக்கின்றனர். துணை நிறுவனங்களினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் ஏற்றுமதி சிங்கப்பூர் போன்ற நாடுகளில் கணிசமான அளவில் காணப்படுகின்றது. 15ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் முதலாளித்துவத்தின் எழுச்சி மற்றும் கடல்கடந்த விஸ்தரிப்பு என்பவற்றை அடுத்து பட்டயம் பெற்ற பல கம்பெனிகள் உருவாக்கம் பெற்றன. அவை தேசிய பொருளாதாரங்களை சர்வதேச ரீதியில் ஒருங்கிணைக்கும் பணியை மேற்கொண்டன. இன்று அந்தக் காரியத்தை பல்தேசிய நிறுவனங்கள் பொறுப்பேற்றுக் கொண்டுள்ளன. கடந்த காலத்தில் போலல்லாமல் இன்று இந்நிறுவனங்களுக்கு - அவை எடுத்துவரும் மூலதனம், தொழில்நுட்பம் மற்றும் சந்தைப்படுத்தல் நுட்பங்கள் என்பவற்றிற்கு - செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டு வருகின்றது. உண்மையிலேயே பல வளர்முக நாடுகள் பல்தேசிய நிறுவனங்களை கவர்ந்திழுப்பதற்கு உசிதமான ஒரு சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு தாராளமயமாக்கலிலும் ஒழுங்குவிதி தளர்ப்பிலும் தனியார்மயமாக்கலிலும் ஈடுபட்டு வருகின்றன. அது மட்டுமன்றி நலன்புரிச் செலவுகளையும் வரவுசெலவு பற்றாக்குறைகளையும் அவை குறைத்து வருகின்றன. இந்த நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாணய நிதியம் ஊக்கத்தினையும் உற்சாகத்தினையும் வழங்கி வருகின்றது. இந்நடவடிக்கைகள் வெளிநாட்டு முதலீட்டினை குறிப்பாக ஏற்றுமதி அடிப்படையிலான கைத்தொழில்களை அதிகரிக்கும் என்றும், ஏற்றுமதிகளை பெருக்கும் என்றும், பொருளாதார வளர்ச்சியை எடுத்து வரும் என்றும், மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தும் என்றும் கருதப்படுகின்றது. எவ்வாறிருப்பினும், உலகமயமாக்கல் செயன்முறையின் போதும் அதிகாரம் தேசிய அரசாங்கங்களின் கைகளிலிருந்து பல்தேசிய நிறுவனங்களின் கைகளுக்கும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வர்த்தக நிறுவனம் போன்ற அமைப்புகளின் கைகளுக்கும் நகர்ந்து செல்வதனால் அது தேசிய பொருளாதார இறைமையை அரித்துச் சென்று விடுகின்றது. சந்தையின் செயல்திறன் அதன் முக்கிய குறியாக இருந்து வருவதனால் சந்தை செழித்தோங்குவதற்கு உசிதமான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதிலேயே அது முழுக்க முழுக்க கவனம் செலுத்துகின்றது. மக்கள் நீண்ட ஆரோக்கியமான வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதில் அது அக்கறை கொண்டிருக்கவில்லை.

### ஏற்றத்தாழ்வான வாய்ப்புக்களும் ஏற்றத்தாழ்வான அனுகூலங்களும்

உலகமயமாக்கல் இன்று பிரதானமாக கட்டற்ற சந்தைச் சக்திகள் மற்றும் வர்த்தக நலன்கள் என்பவற்றினால் உந்தித் தள்ளப்பட்டு வருகின்றன. அது உலக நாடுகளுக்கு வளர்ச்சிக்கும் அனுகூலங்களின் நியாயமான பகிர்வுக்குமான வாய்ப்புக்களை வழங்குவதில் தோல்வி கண்டுள்ளது. அது உண்மையிலேயே ஒரு சில நாடுகளுக்கு - வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கும் புதிதாக தொழில்மயமாகி வரும் ஒரு சில வளர்முக நாடுகளுக்கும் - வாய்ப்புக்களையும் அனுகூலங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளது என்பதில்

சந்தேகமில்லை. ஆனால், அது பெரும்பாலான வளர்முக நாடுகளை உதாசீனப் படுத்தியுள்ளது. வளர்ச்சி அடைந்த நாடுகள் அல்லது கைத்தொழில் நாடுகள் என்பனவும் அந்நாடுகளில் வாழும் பெரும் செல்வந்தர்களும் உலகமயமாக்கலின் மூலம் உச்ச மட்ட அனுகூலங்களை ஈட்டிக் கொண்டுள்ளனர். மிக வறிய வளர்முக நாடுகளும் அந்நாடுகளில் வாழ்ந்து வரும் வறிய சமூகப் பிரிவினரும் பெரும் பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றன. உதாரணமாக, உயர் வருமானங்களை ஈட்டிவரும் கைத்தொழில் நாடுகளில் வாழ்ந்து வரும் உலகக் குடித்தொகையினரில் ஐந்தில் ஒரு வீதத்தினரான மக்கள் பின்வரும் அனுகூலங்களை அனுபவித்து வருகின்றனர்:

- உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (வெளியீடு அல்லது வருமானம் என்பவற்றின்) 86 வீதத்தைக் கொண்டுள்ளனர்.
- உலக ஏற்றுமதிச் சந்தையில் 82 வீதத்தை வைத்துக் கொண்டுள்ளனர்.
- உலகின் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் 68 வீதத்தை பெற்று வருகின்றனர்.
- உலகின் மொத்த தொலைபேசி இணைப்புக்களின் 74 வீதத்தைக் கொண்டுள்ளனர்.
- இணையத்தின் வசதிகளை உபயோகிப்பவர்கள் 88 வீதமாக இருந்து வருகின்றனர்.

உலகின் மிக வறிய நாடுகளில் வாழ்ந்து வரும் வாழ்க்கைத் தரத்தின் மிகவும் தாழ்ந்த மட்டங்களில் உள்ள ஐந்தில் ஒரு பகுதியினர் வருமானம், ஏற்றுமதிகள், வெளிநாட்டு நேரடி முதலீடுகள் மற்றும் தொலைபேசிகள் போன்ற ஒவ்வொரு துறைகளிலும் ஒரு சதவீதத்தை மட்டுமே வைத்துள்ளனர். உலகின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பனவும் பெருமளவுக்கு வளர்ச்சி அடைந்த நாடுகளின் கைகளிலேலே இருந்து வருகின்றன. 1993 இல் 10 வளர்ச்சி அடைந்த நாடுகள் உலக ஆராய்ச்சியில் 84 சதவீதத்தை மேற்கொண்டு வந்தன. இதில் வியப்பூட்டும் மற்றொரு விஷயம் 85 நாடுகளில் வாழ்ந்து வரும் மக்களின் நிலை 10 வருடங்களுக்கு முன்னர் இருந்ததிலும் பார்க்க மோசமடைந்திருப்பதாகும். உலக மக்களில் மிக வறியவர்களான 20 சதவீதத்தினர் வளர்முக நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் 1960 களில் உலக வருமானத்தில் 2.3 சதவீத்தினை பெற்று வந்தனர். இது 1997 இல் 1.3 சதவீமாக வீழ்ச்சி கண்டிருந்தது. குறிப்பாக ஆபிரிக்கா உலகமயமாக்கலிலிருந்து எத்தகைய அனுகூலங்களையும் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. உண்மையிலேயே கடந்த 25 வருட காலத்தில் சராசரி ஆபிரிக்க குடும்பமொன்றின் நுகர்வு 20 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது. 1983-1993 தசாப்தத்தில் மட்டும் போசாக்கற்ற சிறுவர்களின் அளவு 5 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாக அதிகரித்துச் சென்றுள்ளது.

### ஏற்றத்தாழ்வான வர்த்தகம் முதலீடு மற்றும் வளர்ச்சி

வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் ஏற்றத்தாழ்வற்ற முறையில் வழங்கப்படாமையின் விளைவாக ஏற்றத்தாழ்வான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. ஒரு சில நாடுகள் உயர் வளர்ச்சி விகிதங்களை சாதித்துக் கொண்டிருக்கும் அதேவேளையில், வேறு சில நாடுகள் தாழ்ந்த அல்லது எதிர்க்கணிய வளர்ச்சியை அடைந்திருந்தன. 1980-1997 காலப் பிரிவின்போது 33 நாடுகள் மட்டுமே தலைக்குரிய வருமான மட்டத்தில் 3 சதவீதத்துக்கு கூடிய வளர்ச்சியை சாதித்துக் கொண்டிருந்தன. 79 நாடுகள் 3 சத வீதத்துக்கு குறைவான சராசரி வளர்ச்சியை பதிவு செய்திருந்ததுடன், இவற்றில் 59 நாடுகள் ஆபிரிக்காவை சேர்ந்தவைகளாக இருந்தன. பொருளாதார வளர்ச்சியுடன் இணைந்த விதத்தில் பல நாடுகளில் மொ.உ.உ வில் விவசாயத் துறையின் பங்கு வீழ்ச்சி கண்டிருந்தது. வர்த்தகம் மற்றும் வெளிநாட்டு முதலீடு என்பவற்றில் ஏற்றதாழ்வான விதத்தில் பெருக்கம் ஏற்பட்டிருந்ததன் காரணமாகவே ஏற்றத்தாழ்வான பொருளாதார வளர்ச்சி தோன்றி இருந்தது. 1980-1996 காலப் பிரிவின் போது பொருட்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் ஏற்றுமதிகளின் சராசரி வருமான வளர்ச்சி 15 நாடுகளில் மட்டுமே 15 சதவீதத்துக்கு மேற்பட்டதாக காணப்பட்டது. அது 43 நாடுகளில் 4 சதவீதத்துக்கும் 10 சதவீதத்துக்கும் இடையிலான வீச்சிலும் 55 நாடுகளில் 5 சதவீதத்துக்கு குறைவாகவும் இருந்து வந்தது. 1965-1996 காலப் பிரிவின் போது சராசரி வருடாந்த ஏற்றுமதி வளர்ச்சி கிழக்காசியாவில் 6.2 சதவீதமாகவும், இலத்தீன் அமெரிக்காவில் 5.2 சதவீதமாகவும், உப சகாரா ஆபிரிக்காவில் 2.1 சதவீதமாகவும் இருந்து வந்தது. உலக ஏற்றுமதிகளில் ஆபிரிக்காவின் பங்கு வீழ்ச்சி கண்டுள்ளது. மறுபுறத்தில், வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகள் ஒரு சில நாடுகளில் மட்டுமே ஒன்றுதிரண்டு காணப்படுகின்றன. அதாவது, 1996 இல் வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளில் சுமார் 80 சதவீதத்துக்கும் மேற்பட்ட அளவை 15 நாடுகளே மேற்கொண்டு வந்திருந்தன. இந்நாடுகளே உலகமயமாக்கலின் விளைவாக பெருமளவுக்கு பயனடைந்துள்ளன.

வர்த்தகத்தைப் போலவே வெளிநாட்டு நேரடி முதலீடும் ஏற்றத்தாழ்வான விதத்திலேயே பகிரப்பட்டுள்ளது. 1997 இல் மொத்த உலக வெளிநாட்டு முதலீடு சுமார் 40,000 கோடி அ.டொலர்களாக இருந்து வந்தது. இதில் சுமார் 15,000 கோடி அ.டொ. (அல்லது 37 வீதம்) வளர்முக நாடுகளுக்குச் சென்றது. அதே வேளையில் சுமார் 23,000 கோடி அ.டொ. அல்லது 58 வீதம் வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கு சென்றது. வர்த்தகத்தைப் போலவே வெளிநாட்டு நேரடி முதலீடும் ஒரு சில வளர்முக நாடுகளிலேயே திரண்டிருந்தன. 1990 களில் வளர்முக நாடுகளாலும் நிலைமாற்றுப் பொருளாதாரங்களினாலும் பெற்றுக் கொள்ளப்பட்ட நேரடி முதலீட்டில் சுமார் 80 சதவீதத்தினை 20 நாடுகள் (முக்கியமாக சீனா) பெற்றுக் கொண்டன. 1990 ஆம் வருடம் தொடக்கம் சுமார் 100 நாடுகள் ஆண்டு தோறும் 10 கோடி அ.டொ.களுக்கும் குறைவான நேரடி வெளிநாட்டு முதலீடுகளையே பெற்றுக் கொண்டுள்ளன. ஒன்பது நாடுகளைப் பொறுத்தவரையில் இத்தகைய முதலீடுகளின் பாய்ச்சல் எதிர்க்கணிய நிலையிலேயே இருந்து வந்துள்ளது. 1996 இல் மட்டும் வளர்முக நாடுகளை நோக்கிய மொத்த வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 95 சதவீதம் 26 நாடுகளுக்கே சென்றது. ஏனைய 140 வளர்முக நாடுகள் மிகுதி 5 சதவீதத்தை தமக்குள் பகிர்ந்துகொள்ள வேண்டியுள்ளது. வெளிநாட்டு மூலதனத் தில் பெரும்பகுதியை கிழக்காசியா ஈர்த்துக் கொண்டது. அதேவேளையில், ஆபிரிக்காவுக்கு கிடைத்தது ஒரு சிறுதுளி மட்டுமே யாகும். ஆபிரிக்க நாடுகள் வெளிநாட்டு மூலதனத்துக்கு பல்வேறு சலுகைகளையும் வழங்கியதுடன் தமது வர்த்தகம், முதலீடு போன்றவற்றை தாராளமயப்படுத்தும் 260 இருதரப்பு முதலீட்டு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டிருந்தன. ஆனால், வெளி

அட்டவணை 2

சராசரி வருடாந்த வளர்ச்சி விகிதங்கள் 1965 - 1996 சதவீதம்

| பிராந்தியம் | மொதேஉ மொத்தம் | மொதேஉ தலைக் குரிய | மொத்த உள்நாட்டு முதலீடு | பண்டங்கள் சேவைகள் ஏற்றுமதி | மொதேஉ வின் விகிதமாக வெளிநாட்டு நேரடி முதலீடு 1968 | மொதேஉ வின் விகிதமாக வெளிநாட்டு நேரடி முதலீடு 1996 |
|---|---|---|---|---|---|---|
| கிழக்காசியா | 7.4 | 5.5 | 9.4 | 8.8 | 0.4 | 4.0 |
| தென்னாசியா | 4.6 | 2.2 | 5.3 | 6.2 | 0.1 | 0.7 |
| இலத்தீன் அமெரிக்கா | 3.3 | 1.1 | 2.0 | 5.2 | 0.8 | 2.1 |
| உபசகாரா ஆபிரிக்கா | 2.7 | -0.2 | -1.1 | 2.1 | 0.0 | 1.1 |
| அனைத்து வளர்முக நாடுகளும் | 3.8 | 1.6 | - | - | 0.2 | 2.2 |
| உலகம் | 3.1 | 1.2 | 3.1 | 5.8 | 0.6 | 1.1 |

நாட்டு நேரடி முதலீட்டில் ஆபிரிக்காவுக்கு கிடைத்த பங்கு 1990 இல் 0.4 சதவீதத்திலிருந்து 1996 இல் 0.6 சதவீதமாக மட்டுமே அதிகரித்திருந்தது. 1997 இல் உலகில் வெளிநாட்டு நேரடி முதலீட்டில் 22 சதவீதத்தை ஆசியாவும், 14 சதவீதத்தை இலத்தீன் அமெரிக்காவும், 1 சதவீதத்தை ஆபிரிக்காவும் பெற்றுக் கொண்டன.

கிழக்காசியாவுடன் ஒப்பிடும் பொழுது தென்னாசிய நாடுகள் சார்பு ரீதியில் சிறு அளவிலான வெளிநாட்டு மூலதனத்தை மட்டுமே ஈர்த்துக் கொண்டுள்ளன. 1990-1997 எட்டாண்டு காலத்தின்போது வெளிநாட்டு நேரடி முதலீட்டு பாய்ச்சல் வருமாறு:
சீனா 20,000 கோடி அ.டொ., மலேசியா 4,000 கோடி அ.டொ., இந்தோனேசியா 2,600 கோடி அ.டொ., தாய்லாந்து 1,700 கோடி அ.டொ. அதே காலப் பிரிவின்போது இந்தியா 900 கோடி அ.டொ., இலங்கை 80 கோடி அ.டொ. களை மட்டுமே வெளிநாட்டு முதலீடுகளாக பெற்றிருந்தன. 1997 இல் கிழக்காசியாவில் வெளிநாட்டு நேரடி முதலீடு மொ.உ.உ. வில் 4.0 சத வீதத்துக்கு இணையானதாக இருந்து வந்தது. ஆனால், அது தென்னாசியாவில் மொ.உ.உ. வில் 0.7 சதவீதமாகவே காணப்பட்டது.

பண்டங்களின் 'விலை வீழ்ச்சி

உலகமயமாக்கல் செயன்முறை வளர்முக நாடுகளின் கைத்தொழில் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்புகளையும் சாதகமான விலைகளையும் வழங்கிய, அதே வேளையில், ஆரம்ப பண்டங்களுக்கான சந்தையை மட்டுப்படுத்தி விலைகளை வீழ்ச்சி அடையச் செய்யும் ஒரு போக்கினை கொண்டிருந்தது. 1987 க்கும் 1997 க்கும் இடைப்பட்ட காலத்தில் விளை பொருட்களின் மெய் விலைகள் 39 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டிருந்தன. விவசாய மூலப்பொருட்களின் விலைகள் 28 சதவீதத்தினாலும், உலோகங்கள் கனிப்பொருட்கள், பானங்கள் என்பவற்றின் விலைகள் 38 சதவீதத்தினாலும், பெற்றோலியத்தின் விலைகள் 68 சதவீதத்தினாலும், அரிசியின் விலைகள் 51 சதவீதத்தினாலும், பருத்தி விலைகள் 43 சதவீதத்தினாலும், இரும்புத் தாதின் விலைகள் 31 சதவீத்தினாலும், இறப்பர் விலைகள் 52 சதவீதத்தினாலும், தேங்காய் எண்ணெய் விலைகள் 35 சதவீதத்தினாலும், கொக்கோ விலைகள் 29 சதவீதத்தினாலும், கோப்பி விலைகள் 20 சதவீதத்தினாலும், தேயிலை விலைகள் 22 சதவீதத்தினாலும், வீழ்ச்சி கண்டிருந்தன. பெரும்பாலான வளர்முக நாடுகள் ஆரம்ப விளைபொருட்களின் ஏற்றுமதி நாடுகளாக இருந்து வருவதுடன், விலை வீழ்ச்சிகளின் விளைவாக அவை மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தன. இத்தகைய பண்டங்களின் உற்பத்தியாளர்களைப் பொறுத்தவரையில் உலகளாவிய ஒருங்கிணைப்பானது இச்சந்தைகளின் எளிதில் ஊறுபடத்தக்க தன்மையை எடுத்து வருவதாகவே உள்ளது. உண்மையிலேயே இந்நாடுகளின் மிகக் குறைந்த மட்டத்திலான ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் பொருளாதார வளர்ச்சி என்பவற்றிற்கான முக்கிய காரணங்களில் ஒன்று சாதகமற்ற விளைபொருள் விலைகளாகும்.

உலகமயமாக்கலின் ஏற்றுமதி நோக்கிலான வளர்ச்சி உபாயங்கள் காரணமாக விளைபொருட்களின் வழங்கலில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. மறுபுறத்தில், கடந்த காலத்தில் போர், உள்நாட்டு குழப்பங்கள் மற்றும் ஏனைய காரணங்கள் என்பவற்றின் விளைவாக தமது உற்பத்தியை உச்சப் படுத்திக்கொள்ள முடியாதிருந்து வந்த நாடுகள் இப்பொழுது சந்தைக்குள் பிரவேசித்துள்ளன. இதன் காரணமாக பண்டங்களின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. விவசாயிகளும் தமது உற்பத்தி அளவை பெருக்கிக் கொள்வதன் மூலம் விலை வீழ்ச்சியை ஈடு செய்து கொள்வதற்கு முயல்கின்றார்கள். இது தவிர பெரும்பாலான வளர்முக நாடுகளைப் பொறுத்த வரையில் கைத்தொழில்கள் எவையும் காணப்படாத நிலையில், அதிக அளவிலான பண்டங்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதைத் தவிர அவற்றுக்கு வேறு மாற்று வழிகள் இருந்து வரவில்லை. கேள்விப் பக்கத்தைப் பொறுத்தவரையில் புதிய தொழில்நுட்பங்கள் உற்பத்தி செயன்முறை களை மாற்றி அமைத்துள்ளன. அதாவது, கைத்தொழில் உற்பத்தியின் ஓர் அலகில் இப்பொழுது குறைந்த அளவிலான மூலப்பொருட்களே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பொழுது இறப்பர், சணல், கம்பளி மற்றும் பருத்தி போன்ற இயற்கை பண்டங்களுக்கு பதிலீடு செய்யக்கூடிய வகையில் சிந்தெடிக் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. பெற்றோலியப் பொருட்களின் பாவனையில் சிக்கனத்தை எடுத்துவரும் பொருட்டு வலுவைச் சேமிக்கக்கூடிய முறைகள் கண்டறியப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் மூலப் பொருட்களுக்கான தேவையை மந்தமடையச் செய்துள்ளன.

செல்வம் மற்றும் வருமானம் என்பவற்றின் பகிர்வில் காணப்படும் ஏற்றத்தாழ்வு

உலகமயமாக்கலின் விளைவாக வளர்ச்சி அடைந்துள்ள செல்வந்த நாடுகளுக்கும் வளர்முக வறிய நாடுகளுக்குமிடையிலான இடைவெளி மேலும் விரிவடைந்து வருகின்றது. உலகின் மிகச் செல்வந்தர்களான ஐந்திலொரு பங்கு மக்கள் வளர்ச்சி அடைந்த நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கும் உலகின் மிக வறிய மக்களுக்குமான இடைவெளி 1960 இல் 30 க்கு 1 என்ற புள்ளியிலிருந்து 1997 இல் 74 க்கு 1 என்ற புள்ளி வரையில் வீழ்ச்சி கண்டுள்ளது. கடந்த 25 வருட காலத்தின்போது குறை வளர்ச்சி நாடுகளின் தலைக்குரிய வருமானம் மெய் நியதிகளில் 272 அ.டொ. களிலிருந்து 233 அ.டொ. களாக வீழ்ச்சி அடைந்திருந்தது. உலகில் மிகப் பெரிய பணக்காரர்களான மூன்று பேர் வைத்திருந்த சொத்துக்களின் மதிப்பு சுமார் 60 கோடி மக்கள் வாழ்ந்து வரும் 48 குறைவிருத்தி நாடுகளின் கூட்டு மொ.உ.உ வைப் பார்க்கிலும் உயர்ந்ததாக இருந்து வந்தது.

வளர்ச்சி அடைந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையிலான இடைவெளி விரிவடைந்து வந்ததுடன் இணைந்த விதத்தில் பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்குமிடையிலான இடைவெளியும், கல்வி கற்றவர்களுக்கும் பாமரர்களுக்கு மிடையிலான இடைவெளியும் விரிவடைந்து வந்துள்ளது. ஒருபுறம் நாடுகளுக்கிடையில் ஏற்றத்தாழ்வு இடையறாது விரிவடைந்து கொண்டு வருகின்றது. மறுபுறத்தில், நாடுகளுக்குள்ளேயே வருமானங்களில் பாரிய அளவிலான ஏற்றத்தாழ்வுகள் உருவாகி வருகின்றன.

பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகி யிருப்பதுடன், ஏழைகள் பரம ஏழைகளாக மாறியுள்ளனர். கடந்த பத்து வருட காலத்தின்போது ஐக்கிய அமெரிக்காவில் வாழும் மிகவும் தாழ்ந்த வாழ்க்கை தரத்தைக் கொண்ட 20 சதவீதமான குடும்பங்களின் சராசரி வருமானம் 8 சத வீதத்தினால் அதிகரித்துள்ளது. அதேவேளையில், பணக்காரர்களான 20 சத வீதத்தினரின் சராசரி வருமானங்கள் 44 சதவீதத்தினாலும், 5 சத வீதத்தினரான பெரும் பணக்காரர்களின் சராசரி வருமானங்கள் 60 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தன. அமெரிக்காவின் மிகப் பெரும் செல்வந்தரும் உலகின் மிகப் பெரிய செல்வந்தருமான பில்கேட்ஸின் சொத்து மதிப்பு அமெரிக்காவில் வாழ்ந்து வரும் 10.6 கோடி பரம ஏழைகளின் தேறிய மதிப்புக்கு சமமானதாகும். ஐக்கிய இராச்சியத்திலும் 1979 க்கும் 1988 க்கும் இடைப்பட்ட காலப் பிரிவின்போது அடித்தட்டு மற்றும் மேல்தட்டு சமூகப் பிரிவினரின் வருமானங்களில் இவ்விதமாகவே ஏற்றத்தாழ்வான அதிகரிப்புக்கள் ஏற்பட்டு வந்துள்ளன. உலகமயமாக்கப்பட்டு உயர் பொருளாதார வளர்ச்சியை சாதித்துக் கொண்டிருக்கும் வளர்முக நாடுகளிலும் வருமானங்களின் பகிர்வில் இதேவிதமான ஏற்றத்தாழ்வான செயன்முறையே தோன்றியுள்ளது. உதாரணமாக, 1995 இல் பிரேசிலில் பணக்காரர்களான 20 சதவீதத்தினர் வருமானத்தில் 64.2 சதவீதத்தினை பெற்றிருந்ததுடன், மிகவும் அடிமட்டத்தில் வாழ்ந்து வந்த 20 சதவீதத்தினர் மொத்த வருமானத்தில் 2.5

சதவீதத்தை மட்டுமே பெற்று வந்தார்கள். மலேசியாவிலும் கூட இதனை ஒத்த ஒரு நிலைமையே காணப்பட்டது. குறைந்த அளவுக்கு தாராளமயப்படுத்தப்பட்டிருக்கும் தென்னாசியா வருமானப் பகிர்வை பொறுத்தவரையில் பெருமளவுக்கு ஒரு சமத்துவ நிலையை காட்டி வருகின்றது. குடித்தொகையினரில் மேல்மட்ட 20 சதவீதத்தினரின் வருமானப் பங்கு 39.3 சதவீதமாகவும், அடிமட்டத்தில் இருந்துவரும் 20 சதவீதத்தினரின் பங்கு 1994 இல் 9.2 வீதமாகவும் இருந்து வந்தது. உலகின் பெரும் பணக்காரர்களான 200 பேர் 1998 வரையிலான நான்கு வருட காலப் பிரிவின் போது தமது சொத்து மதிப்புக்களை இரட்டிப்பாக்கிக் கொண்டுள்ளனர். எனவே, உலகமயமாக்கலின் அனுகூலங்கள் ஏழைகளைப் பார்க்கிலும் பணக்காரர் களுக்கே கிட்டியிருப்பதனை காண முடிகிறது.

## பாதுகாப்பின்மையும் நிச்சயமற்ற நிலையும்

உலகமயமாக்கல் அல்லது உலகச் சந்தைகளின் ஒருங்கிணைப்பு வளர்ச்சி யடைந்த நாடுகளிலும் ஒரு சில வளர்முக நாடுகளிலும் துரித வளர்ச்சியையும் வருமான அதிகரிப்புக்களையும் எடுத்து வந்துள்ளது. ஆனால், அது அதே வேளை யில் மனித பாதுகாப்பு தொடர்பான புதிய அச்சுறுத்தல்களை உருவாக்கியிருப்பதுடன், பெரும்பாலான வளர்முக நாடுகளில் வாழ்ந்து வரும் மக்களிடையே ஒருவிதமான நிச்சயமற்ற நிலையையும் தோற்றுவித் துள்ளது. உலகமயமாக்கப்படும் சந்தைச் சக்திகளுடன் இணைந்த விதத்தில் தோன்றும் மாற்றங்களின் காரணமாக அன்றாட வாழ்க்கை மாதிரி மற்றும் வாழ்க்கைப் போக்குகள் என்பவற்றில் சீர்குலைவுகள் ஏற்படுகின்றன. இச் சீர்குலைவுகளிலிருந்தே மனிதர்களின் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்கள் ஏற்படுகின்றன. இந்த அச்சுறுத்தல்கள் பன்முகப்பட்டவையாகும். தானியக்க முறை, ஆட்குறைப்பு மற்றும் கட்டற்ற வர்த்தகம் என்பவற்றின் காரணமாக வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் என்பவற்றை இழக்கக்கூடிய நிலை, தொழிற்சாலைகளிலும் வேலைத் தலங்களிலும் மனித உரிமை மீறல்கள், நிச்சயமற்ற பணப்பாய்ச்சல்களினால் உருவாக்கப்படும் நிதிச் சந்தையின் உறுதியற்ற நிலை, போதைப் பொருட்கள், ஆயுதங்கள், பெண்கள், பிள்ளைகள் மற்றும் கறுப்புப் பணம் என்பவற்றை சட்ட விரோதமாக கையாளும் கும்பல்களின் நடவடிக்கைகளின் காரணமாக சமூகத்தின் குற்றச் செயல்களின் பெருக்கம், பெருகி வரும் சுற்றுலாத்துறை மற்றும் குடியகல்வு என்பவற்றிலிருந்து தோன்றக் கூடிய சுகாதாரக் கேடுகள், மேலைய பொருள் சார்ந்த கலாச்சாரம் மற்றும் அமெரிக்க வாழ்க்கைப் பாணி என்பனவற்றின் ஆக்கிரமிப்பு மற்றும் நுகர்வுவாத சமூகத்தின் நடவடிக்கை காரணமாக சுற்றுச்சூழலில் ஏற்படும் அழிவும் சீர்கேடும்.

## தொழில் மற்றும் வருமானப் பாதுகாப்பு

உலகமயமாக்கல் செல்வந்தர்கள் தொடர்பாக தொழில் மற்றும் வருமானப் பாதுகாப்பு என்பவற்றை அதிகரித்திருக்கும் அதே வேளையில், வறியவர்களை பொறுத்தவரையில் தொழில், வருமானம் என்பவை தொடர்பாக நிச்சயமற்ற நிலைமை களை எடுத்து வந்துள்ளது. வளர்ச்சி யடைந்த நாடுகளிலும் அதேபோல வளர்முக நாடுகளிலும் தொழில் துறையின் மீளமைப்பு மற்றும் சமூக பாதுகாப்பு வழிமுறைகளின் நீக்கம் என்பவற்றை அடுத்து தொழில்கள் தொடர்பான பாதுகாப்பின்மை நிலை வரவர அதிகரித்து வருகின்றது. தொழில்நுட்ப முன்னேற்றம் குறிப்பாக தன்னியக்க முறை, நிறுவனங்கள் இணைதல் மற்றும் கையகப் படுத்தப்படுதல் மற்றும் கைத்தொழில்கள் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படல் என்பன வளர்ச்சி அடைந்த நாடுகளின் ஒரு சில பிரிவுகளிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தையும் குறைந்த வேதனங் களையும் எடுத்து வருகின்றன. ஐரோப்பிய யூனியனைச் சேர்ந்த ஆறு நாடுகள் பல வருட காலமாக தொடர்ந்தும் 10 சதவீதத்துக்கும் மேற்பட்ட வேலையின்மை விகிதத்தை கொண்டுள்ளன. தன்னியக்க மாக்கல் மற்றும் தகவல் புரட்சி என்பவற்றின் விளைவாக பல பல்தேசிய நிறுவனங்கள் இப்பொழுது ஆயிரக்கணக்கான தொழிலாளர் களை வெளியே தள்ளி வருகின்றன. உதாரணமாக, ஜேர்மனியின் மோட்டார் வாகனக் கைத்தொழில் 1991 தொடக்கம் சுமார் 100,000 தொழில் வாய்ப்புக்களை இல்லாதொழித்துள்ளது. மிகப் பெரிய தனியார் துறை எண்ணெய் கம்பெனியான ரோயல் டச் குழுமம் 105,000 தொழில்களை ஒழிக்கப்போவதாக 1995 ஜனவரியில் அறிவித்திருந்தது.

மறுபுறத்தில், வளர்முக நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் விவசாயிகளும் தாராளமயமாக்கல் மற்றும் மலிவான இறக்குமதிகளின் பெருக்கம் என்பவற்றின் விளைவாக வேலையில்லாத் திண்டாட்டத் தையும் வருமான இழப்பையும் எதிர்கொண் டுள்ளனர். வளர்முக நாடுகளைச் சேர்ந்த விவசாயிகள் வளர்ச்சி அடைந்த நாடுகளி லிருந்து வரும் மானியப்படுத்தப்பட்ட மலிவான இறக்குமதிகளின் அச்சுறுத்தலை ஒருபுறத்தில் எதிர்கொண்டிருப்பதுடன், மறுபுறத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் தாராளமயமாக்கல் கொள்கைகளின் கீழ் அத்தகைய பண்டங்கள் தொடர்பான இறக்குமதித் தீர்வைகள் மற்றும் வரையறைகள் அகற்றப்படும் அச்சுறுத்தல் களையும் எதிர்கொண்டுள்ளனர். வர்த்தக தாராளமயமாக்கலை அடுத்து மலிவான இறக்குமதிகளிலிருந்து வரும் போட்டி அச்சுறுத்தலை உள்நாட்டுக் கைத்தொழில் கள் எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது. வேலைவாய்ப்புக்கள் உயர் தேர்ச்சித் திறன் கொண்ட தொழில்சார் வல்லுநர்களுக்கே கிடைக்கக் கூடியவையாகவும் அணுகக் கூடியவையாகவும் இருந்து வருகின்றன. தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் இடம்பெயர்ந்து செல்வதனை தேசிய எல்லைகள் தடுக்கின்றன. பல்தேசிய கம்பெனிகள் பாரிய உள்நாட்டு நிறுவனங்களை விழுங்கி ஏப்பம் விடக்கூடிய ஒரு நிலைமையை தாராளமயமாக்கல் தோற்றுவித்திருப்பது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

## மனித உரிமை மீறல்கள்

மனித உரிமை மீறல்களும் தொழிலாளர் களின் பாதுகாப்பின்மையை அதிகரித் துள்ளன. பல பல்தேசிய நிறுவனங்கள் வளர்முக நாடுகளில் இயங்கி வரும் தமது தொழிற்சாலைகளிலும் ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களிலும் குறைந்த சம்பளங்கள், தொழிற்சங்க உரிமை மறுப்பு, நலன்புரி சேவைகளின் புறக்கணிப்பு என்பவற்றில் ஈடுபட்டு வருவதாக குற்றஞ் சாட்டப்பட்டு வருகின்றது. ஆசியாவிலும் இலத்தீன் அமெரிக்காவிலும் தொழிற்சாலை களில் நிலவிவரும் வேலை நிலைமைகள் காரணமாக பல பல்தேசியக் கம்பெனிகள் பொது மக்களின் எதிர்ப்பை எதிர்கொண் டுள்ளன. இக்கம்பெனிகள் முக்கியமாக மலிவான கூலி விகிதங்கள் காரணமாகவே வளர்முக நாடுகளுக்கு தமது தொழிற்சாலை களை எடுத்துச் செல்கின்றன. அந்த பின்னணியில் உயர் வேதனங்கள், வேலை நிலைமைகளின் விருத்தி, நலன்புரிச் சேவைகள் என்பன தொடர்பான கோரிக்கை கள் என்பவற்றை அவை எதிர்த்து வருகின்றன.

உலக நிதிச் சந்தைகள் உள்ளார்ந்த அடிப்படையில் ஊசலாட்டத் தன்மை கொண்டவையாகவே இருந்து வருகின்றன. மூலதன அசைவுகள் மீதான அனைத்து கட்டுப் பாடுகளையும் நீக்குவதன் மூலம் உலக நிதிச் சந்தைகளை ஒருங்கிணைப்பதானது, வெளிநாட்டு மூலதனத்தை கவர்ந்திழுப்பதன் மூலம் அத்தகைய தாராளமய மாக்கல்களினால் பயனடையும் வளர்முக நாடுகளிலேயே ஸ்திரமற்ற நிலைமைகளை தோற்று விக்கின்றது. கிழக்காசிய நிதி நெருக்கடி இதனை மிகச் சிறந்த முறையில் எடுத்துக் காட்டுகின்றது. இந் நாடுகளுக்குள் பாரிய அளவிலான மூலதனம் உட்பாய்ச்சப் பட்டமையினால் துரித வளர்ச்சி ஏற்பட்டது மட்டுமன்றி மெய் செலாவணி விகிதங்களில் மதிப்பேற்றம் ஏற்பட்டிருந்தது. அதிகரித்த அளவில் நடைமுறைக் கணக்கு பற்றாக் குறைகள் இடம்பெற்று வந்த ஒருகால கட்டத்தில் அது நாணய மதிப்பிறக்கத்தை தாமதப்படுத்தியது. இதன் விளைவாக போட்டித் திறன் குறைவடைவதுடன், ஊக வணிக நோக்கங்களுக்கென பெருமளவுக்கு

உள்நாட்டு கடன் வழங்கப்பட்டது. 1997 இல் திடீரென குறுங்கால வகையைச் சேர்ந்த மூலதனங்களின் வெளிப்பாய்ச்சல் இடம்பெற்றது. இதன் விளைவாக பாரிய நாணயப் பெறுமதி இறக்கமும் பங்குச் சந்தை வீழ்ச்சியும் வங்கி முறிவுகளும் கம்பெனிகளின் முறிவுகளும் இடம்பெற்றன. சுமார் 13 மில்லியன் மக்கள் தமது தொழில்களை இழந்தார்கள். உயர் அளவில் வட்டி மற்றும் இறை சிக்கனங்கள் பின்பற்றப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதித்தமை நிலைமையை மேலும் மோசமாக்கியது.

இது பொருளாதாரங்களை சுருங்கச் செய்வதுடன், உலகளாவிய ரீதியில் தொடர் தாக்கங்களை எடுத்து வந்த பொருளாதார பின்னடைவொன்றையும் ஏற்படுத்தியது. கிழக்காசிய நாடுகள் கடந்த 30 வருட காலமாக படிப்படியாக எட்டியிருந்த முன்னேற்றத்தின் ஒரு கணிசமான பகுதியை இந்நெருக்கடி அள்ளிச் சென்றிருப்பதுடன், இந்நாடுகளில் வாழ்ந்துவரும் மக்கள் இருண்ட நிச்சயமற்ற ஒரு எதிர்காலத்தை எதிர்கொண்டுள்ளனர். உதாரணமாக, இந்தோனேசியாவை எடுத்து நோக்குவோம். இந்நெருக்கடிக்கு முன்னர் 1996 இல் அந்நாட்டின் தலைக்குரிய உற்பத்தி 1080 அ.டொ.களாக இருந்து வந்ததுடன், இலங்கையின் தலைக்குரிய உற்பத்தி 740 அ.டொ.களாக இருந்தது. ஆனால், நெருக்கடிக்குப் பின்னர் அது இலங்கையின் தலைக்குரிய உற்பத்தியிலும் பார்க்க (805 அ.டொ.) குறைவடைந்து 403 அ.டொ. மட்டத்தை எட்டியிருந்தது. மேலும், நாட்டின் மொத்தக் குடித்தொகையின் 4 கோடி மக்கள் அல்லது 20 சதவீதத்தினர் வறுமைக்குள் வீழ்ந்தனர்.

### குற்றச்செயல்களின் பெருக்கம்

உலகமயமாக்கல் பாரிய அளவிலான குற்றச் செயல்களுக்கான கதவுகளை திறந்து விட்டிருப்பதுடன், பெருமளவுக்கு தனிப்பட்ட முறையில் பாதுகாப்பின்மை உணர்வினை உருவாக்கியுள்ளது. தொடர்பாடல் தொழில்நுட்பத்திலும் தகவல் தொழில்நுட்பத்திலும் ஏற்பட்டுள்ள பாரிய முன்னேற்றமும் மலிவான போக்குவரத்து வசதிகளும தாராளமயப்படுத்தப்பட்டுள்ள நிதிச் சந்தைகளும் நாடுகளுக்கிடையில் போதை வஸ்துக்கள், ஆயுதங்கள், கறுப்புப் பணம் என்பவற்றின் தடங்கலற்ற பாய்ச்சலுக்கான வாய்ப்புக்களை வழங்கியுள்ளன. போதை வஸ்துக்களிலான சட்டவிரோத விற்பனைகளும் பெண் வணிகமும் ஆயுத வர்த்தகமும் கறுப்புப் பணமும் உலகெங்கிலும் வன்செயல்களும் குற்றச் செயல்களும் பெருகுவதற்கு பங்களிப்பினை வழங்கி வருகின்றன. இன்று உலகில் போதைவஸ்து உபயோகிப்பாளர்கள் சுமார் 2 கோடிப் பேர் இருந்து வருவதுடன், இவர்கள் தமது அயலவர்களுக்கும் பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். விபச்சாரத்துக்கென பெண்களையும் இளம் பெண்களையும் போக்குவரத்துச் செய்வது - வருடாந்தம் மேற்கு ஐரோப்பாவுக்கு மட்டும் இவ்விதம் 500,000 பெண்கள் அனுப்பப்பட்டு வருகின்றனர் - 700 கோடி அ.டொ. வர்த்தகமாக செழித்தோங்கி வருகின்றது. போதை வஸ்துக்களையும் ஆயுதங்களையும் பெண்களையும் பிள்ளைகளையும் கடத்துவதற்கான ஒரு மிகச் சிறந்த வழிமுறையாக இப்பொழுது இணையம் இருந்து வருகின்றது. சட்ட விரோத போதை வஸ்து வர்த்தகம் 1995 இல் மொத்த உலக வர்த்தகத்தில் 8 சதவீதமாக இருந்து வந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மொத்த உலக உள்நாட்டு உற்பத்தியில் கறுப்புப் பணத்தின் அளவு 2 சதவீதம் தொடக்கம் 5 சதவீதம் வரையில் இருந்து வருவதாக சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளது.

உலகமயமாக்கலின் மூலம் தூண்டப்பட்டிருக்கும் பயணங்களின் பெருக்கமும் குடியகல்வும் எச்ஐவி-எய்ட்ஸ் நோயின் பெருக்கத்துக்கும் பாரிய சுகாதார அச்சுறுத்தலுக்கும் வழிகோலியுள்ளது. 1998 இல் எச்ஐவி-எய்ட்ஸுடன் சுமார் 3.3 கோடி மக்கள் வாழ்ந்து வந்தனர். அவ்வாண்டில் மட்டும் புதிதாக 60 இலட்சம் பேருக்கு இந்த நோய் தொற்று ஏற்பட்டது. இந்நோயாளிகளில் 95 சதவீதத்தினர் வளர்முக நாடுகளில் வாழ்ந்து வருவதனால் அது வறியவர்களின் ஒரு வியாதியாக உருவாகியுள்ளது. 2010 ஆவது வருடமளவில் 9 ஆபிரிக்க நாடுகளில் ஆயுள் எல்லை 17 வருடங்களினால் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, இந்நாடுகள் 1960 களின் ஆயுள் எல்லை எதிர்பார்ப்பு மட்டங்களுக்கு திரும்பிச் செல்ல வேண்டியிருக்கும்.

### உண்ணாட்டு கலாச்சாரம் எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்

உலகமயமாக்கல் ஒருவகையில் கலாச்சாரம், கருத்துக்கள் மற்றும் அறிவு என்பவற்றை உலகில் அனைத்து மூலைகளிலிருந்தும் மக்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் அவர்களுடைய வாழ்க்கையைத் திறந்து விடுகின்றது. ஆனால், இன்றைய சூழ்நிலையில் கலாச்சாரத்தின் பாய்ச்சல் ஒரு வழிப்பாதையிலேயே - அதாவது வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து வளர்முக நாடுகளை நோக்கியதாகவே- இடம் பெற்று வருவதனை காண முடிகிறது. உலகுக்கான அமெரிக்காவின் மிகப் பெரிய ஏற்றுமதி கேளிக்கை கைத்தொழிலாகும். அதாவது, ஹொலிவூட் திரைப்படங்களின் ஏற்றுமதிகளிலிருந்து 3000 கோடி அ.டொ. களுக்கும் மேற்பட்ட தொகையை சம்பாதித்துக் கொண்டுள்ளது. உலகளாவிய ஊடக வலையமைப்புக்களின் விரிவாக்கமும் செயற்கை கோள் தொடர்பாடல் தொழில்நுட்பங்களின் பெருக்கமும் சக்தி வாய்ந்த ஒரு புதிய ஊடகத்தை - ஒரு சில வினாடிகளுக்குள் முழு உலகினையும் சென்றடையக்கூடிய ஒரு ஊடகத்தை- உருவாக்கியுள்ளது. அது ஹொலிவூட் திரைப்படங்களை வளர்முக நாடுகளின் தொலைதூர மூலை முடுக்குகளுக்கெல்லாம் எடுத்து சென்றுள்ளது. ஏற்கனவே சுட்டிக் காட்டியது போல, 1980 க்கும் 1995 க்கும் இடைப்பட்ட காலப் பிரிவின்போது 1000 பேரில் தொலைக்காட்சி வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாக அதிகரித்திருக்கிறது. ஹொலிவூட் திரைப்படங்களுடன் இணைந்த விதத்தில் கொக்கோ கோலா, மெக்டொனால்ட் ஹம்பேகர்கள், நீல நிற ஜீன்ஸ்கள், பாப் இசை மற்றும் மல்பரோ சிகரட்டுக்கள் போன்ற அமெரிக்க கலாச்சாரத்தை அடையாளப்படுத்தும் கூறுகளும் உலகெங்கிலும் எடுத்துச் செல்லப்படுகின்றன. இத்தகைய விதத்திலான மேலைய கலாச்சாரத்தின் முற்றுகை மக்களின் கலாச்சாரத் தனித்தன்மையை சீர்குலைத்து, அவர்கள் தமது சொந்த கலாச்சார அடையாளங்களை இழக்கக் கூடிய ஓர் அச்சுறுத்தலை எடுத்து வந்துள்ளது.

உலகமயமாக்கலின் கலாச்சாரம் தலையிடாக் கொள்கை முதலாளித்துவம் மற்றும் கட்டற்ற சந்தைகள் என்பவற்றின் பணக் கலாச்சாரமாகும். கலாச்சாரமும் ஒரு பொருளாதாரப் பண்டமாக ஆக்கப்பட்டிருப்பதுடன், கைவினைப் பொருட்கள், சுற்றுலாத்துறை, இசை, நூல்கள் மற்றும் திரைப்படங்கள் போன்ற விற்பனை செய்யக்கூடிய வர்த்தகம் செய்யக்கூடிய பண்டங்களுடன் அது அடையாளம் காணப்பட்டு வருகின்றது. சமூகத்தின் வழக்காறுகள் மற்றும் பாரம்பரியங்கள் என்பன உதாசீனப்படுத்தப்பட்டு வருகின்றன. சந்தையும் பல்தேசிய நிறுவனங்களும் நவீன ஊடகங்களை பயன்படுத்தி நுகர்வுவாத சமூகமொன்றை கட்டியெழுப்புவதற்கும், பணத்துக்கும் பண்டங்களுக்கும் மக்களை அடிமையாக்குவதற்கும், அவர்களை கடன் பொறியில் சிக்க வைப்பதற்கும் அனைத்து விதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. செல்வச் செழிப்பு, பேராசை மற்றும் தனிநபர் வாதம் என்பவற்றை போற்றிப் புகழும் ஒரு கலாச்சாரத்தை அது மேம்படுத்தி வருகின்றது. தன்னடக்கம், தேச பக்தி மற்றும் தியாகம் போன்ற உயரிய விழுமியங்களை மதித்துப் போற்றும் தென்னாசியா போன்ற வளர்முக நாடுகளின் பாரம்பரிய கலாச்சாரத்தை அது புறக்கணிக்கின்றது. போட்டி நிறைந்த உலகச் சந்தை மனிதர்களின் நேரம், வளங்கள் மற்றும் பராமரிப்புக்கான உந்துதல் என்பவற்றின் மீது அது அழுத்தங்களை எடுத்து வருகின்றது. இந்தப் பின்னணியில் உலகமயமாக்கல் மற்றும் சந்தை விரிவாக்கம் என்பவற்றின் விளைவாக சிறுவர், வயது முதிர்ந்தோர், நோயாளிகள் மற்றும் மகளிர் ஆகியோர் தொடர்பான பராமரிப்பு மற்றும் பரிவு என்பன

ஓரளவுக்கு புறக்கணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. பெண்கள் அதிக அளவில் வேலைக்குப் போகும் ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதுடன், அரசிறை சிக்கன நடவடிக்கையுடன் இணைந்த விதத்தில் அரசு அனுசரணையுடனான பராமரிப்புச் சேவைகளில் வெட்டுக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் காரணமாக நலிவுற்றவர்களை பராமரிக்கும் பணி பெருமளவுக்கு பாதிப்படைந்துள்ளது. கட்டற்ற சந்தை சமகால சிவில் சமுகத்துக்கு எடுத்து வரக் கூடிய அச்சுறுத்தல் குறித்து உலகமயமாக்கலின் முன்னணி ஆதரவாளர்களில் ஒருவரான ஜோஜ் ஸொரோஸ் என்பவர் பின்வரும் விதத்தில் எச்சரிக்கை விடுத்திருந்தார்: தலையிடா முதலாளித்துவத்தின் தங்குதடையற்ற விரிவாக்கமும் எமது வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும் சந்தை விழுமியங்களின் பரவலும் எமது திறந்த ஜனநாயக சமூகத்தின் மீது பாரிய தாக்கத்தை எடுத்து வருவதாக நான் அஞ்சுகிறேன். திறந்த சமுகத்தின் பிரதான எதிரி இனியும கம்யூனிஸ்ட் ஆக இருந்து வரவில்லை. முதலாளித்துவமே அந்த முக்கிய அச்சுறுத்தலாக இருந்து வருவதாக நான் அஞ்சுகின்றேன்.

உலகமயமாக்கலும் சுற்றுச் சூழலும்

உலகமயமாக்கலின் கீழ் சந்தைகள் புதிய நாடுகளையும் புதிய பிரதேசங்களையும் நோக்கி நகர்ந்து செல்வதனாலும், நுகர்வுவாத சமுதாயம் உலகெங்கிலும் பரவுவதாலும் நுகர்வுப் பெருக்கத்தின் காரணமாக சுற்றுச்சூழலின் மீது தாக்கங்கள் தோன்றுகின்றன. சந்தைகள் பொதுவாக சுற்றுச்சூழலுக்கு மதிப்பளிப்பதில்லை. உணவு மற்றும் மூலப்பொருட்கள் என்பவற்றுக்கான அதிகரித்து வரும் கேள்வி உயர் அளவிலான உற்பத்தியை தூண்டுகின்றது. இது மறுபுறத்தில் பெற்றோலியம், ஏனைய கனிப்பொருட்கள் போன்ற புதுப்பிக்கமுடியாத வளங்களின் அழிவுக்கு வழிகோலுகின்றது. அது மட்டுமன்றி மீன்வளம், காடுகள் போன்ற நில நீர் வளங்களும் இதன் விளைவாக அழிகின்றன. பெருகிவரும் கேள்வியை நிறைவு செய்து வைக்கும் விதத்தில் விவசாய பண்டங்களின் விரிவான சாகுபடி, இரசாயன உர வகைகள் மற்றும் பீடை கொல்லிகள் என்பவற்றின் பரவலான உபயோகத்துக்கு வழிகோலுகின்றது. இவை மண் மற்றும் நீர் என்பவற்றை மாசு படுத்துகின்றன. மனிதத் தேவைகள் விவசாயம், கைத்தொழில் மற்றும் கால் நடைவளர்ப்பு என்பவற்றுக்கென அதிக அளவில் நீர் நுகரப்படுவதானது கிடைக்கக் கூடியதாக இருக்கும் நீர் அளவை - நிலத்தடி நீரின் அளவையும் - குறைவடையச் செய்கின்றது.

பணக்காரர்கள் பெருமளவில் வாழ்ந்து வரும் வளர்ச்சி அடைந்த கைத்தொழில் நாடுகளே உண்மையிலேயே மிகப் பெரிய நுகர்வு நாடுகளாக இருந்து வருகின்றன. உலக குடித்தொகையில் செல்வச் சீமானகளான ஐந்தில் ஒரு பங்கினர் மொத்த உலக இறைச்சி மற்றும் மீன் என்பவற்றின் உற்பத்தியில் 45 சதவீதத்தையும், காகித உற்பத்தியில் 84 சதவீதத்தினையும், உலக பெற்றோலிய உற்பத்தியில் 75 சதவீதத்தினையும் நுகர்ந்து வருகின்றனர். உலகில் உள்ள மொத்த மோட்டார் கார்களில் 87 சதவீதமானவை இவர்களுக்கே சொந்தமானவை யாக இருந்து வருகின்றன. உலகின் செல்வச் சீமான்களாக இருந்து வரும் ஐந்தில் ஒரு பங்கினரின் ஒட்டுமொத்த நுகர்வு பரம ஏழைகளாக வாழ்ந்து வரும் ஐந்தில் ஒரு பங்கினரின் ஒட்டுமொத்த நுகர்விலும் வார்க்க 16 மடங்கு அதிகமானதாக காணப்படுகின்றது. பண்ட நுகர்வில் ஏழைகளுக்கும் பணக்காரர்களுக்கு மிடையில் நிலவி வரும் பாரிய ஏற்றத்தாழ்வுக்கு இது மிகச் சிறந்த உதாரணமாகும். கைத்தொழில் நாடுகளில் நபர் ஒருவரின் வருடாந்த இறைச்சி நுகர்வு 77 கிலோ கிராமாக இருந்து வரும் அதே வேளையில், தென்னாசியாவில் அது 5 கிலோ கிராம்களாக காணப்படுகின்றது. பங்களாதேஷில் அது 3 கிகி களாகக் காணப்படுகிறது. எரிபொருள் நுகர்வை பொறுத்தவரையில் வளர்ச்சி அடைந்த நாடுகள் வளர்முக நாடுகள் நுகரும் அளவிலும் பார்க்க 7 மடங்கு அதிகமான எரிபொருளை நுகர்ந்து வருகின்றன. இந்த உயர் மட்டங்களிலான நுகர்வு இயற்கை மூலவளங்களின் அதிகரித்த அளவிலான உபயோகத்துக்கு வழிகோலு கின்றது. 1950 தொடக்கம் புதைபடிவ எரிபொருள்களின் உபயோகம் நான்கு மடங்காக அதிகரித்துள்ளது. 1960 தொடக்கம் நன்னீர் நுகர்வு இரண்டு மடங்கினால் அதிகரித்துச் சென்றுள்ளது. கடல் மீன்பிடி நான்கு மடங்கினால் அதிகரித்திருப்பதுடன், விறகு உபயோகம் 25 வருடங்களுக்கு முன்னர் இருந்த அளவிலும் பார்க்க இப்பொழுது 40 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

உயர் அளவிலான பண்ட நுகர்வின் சுற்றுச்சூழல் பின்விளைவுகள் அச்சமூட்டத்தக்கவையாக இருந்து வருகின்றன. முதலாவதாக, மரத் தேவைகளுக்கென வெப்ப வலயக் காடுகள் மிதமிஞ்சிய அளவில் வெட்டப்படுவதன் விளைவாக காடழிப்பு ஏற்படுகின்றது. ஆண்டொன்றுக்கு சுமார் 15.4 மில்லியன் ஹெக்டெயர் பரப்பளவுள்ள வெப்ப வலயக் காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. அதாவது, ஒரு நிமிடத்துக்கு 72 ஏக்கர் காடு அழிக்கப்படுகிறது. இரண்டாவதாக, மீன் வளம் வரவர வீழ்ச்சி அடைந்து கொண்டு வருகின்றது. தரவுகள் கிடைக்கக் கூடியதாக இருக்கும் சுமார் 25 சதவீதமான மீன் வகைகள் ஒன்றில் அழிந்து போயுள்ளன, அல்லது அழிவு அச்சுறுத்தலை எதிர் நோக்கியுள்ளன. மேலும், 44 சதவீதமான மீன் வகைகள் அவற்றின் உயிரியல் வரையறையையும் தாண்டிய விதத்தில் பிடிக்கப்பட்டு வருக்கின்றன. மூன்றாவதாக, உயிர் பன்முகத் தன்மை நிலையில் இழப்பு ஏற்பட்டு வருகின்றது. சுமார் 12 சதவீதமான பாலூட்டி விலங்குகளும், 11 சதவீதமான பறவைகளும், 14 சதவீதமான மீன் மற்றும் ஊர்வன வகையைச் சேர்ந்த விலங்குகளும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பவை என வகைப்படுத்தப்பட்டுள்ளன. உலகின் பவளப் பாறைகளின் 5-10 சதவீதமும் அலையாத்தி காடுகளில் அரைவாசிப் பகுதியும் அழிக்கப்பட்டுள்ளன. உலகின் கடற்கரைகளில் 34 சதவீதமானவை பெரும் சீரழிவு அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன. சர்வதேச தாவரவியல் பேரவையின் தலைவர் பின்வருமாறு கூறுகின்றார்: தற்போதைய போக்குகளின் அடிப்படையில் நோக்கும்போது அடுத்த நூற்றாண்டின் முடிவுக்குள் பறவை இனங்கள், பாலூட்டி விலங்குகள், வண்ணாத்திப் பூச்சிகள் மற்றும் தாவர வகைகள் என்பவற்றில் சுமார் மூன்றில் இரண்டு பகுதி அழிந்துவிடக் கூடும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். நான்காவதாக, மண் அழிவு இடம் பெற்று வருகின்றது. சுமார் 90 இலட்சம் ஹெக்டெயார் நிலத்தில் மிக மோசமான அளவில் சீரழிவு ஏற்பட்டுள்ளது. இப்புவிக் கோளின் நிலப் பரப்பில் சுமார் பத்து சதவீதம் ஓரளவுக்கு சீரழிந்து போயுள்ளது. ஐந்தாவதாக, சுற்றுச் சூழல் தூய்மைக்கேடு இடம்பெற்று வருகின்றது. சுற்றுச் சூழலுக்குள் சுமார் 70,000 இரசாயனப் பொருட்கள் அறிமுகம் செய்யப்பட்டிருப்பதுடன், ஒவ்வொரு வருடமும் சுமார் 1000 புதிய இரசாயன வகைகள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டு வருகின்றன. அவை மண்ணிலும் நீரிலும் காற்றிலும் எடுத்து வரும் தூய்மைக்கேடு பல்வேறு நோய்களின் பெருக்கத்துக்கான மூல காரணமாக இருந்து வருகின்றது. காற்று மாசடைதல் காரணமாக வருடாந்தம் 30 இலட்சம் மக்களும், நீர் மாசடைதல் காரணமாக வருடாந்தம் 50 - 70 இலட்சம் மக்களும் மரணமடைந்து வருகின்றார்கள். ஆறாவதாக, சுற்றுச்சூழல் மீது நிகழ்த்தப்பட்டு வரும் அழிவு மற்றும் சீரழிவு என்பனவே அமில மழை, உலகளாவிய வெப்பமாதல் மற்றும் ஓசோன் படலத்தின் அழிவு போன்ற பயங்கரமான கேடுகளை எடுத்து வருகின்றன.

உலகமயமாக்கல் மற்றும் நுகர்வுவாத சமூகம் என்பற்றின் தங்கு தடையற்ற பெருக்கம் காரணமாக உலகின் நீர் வளத்துக்கே மிக மோசமான அச்சுறுத்தல் ஏற்பட்டு வருகின்றது. நீர் தட்டுப்பாடு ஆரோக்கியம், உணவுப் பாதுகாப்பு மற்றும் உயிரினவியல் தொகுப்புக்கள் என்பவை எதிர்கொண்டு வரும் மிகப் பயங்கரமான தனி ஒரு அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது. உலகில் வாழும் மொத்த மக்கள் தொகையில் சுமார் ஐந்தில் ஒரு பங்கினருக்கு - 140 கோடி பேருக்கு- பாதுகாப்பான சுத்தமான குடிநீர் வசதி

கிடைப்பதில்லை. சுமார் 300 கோடி மக்கள் - பிரதானமாக வறுமையில் வாழ்ந்து வரும் மக்கள் - பொருத்தமான ஆரோக்கிய வாழ்வுக்கு அவசியமான நீர் வசதியை பெற்றுக் கொள்வதில்லை. வருடாந்தம் நீருடன் சம்பந்தப்பட்ட நோய்கள் காரணமாக சுமார் 70 இலட்சம் மக்கள் இறந்து வருகிறார்கள் என்றும், இவர்களில் 40 இலட்சம் பேர் பிள்ளைகளாக இருந்து வருகின்றன என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. அபிவிருத்தி அல்லது உலகமயமாக்கல் தற்போதைய உலக நீர் வளங்களின் வரையறைகளுக்குள் இருந்து வருதல் வேண்டும். அத்துடன் தற்போதைய நீர் தட்டுப்பாடும் குறைக்கப்படல் வேண்டும். அவ்வறில்லாவிடில், 2025 வது வருடத்தில் உலக குடித்தொகையில் கணிசமான ஒரு தொகையினர் மிகக் கடுமையான நீர்த் தட்டுப்பாடொன்றை எதிர்கொள்ள முடியும். 2025 அளவில் 48 நாடுகளில் சுமார் 230 கோடி மக்கள் நீர் தட்டுப்பாட்டினை எதிர்கொள்வார்கள் என்றும், 130 கோடி மக்கள் மிகக் கடுமையான நீர் தட்டுப்பாட்டை எதிர்கொள்வார்கள் என்றும், 100 கோடி மக்கள் மிகமிக கடுமையான நீர்த் தட்டுப்பாட்டினை எதிர்கொள்வார்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

பல நாடுகளில் பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள் சுற்றுச்சூழல் குறித்து கிஞ்சித்தும் அக்கறை செலுத்தாமல் அந்த, சூழலை மிதமிஞ்சிய அளவில் சுரண்டி வருவதாக குற்றம் சாட்டப்படுகின்றது. அநேகமாக அனைத்து சுரங்கம் அகழும் கம்பெனிகளும் உயிரினவியல் சூழல் அழிவையும் உண்ணாட்டு மக்களுக்கெதிரான குற்றச் செயல்களையும் புரிந்து வருவதாக கண்டனங்கள் எழுப்பப்பட்டு வருகின்றன. உதாரணமாக, பிரிபோர்ட் மக்மோலன் என்ற அமெரிக்க நிறுவனம் உலகின் மிகவும் வளமார்ந்த சூழலொன்றில் இரியன்ஜாவில் பெருமளவுக்கு அழிவுகரமான சுரங்க மகழ்வு நடவடிக்கை ஒன்றை மேற்கோண் டுள்ளது. இரியன்ஜாயா பிரதேசம் உலகின் மிகச் சிறந்த தங்க மற்றும் உலோகப் படிவுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தம் இந்நிறுவனத்துக்கு 1991 இல் வழங்கப்பட்ட போதிலும், பல்வேறு குற்றச் சாட்டுக்கள் காரணமாக இந்தோனேசிய அதிகாரிகள் அதனை மீளாய்வு செய்வதற்கு விரும்பினார்கள். இந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப் பட்டிருக்கும் அகழ்வு வேலையின் காரணமாக ஆண்டொன்றுக்கு சுமார் 70 மில்லியன் தொன் அகழ்வு கழிவுகள் அஜ்குவா நதிக்குள் கொட்டப்படுவதுடன், அதன் காரணமாக இந்த நீர்நிலை முற்றிலும் மாசடைந்துள்ளது.

## உலகமயமாக்கலை கட்டுப்படுத்துதல்

உலகமயமாக்கல் உலக அபிவிருத்திச் செயன்முறையின் ஓர் உள்ளார்ந்த பாகமாக இருந்து வருவதனால் அதனை தடுத்து நிறுத்துவது அநேகமாக சாத்தியமில்லாமல் போகலாம். ஆனால், அதனை கட்டுப்படுத்த முடியும். இன்று எம்முன் இருக்கும் சவால் உலகமயமாக்கல் அனைத்து நாடுகளுக்கும் அனைத்து மக்களுக்கும் ஏற்றத்தாழ்வற்ற விதத்தில் எவருக்கும் பாரபட்சம் காட்டாத விதத்தில் அனுகூலங்களை வழங்குவதனை உத்தரவாதப்படுத்துவது எப்படி என்பதாகும். இதனை சாதித்துக் கொள்ளும் பொருட்டு சந்தையின் மிதமிஞ்சிய அளவிலான மேலாதிக்கத்தின் எதிர்மறையான அம்சங்களை அகற்றிவிடும் அதேவேளையில், உலகளாவிய சந்தைகள் மற்றும் போட்டி என்பவற்றின் அனுகூலங்களை தக்க வைத்துக் கொள்வதற்கான வழிவகைகளையும் கண்டறிய வேண்டியுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், உலகமயமாக்கலுக்கு நாங்கள் ஒரு மனித முகத்தை வழங்க வேண்டும். இலாபத்துக்காக மட்டுமன்றி மக்களுக்காகவும் அது இயங்கி வர வேண்டும். ஒரு நாட்டின் உண்மையான செல்வம் மக்கள் செல்வமே என்ற உண்மையை நாங்கள் ஒரு போதும் மறந்து விடக்கூடாது. பொருளாதர அபிவிருத்தியின் நோக்கம் மக்கள் நீண்ட ஆரோக்கியமான ஆக்கபூர்வமான வாழ்க்கையை அனுபவிப்பதற்கு உசிதமான ஒரு சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பதாகும். எனவே, அந்த வகையில் பொருளாதார அபிவிருத்தி அத்தியாவசியமாகவே மக்களுக்கு சார்பானதாக இருந்து வர வேண்டியிருப்பதுடன், அது ஏற்றதாழ்வுகளை களைந்து மனித ஆற்றல்களை மேம்படுத்த வேண்டியுள்ளது. உலகில் வாழும் மக்களில் பெரும்பாலானவர்கள் வளர்முக நாடுகளில் வாழ்ந்து வருவதுடன், ஏழைகளாகவும் இருந்து வருகின்றனர். இதன் காரணமாக பொருளாதார அபிவிருத்தி வறியோருக்கு சார்பானதாக இருந்து வருதல் வேண்டும். பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை வென்ற பேராசிரியர் அமிர்த்தியா சென் அண்மையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்: 'பொருளாதார அபிவிருத்தியின் குறிக்கோள்கள் பண்டங்களுடன் சம்பந்தப்பட்டவையாக இருந்து வருவதிலும் பார்க்க அதிக அளவுக்கு மக்களுடன் சம்பந்தப்பட்டவையாக இருந்து வருதல் வேண்டும், மேலும், மக்களுடன் சம்பந்தப்பட்ட பொருளாதர கொள்கைகள் சமூகத்தில் மிகவும் மோசமான நிலையில் வாழ்ந்து வரும் மக்கள் பிரிவினர் மீது குறிப்பாக கவனம் செலுத்துவது அவசியமாகும்'.

இன்று வளர்முக நாடுகளில் சுமார் 440 கோடி மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் சுமார் மூன்றில் ஒரு பங்கினர் கடும் ஏழ்மை நிலையில் வாழ்கின்றனர். ஐந்தில் ஒரு பங்கு மக்கள் படிப்பறிவற்றவர்களாகவும், போசாக்கற்றவர்களாகவும் நவீன சுகாதார வசதிகளற்றவர்களாகவும், வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். நான்கில் ஒரு பங்கினருக்கு போதிய வீட்டு வசதியில்லை. மூன்றில் ஒரு பங்கினருக்கு சுத்தமான நீர் கிடைப்பதில்லை. உலகச் சிறுவர்களில் ஐந்தில் ஒரு பங்கினர் ஐந்தாம் வகுப்பு வரையிலேனும் கூட பாடசாலைக்கு செல்வதில்லை. தென்னாசியாவில் மட்டும் 57.5 கோடி பரம ஏழைகள் (ஒருநாள் வருமானம் 1 அ.டொ. க்கும் குறைவு) வாழ்ந்து வருகின்றனர். அதே வேளையில், 39.5 கோடி மக்கள் படிப்பறிவற்ற பாமரர்களாக இருந்து வருகின்றனர். 7.7 கோடி மக்கள் 40 வயதுக்கு மேல் வாழப் போவதில்லை. இத்தகைய பிரமாண்டமான அளவிலான வறுமை, நோய் மற்றும் எழுத்தறிவின்மை என்பவற்றை உலகமயமாக்கலின் கட்டற்ற சந்தைச் சக்திகளின் மூலம் ஒழித்துவிட முடியும் என நம்புவது வீண் மாயையாகும். சந்தைகள் உற்பத்தியை செயல்திறனுடன் கூடியவிதத்தில் மேற்கொள்ள முடியும். ஆனால், அவற்றால் மானிட அபிவிருத்தியை எடுத்து வர முடியாது. வறிய மக்களுக்கு ஆரம்ப சுகாதார பராமரிப்பு, கல்வி, சுத்தமான நீர், சுகாதாரமான சூழல், இருப்பிடம் மற்றும் வேலை வாய்ப்பு என்பவற்றை வழங்குவதில் அது எத்தகைய பங்கினையும் வகிப்பதில்லை. மனித நலனோம்பல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றிலும் பார்க்க இலாபங்கள் குறித்தே அது பெருமளவுக்கு கவனம் செலுத்தி வருகின்றது. குறுங்கால இலாபங்களை அடிப்படையாகக் கொண்ட சந்தை முன்னுரிமைகள் நீண்டகால தேவைகளை அடிப்படையாகக் கொண்ட தேசிய முன்னுரிமைகளுடன் ஒன்றாக இணைய முடியாது. சமத்துவத்துடன் கூடிய பொருளாதார வளர்ச்சியை கட்டற்ற சந்தைகளினால் எடுத்து வர முடியாது என்பதனை அனுபவம் காட்டுகின்றது. உலகமயமாக்கல் சந்தையை மேலுயர்த்துவதுடன், தனியார் துறையே வளர்ச்சியின் பிரதான இயந்திரமாக இருந்து வருகின்றது. அது அரச தலையீட்டினை ஒழிக்கின்றது. கட்டற்ற சந்தையின் மூலம் மேம்பட்டுவரும் பொருளாதார வளர்ச்சி மக்களுக்கிடையிலும் நாடுகளுக்கிடையிலும் நிலவி வரும் ஏற்றத்தாழ்வுகளை நீக்க மாட்டாது. மேலும், அது வறுமை, தரத்திர நிலை, நோய், அறியாமை, மனித உரிமை மீறல்கள், பாதுகாப்பற்ற நிலை, கலாச்சாரம் மற்றும் சுற்றுச்சூழல் என்பவற்றுக்கான அச்சுறுத்தல்கள் என்பவற்றை ஒழித்துவிடவும் முடியாது. உலகமயமாக்கல் மூலம் கட்டவிழ்க்கப்பட்டுள்ள மிகக் கொடூரமான சந்தை சக்திகளை மிதமான வழியில் நெறிப்படுத்துவதன் மூலம் மட்டுமே வளர்ச்சியையும் சமத்துவத்தையும் சாதித்துக் கொள்ள முடியும்.

## நல்லாட்சிக்கான தேவை

புதிய சட்டவிதிகள், நடைமுறைகள், எல்லைகள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றை தேசிய மட்டத்திலும் உலகளாவிய மட்டத்திலும் அமைத்துக் கொள்வதற்கு ஊடாக உலகமயமாக்கலை

எம்மால் கட்டுப்பாட்டுக்குள் எடுத்து வர முடியுமானால் அல்லது அதற்கு ஒரு மானிட முகத்தோற்றத்தை அளிக்க முடியுமானால் மட்டுமே உலகமயமாக்கலின் மூலம் மக்கள் பயனடைய முடியும். தேசிய மட்டத்தில் சக்திவாய்ந்த அரசாங்கங்களின் மூலம் உலகமயமாக்கலை கட்டுப்படுத்தி, அது அனைவருக்கும் சமமான வாய்ப்புக்களையும் அனுகூலங்களையும் வழங்கக்கூடிய ஒரு நிலையை எடுத்து வர முடியும். பலவீனமான அரசாங்கங்களினால் இதனைச் செய்ய முடியாது. உலகமயமாக்கல் யுகத்திலும் கூட அரசு வகிக்க வேண்டியிருக்கும் பங்கு முன்னதைப் போலவே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்து வருவதே இதற்கான காரணமாகும். வர்த்தகம், முதலீடு மற்றும் குடியகல்வு என்பவற்றின் வாய்ப்புக்களை கையகப்படுத்திக் கொள்வதிலும், உலகமயமாக்கலின் சந்தை சக்திகளினால் உருவாக்கப்பட்டிருக்கும் புதிய ஆபத்துக்களிலிருந்தும் பாதுகாப்பற்ற நிலையிலிருந்தும் மக்களை பாதுகாத்துக் கொள்வதிலும், வெளி அதிர்ச்சிகளிலிருந்து பொருளாதாரத்துக்கு பாதுகாப்பு வழங்குவதிலும், மானிட அபிவிருத்திக்கான வாய்ப்புக்களில் நிலவி வரும் ஏற்றத்தாழ்வுகளை குறைத்து விடுவதிலும், செல்வம் மற்றும் வருமானம் என்பவற்றிலான ஏற்றத்தாழ்வுகளை குறைத்து விடுவதிலும், தேசிய கலாச்சாரத்தையும் சுற்றுச் சூழலையும் பாதுகாத்துக் கொள்வதிலும் அரசு மிக முக்கியமான ஒரு பங்கினை வகிக்க வேண்டியுள்ளது. தேசிய அரசு அது வகிக்க வேண்டியிருக்கும் நிர்ணயகரமான பங்கினை கைவிட்டுவிட வேண்டும் என்பதும் அரச தலையீட்டை குறைத்துக் கெள்ள வேண்டும் என்பதும், சந்தைச் சக்திகள் ஒரு சிலருக்கு அனுகூலங்களை அளிப்பதற்கும் மற்றொரு பிரிவினரைப் புறமொதுக்குவதற்கும் இடமளித்துவிட்டு அது வாளாவிருக்க வேண்டும் என்பதும் உலகமயமாக்கலின் பொருளல்ல. பல்தேசிய நிறுவனங்கள் சமூங்களுக்கோ அல்லது தேசங்களுக்கோ எத்தகைய கடப்பாட்டினையும் கொண்டிருக்கவில்லை. அவை இயங்கி வரும் நாடுகளுக்கு பொறுப்புக் கூற வேண்டிய தேவையும் அவற்றுக்கு இல்லை. சமூக விழுமியங்களுக்கு அவை மதிப்பளிப்பதும் இல்லை. அவற்றுக்கு மனச்சாட்சி என ஒன்று இருந்து வரவில்லை. எனவே, இந்த பல்தேசிய நிறுவனங்கள் எந்த வகையிலும் அரசாங்கங்களுக்கு பதிலீடாக இருந்து வர முடியாது. வளர்முக நாடுகளில் உயர் பொருளாதார வளர்ச்சியை எடுத்து வருவதற்கும், வாய்ப்புக்கள் மற்றும் அனுகூலங்கள் என்பவற்றை ஏற்றத்தாழ்வற்ற விதத்தில் அனைவருக்கும் பகிர்ந்தளிப்பதற்கும் செயல்துடிப்பு மிகுந்த ஒரு பொதுத்துறை அவசியமாகும். இந்த பொதுத்துறை பொருளாதார நடவடிக்கைகளில் முன்னணி பங்கேற்புப் பணியையும் தலையீட்டு பணியையும் ஆற்றி வருதல் வேண்டும். அது இல்லாவிடில் பொருளாதார வளர்ச்சி ஒருபோதுமே மக்களுக்கு சார்பானதாகவோ அல்லது ஏழைகளுக்கு சார்பானதாகவோ இருந்து வர முடியாது, ஆணைக்குழு இந்த விடயத்தை பின்வருமாறு வலியுறுத்தியுள்ளது:

'எவ்வாறிருப்பினும், மூலவளப் பகிர்வுக்கான முதன்மை நிறுவனமாக சந்தை தெரிவு செய்யப்பட்டாலும் கூட, அபிவிருத்தியை முகாமை செய்வதில் அரசு வகிக்க வேண்டியிருக்கும் பங்கு தொடர்ந்தும் முக்கியத்துவத்தை பெற்று வரும். உச்சமட்ட சேமிப்புக்களை கட்டியெழுப்புவதில் அல்லது வருங்கால தலைமுறையினரின் நலன்களை பாதுகாத்துக் கொள்வதில் நாங்கள் சந்தைச் சக்திகளை மட்டும் நம்பியிருக்க முடியாது என்ற விடயத்தினை பொருளியலாளர்கள் நீண்ட காலமாக அங்கீகரித்து வந்துள்ளனர். சந்தை செயன்முறைகளில் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகள் குறைந்த அளவிலான முதலீடுகளை மேற்கொள்ளும் ஒரு போக்கினை அவதானிக்க முடியும். கல்வி, சுகாதாரம் போன்ற இந்த துறைகள் மூலம் சமூகத்துக்கு கிடைக்கும் பயன்கள் முதலீட்டாளர்களுக்கு கிடைக்கும் ஆதாயங்களிலும் பார்க்க அதிகமானவையாகும். இறுதியாக, போட்டிச் சந்தை தானாகவே உருவாகும் என நாங்கள் கருத முடியாது. சந்தைகளை ஒழுங்குபடுத்தும் ஒரு பொறிமுறை அவசியமாகும். உதாரணமாக, புதியவர்கள் சந்தைக்குள் பிரவேசிப்பதற்கான சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்துவதற்கும், தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு வகை செய்வதற்கும், ஏகபோக நடவடிக்கைகளை தடுப்பதற்கும், நியாயமான செயல்திறனுடன் மூலவளங்களை பகிர்ந்தளிப்பதற்கும் இந்த ஒழுங்குபடுத்தும் பொறிமுறை தேவைப்படுகின்றது'.

## தேசிய மற்றும் சர்வதேசிய நல்லாட்சி

சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து எத்தகைய அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வந்தாலும் தேசிய அரசு தனக்கு மிக பொருத்தமான அபிவிருத்தி உத்தியை தீர்மானித்துக் கொள்ளும் அதிகாரத்தை விட்டு கொடுக்கக் கூடாது. உதாரணமாக, சர்வதேச நாணய நிதியத்தினால் வலியுறுத்தப்பட்டு வரும் முழுமையான தாராளமயமாக்கல், ஒழுங்குவிதி தளர்ப்பு மற்றும் தனியார்மயமாக்கல் என்பவற்றை நிராகரிக்கும் ஆற்றலை அது கொண்டிருத்தல் வேண்டும். சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு பொருந்தக்கூடிய பொதுவான தெரிவு செய்யப்பட்ட கொள்கைகளை அது பின்பற்றுதல் வேண்டும். உள்நாட்டு விவசாயம் மற்றும் கைத்தொழில் போன்ற துறைகள் உலக தர நிர்ணயங்களை எட்டும் வரையில் பாதுகாப்பினை வேண்டி நிற்கின்றன. கட்டற்ற வர்த்தகம் உள்நாட்டு விவசாயம் மற்றும் கைத்தொழில் என்பவற்றை பொருட்படுத்துவதில்லை. ஐக்கிய அமெரிக்கா பல்வேறு வர்த்தக கட்டுப்பாட்டு வழிமுறைகளுக்கு ஊடாக இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மிக உயர் மட்டத்தில் பாதுகாப்புவாதத்தைக் கொண்ட ஒரு நாடாக எழுச்சியடைந்தது என்பதனை பலர் மறந்து விடுகின்றார்கள். ஜப்பான் மேலும் ஒரு படி முன்னே சென்று அதன் கைத்தொழில்கள் உலக தர நிர்ணயங்களை எட்டும் வரையில் உலகளாவிய சந்தை சக்திகளுக்கு அதன் கதவுகளை மூடியிருந்தது. அங்கு கைத்தொழில்கள் நன்கு ஸ்தாபிதமாகி வேரூன்றிய பின்னரேயே ஜப்பான் வர்த்தக தாராளமயமாக்கல் குறித்து பேச ஆரம்பித்தது. பல்தேசிய நிறுவனங்கள் உள்நாட்டு நிறுவனங்களை நசுக்கி விழுங்கும் ஒரு போக்கினை காட்டி வருகின்றன. எனவே, நிறுவனங்களின் வெளிநாட்டு உரித்து தொடர்பாக ஓரளவுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது அவசியமாகும். நிலையற்ற குறுங்கால மூலதன அசைவுகள் நாடுகளில் ஸ்திரமற்ற நிலையை எடுத்து வருகின்றன. கிழக்காசிய நெருக்கடி இதற்கான மிகச் சிறந்த உதாரணமாகும். எனவே, மூலதன அசைவுகள் தொடர்பாகவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும். உண்மையிலேயே மலேசியா இத்தகைய கட்டுப்பாடுகளை விதித்ததன் மூலம் நிதி நெருக்கடி மேலும் தீவிரடைவதனை தடுத்துக் கொண்டது. மேலும், மூலதன கட்டுப்பாடுகள் உள்நாட்டு தொழில் முயற்சிகளை நலிவுறச் செய்து ஊக வணிக நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கூடிய விரும்பத்தகாத வெளிநாட்டு முதலீடுகளின் வருகையையும் தடுக்கின்றன. உண்மையிலேயே இத்தகைய கட்டுப்பாடுகள் இல்லாதிருந்த காரணத்தினாலேயே தென்கிழக்காசிய நாடுகள் தமது அபிவிருத்தி தேவைகளுக்கு மிதமிஞ்சிய விதத்தில் மிகப் பிரமாண்டமான அளவிலான வெளிநாட்டு மூலதனத்தின் உட்பாய்ச்சலை எதிர்கொண்டிருந்தன. இந்த மிதமிஞ்சிய அளவிலான நிதிகள் மெய்யாதன துறையில் ஊக வணிக நடவடிக்கைகளிலும் பங்குச் சந்தையிலும் முடக்கப்பட்டதுடன், வெளிநாட்டுக் கடன்களை அபாயகரமான மட்டங்களுக்கு உயர்த்தின.

தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளினால் மட்டும் உலகமயமாக்கலை கட்டுப்படுத்த முடியாது. சர்வதேச அடிப்படையிலான நடவடிக்கை தேசிய அடிப்படையிலான நடவடிக்கைக்கு குறைநிரப்பு செய்தல் வேண்டும். ஐ நா அமைப்பு, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம் போன்ற சர்வதேச நிறுவனங்களில் தமது குரலை ஓங்கி ஒலிக்கச் செய்வதற்கென வளர்முக நாடுகள் கூட்டாக இணைந்து செயற்பட்டு வருதல் வேண்டும். அத்தகைய ஒரு நிலையில் பண்டங்களுக்கான நல்ல விலைகள், நேரடி வெளிநாட்டு முதலீட்டின்

அதிக அளவிலான பாய்ச்சல், உத்தியோக பூர்வ உதவியின் அதிக அளவிலான பாய்ச்சல், வளர்ச்சியடைந்த நாடுகளின் சந்தைகளை சென்றடையும் வாய்ப்பு, கடன் நிவாரணம் போன்ற வளர்முக நாடுகளின் முக்கியமான நலன்களை பாதுகாத்துக் கொள்வதற்கு அவசியமான வழிமுறைகளை வகுத்து கொள்வதற்கான வாய்ப்புக் கிட்டும். தற்பொழுது அரசாங்கங்களுக்கிடையிலான கொள்கை ஆக்கம் பிரதான கைத்தொழில் நாடுகளின் கைகளிலும், அந்நாடுகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வரும் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம் போன்ற நிறுவனங்களின் கைகளிலும் இருந்து வருகின்றது. சர்வதேச நடவடிக்கை அவசியமாக இருந்து வரும் மிக நிர்ணயகரமான ஒரு துறை குறுங்கால மூலதன அசைவுகளாகும். இத்தகைய மூலதன அசைவுகள் வளர்முக பொருளாதாரங்களில் சீர்குலைவுகளை எடுத்து வருகின்றன. இன்று உலக வர்த்தகம் உலக வர்த்தக நிறுவனத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு வருகின்றது. ஆனால், அதே வேளையில், நாளொன்றுக்கு பல்லாயிரம் கோடி அ.டொ.களில் மேற்கொள்ளப்பட்டு வரும் நாணயக் கொடுக்கல் வாங்கல்கள் எத்தகைய கட்டுப்பாட்டுக்கும் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. கிழக்காசிய நெருக்கடியை தோற்றுவித்த ஊக வணிகர் என நம்பப்படும் ஜோர்ஜ் ஸொரோஸ் கூட நிதிச் சந்தைகள் இப்பொழுது உள்ளார்ந்த ரீதியில் ஊசலாட்டத் தன்மையை கொண்டதாக இருந்து வருவதாகவும், குறுங்கால மூலதன அசைவுகள் மீதான சர்வதேச கட்டுப் பாட்டுக்கு அவை ஆதரவாக இருந்து வருவதாகவும் கூறியுள்ளார். 'பொதுவில் மூலதனச் சந்தைகள் தொடர்பாக உயர் அளவிலான கண்காணிப்பும் ஒழுங்கு படுத்தலும் மேற்கொள்ளப்பட்டு வரவேண்டும் என நான் விரும்புகிறேன். கட்டற்ற மூலதனப் பாய்ச்சல் உகந்தது அல்ல என்பதே எனது கருத்தாகும். இந்த நிலையில் ஸ்திர நிலையை எடுத்து வருவதற்கு அவசியமான ஏதேனும் ஒரு பொறிமுறையை நாங்கள் உருவாக்க வேண்டும்'.

ஐ.நா. வின் மானிட அபிவிருத்தி அறிக்கை (1999) பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றது: 'உறுதியான கட்டடுப்பாட்டு நிர்வாகம் இல்லாதிருந்து வருமானால் 21 ஆவது நூற்றாண்டில் உலகளாவிய பல முரண் பாடுகள் யாதார்த்தமாக வெடிக்க முடியும். அதாவது, தேசிய மற்றும் நிறுவன நலன்களை மேம்படுத்தும் வர்த்தகப் போர்கள், கட்டுப்பாடற்ற நிதி நலிவுநிலை தோற்றுவிக்கும் உள்நாட்டு போராட்டங்கள், தங்கு தடையற்ற விதத்தில் பெருகிவரும் உலகளாவிய குற்றச்செயல்கள் எடுத்து வரும் பாதிப்புக்கள் என்பன உலகில் பெரும் நெருக்கடிகளை தோற்றுவிக்கும்'.

'உலகளாவிய கொள்கை உருவாக்கத்தின் கட்டமைப்புக்கள் மற்றும் செயன்முறைகள் என்பன பிரதிநிதித்துவ அடிப்படையில் அமையவில்லை. சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, குழு 7, குழு 10, குழு 22, பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பு மற்றும் உலக வர்த்தக நிறுவனம் போன்ற முதன்மையான பொருளாதார அமைப்புக்களில் செல்வந்த நாடுகளின் கையே ஓங்கியுள்ளது. வறிய நாடுகளும் வறிய மக்களும் இவற்றில் சிறு அளவிலான செல்வாக்கினை மட்டுமே கொண்டுள்ளார்கள். இந்நிறுவனங்களில் வறிய நாடுகளின் குரல் ஓங்கி ஒலிக்க வில்லை. இந்த அமைப்புக்கள் மேற்கொள்ளும் முடிவுகளிலும் ஒளிவு மறைவற்ற தன்மை மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. இத்தகைய நிறுவனங்களில் சிவில் சமூகத்தின் கருத்துக்களை முன்வைப்பதற்கான அரங்குகளும் இருந்து வரவில்லை. பாரிய நிறுவனங்களும் தனி நபர்களும் பின்பற்ற வேண்டியிருக்கும் தார்மீக நெறிமுறைகள் தொடர்பாகவும் மனித உரிமைகளுக்கு மதிப்பளிப்பது தொடர்பாகவும் உறுதி செய்து கொள்வதற்கென எத்தகைய பொறிமுறை களும் இருந்து வரவில்லை. சுருக்கமாகச் சொல்வதானால் மனித நலனோம்பலுக்கென சக்தி வாய்ந்த மற்றும் தேசிய சர்வதேச நிருவாக கட்டமைப்பொன்று அவசியமாக இருந்து வருகின்றது'.

'கடந்த ஓரிரு தசாப்தங்களில் இடம்பெற்று வந்திருக்கும் உலகமயமாக்கலின் பெரும் பாய்ச்சல் ஓர் ஆரம்பம் மட்டுமேயாகும். உலகளாவிய ரீதியில் ஒருங்கிணைக்கப்பட்ட உலகம், உலகளாவிய சந்தைப் போட்டியின் அனுகூலங்களைப் பாதுகாத்து, உலகமய மாக்கல் சக்திகளை மானிட முன்னேற் றத்துக்கு உதவும் விதத்தில் திசைதிருப்ப வேண்டுமானால் மிகச் சக்தி வாய்ந்த ஒரு நிர்வாக முறை அதற்கு அவசியமாகும்.'

### கட்டுப்பாடுகள் அபிவிருத்தியை தடுத்து நிறுத்துமா?

கட்டுப்பாடுகள் வளர்முக நாடுகளில் வர்த்தகம், மூலதனம், தொழில்நுட்பம் மற்றும் தகவல் என்பவற்றின் தங்கு தடையற்ற பாய்ச்சலை தடுத்து நிறுத்தி, பொருளாதார வளர்ச்சியை மந்தமடையச் செய்ய முடியும் எனப் பலர் அச்சம் தெரிவித்துள்ளார்கள். குறிப்பாக, சர்வதேச நாணய நிதியம் வளர்ச்சிக்கு தாராளமயமாக்கல் அத்தியா வசியமான ஒரு முன் நிபந்தனையாக இருந்து வருகின்றது என்பதனை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றது. இங்கு தாராளமயமாக்கலின் முக்கியத்துவம் மிகைப்படுத்திக் காட்டப்படுவதுடன், கட்டுப்பாடுகளின் அபாயம் பூதாகார மாக்கப்படுவதுபோல் தெரிகிறது. உதாரணமாக, பின்வரும் விடயங்களை கவனத்தில் எடுப்போம். கிழக்காசிய நாடுகள் அண்மைய வருடங்களில் உலகில் மிக உயர்ந்த பொருளாதார வளர்ச்சி வீதங்களைக் கொண்டிருந்தன. மேலும், அவை தமது நிதித் துறையை தாராளமயமாக்கியும் இருந்தன. ஆனால், அந்நாடுகளில் பொருளாதாரத்தின் ஏனைய பல துறைகள் தாராளமயமாக்கப் பட்டிருக்கவில்லை. தீர்வை கட்டுப்பாடுகள் மூலமும் தீர்வை அல்லாத கட்டுப்பாடுகள் மூலமும் அவை தமது உள்நாட்டு கைத்தொழில்களுக்கு பாதுகாப்பு அளித்திருந்தன. தாய்லாந்தில் 1993 இல் இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து பொருட்கள் மீதான தீர்வை 41.5 சதவீதமாக காணப்பட்டது. இது இலங்கையின் அளவையும (23.0 சதவீதம்) மிகைத்துக் காணப்பட்டது. 1980 களின் நடுப் பகுதியில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் தொடர்பான சராசரி தீர்வை இலங்கையில் 20 சதவீதமாக இருந்து வந்தது. ஆனால், அதே வேளையில் அது இந்தோனேஷியா, தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் 50 சதவீதமாகவும், மலேசியாவில் 37 சதவீதமாகவும், தென் கொரியாவில் 24 சதவீதமாகவும் நிலவி வந்தது. தென் கொரியாவைப் போன்ற பெரும்பாலான கிழக்காசிய நாடுகள் தமது உள்நாட்டுக் கைத்தொழில்களுடன் போட்டியிட்ட பண்டங்கள் தொடர்பாக மிகக் கடுமையான இறக்குமதி கட்டுப்பாடுகளை விதித்திருந்தன.

உள்நாட்டு தொழில்முயற்சிகளுக்கு வழிகாட்டுவதிலும் ஆதரவு வழங்குவதிலும் பாதுகாப்பு அளிப்பதிலும் அரசு மிகவும் நிர்ணயகரமான ஒரு பங்கினை வகித்து வந்திருப்பதுடன், பொருளாதார நடவடிக்கை களிலும் முனைப்புடன் பங்கேற்றிருந்தது. உதாரணமாக, மலேசியாவில் 1990-1995 காலப் பிரிவின் போது நாட்டின் மொத்த முதலீடுகளின் 26 சதவீதத்துக்கு அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகள் பொறுப்பாக இருந்து வந்தன. இது இந்தோனேசியா, தென் கொரியா ஆகிய நாடுகளில் சுமார் 15 சதவீதமாக காணப்பட்டது. இந்தோனேசியா 6000 கோடி அ.டொ. மதிப்புடன் கூடிய 164 அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகளை கொண்டிருந்ததுடன், அவற்றில் 700,000 தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். புலோக் என்ற அரசுக்கு சொந்தமான நிறுவனம் அரிசி, கோதுமை, சீனி மற்றும் மீன் வகைகள் போன்ற அடிப்படை பண்டங்களின் இறக்குமதியில் ஏகபோக நிலையை அனுபவித்து வந்தது. தாய்வான் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளிலுள்ள மிகப் பெரிய வங்கிகளில் பெரும்பாலானவை அரசுக்குச் சொந்த மானவையாகும். உலகின் பெருமளவுக்கு செயல்திறன் மிக்க விமானப் போக்குவரத்து நிறுவனமான சிங்கப்பூர் எயார்லைன்ஸ்,

சிங்கப்பூர் ரெலிகொம் நிறுவனம் மற்றும் தென்கிழக்காசியாவின் மிகப் பெரும் வங்கியான சிங்கப்பூர் அபிவிருத்தி வங்கி என்பவற்றின் பெரும் பகுதி சிங்கப்பூர் அரசாங்கத்துக்குச் சொந்தமானதாகும். அரசாங்க தொழில் நிறுவனங்களும் மற்றும் அரசாங்கத்துடன் பிணைக்கப்பட்டிருக்கும் தொழில் நிறுவனங்களும் சிங்கப்பூரின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 60 சதவீதத்தை உற்பத்தி செய்து வருகின்றன என்ற விடயத்தை பலர் அறியமாட்டார்கள். இலங்கையின் கொள்கை கர்த்தாக்களில் சிலர் சிங்கப்பூர் நாட்டை ஒரு சுதந்திர சந்தைப் பொருளாதாரம் என தவறாக அனுமானித்து, இலங்கை பின்பற்ற வேண்டிய ஒரு முன்மாதிரியாக சிங்கப்பூரை ஆக்கிக் கொண்டுள்ளார்கள்.

அது மட்டுமன்றி பெரும்பாலான கிழக்காசிய நாடுகள் சொத்துக்களின் வெளிநாட்டு உடமை தொடர்பாகவும் பல கட்டுப்பாடுகளை கொண்டுள்ளன. தென் கொரியாவில் வர்த்தக நோக்கங்களுக்காக மட்டுமே வெளிநாட்டவர்கள் நிலத்தை சொந்தமாக வைத்திருக்க முடியும். அங்கு 0.039 சதவீதம் தேசிய நிலம் மட்டுமே வெளிநாட்டவர்களின் உரித்தில் இருந்து வருகின்றது. மலேசியா உள்நாட்டு வங்கியில் வெளிநாட்டு உரித்தினை 30 சதவீதத்துக்கு கட்டுப்படுத்தியுள்ளது. தாய்லாந்தில் வெளிநாட்டு நிறுவனங்கள் நேரடியாக சொத்துக்களை வாங்க முடியாது. அதற்கென அவை தாய்லாந்து நாட்டை சேர்ந்த பங்காளர்களுடன் கூட்டுத்தொழில் முயற்சிகளை ஆரம்பிக்க வேண்டியிருப்பதுடன், , அவற்றில் தாய்லாந்துகாரர்களே கட்டுப்பாட்டு அதிகாரத்தை கொண்டிருத்தல் வேண்டும். தென் கொரியா, தாய்வான் போன்ற நாடுகளில் பங்குச் சந்தைகளில் வெளிநாட்டவர்களின் பிரவேசம் தொடர்பாக வரையறைகள் நிலவி வருகின்றன.

இந்நாடுகளைப் பொறுத்தவரையில் வெளிநாட்டு உரித்து தொடர்பான கட்டுப்பாடுகள் தீர்வை, இறக்குமதிக் கட்டுப்பாடுகள், அரசுடமை மற்றும் அரசின் முனைப்பான தலையீடு என்பன வெளிநாட்டு முதலீடுகளை தடுத்து நிறுத்தி இருப்பதாகவோ பொருளாதார வளர்ச்சியை குறைவடையச் செய்திருப்பதாகவே தெரியவில்லை. 1990-1997 எட்டாண்டு காலத்தின் போது இந்நாடுகளுக்குள் கணிசமான அளவிலான வெளிநாட்டு முதலீடுகள் வந்து குவிந்தன. சிங்கப்பூர் 5200 கோடி அ.டொ., மலேசியா 4000 கோடி அ.டொ., இந்தோனேசியா 2700 கோடி அ.டொ. மற்றும் தாய்லாந்து 1700 கோடி அ.டொ. இங்கு குறிப்பிட வேண்டிய மற்றொரு சுவாரஸ்யமான விடயம் சீனா சம்பந்தப்பட்டதாகும். அதாவது, சீனா மத்தியில் கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரமொன்றை பராமரித்து வருகின்றது. அனால், அந்நாடு வேறு எந்தவொரு வளர்முக நாட்டைப் பார்க்கிலும் அதிக அளவிலான வெளிநாட்டு நேரடி முதலீட்டினை பெற்றுக் கொண்டுள்ளது. 1990-1997 காலப் பிரிவின் போது அது 20,000 கோடி அ.டொ. களை நேரடி வெளிநாட்டு முதலீடுகளாக பெற்றுக் கொண்டுள்ளது. மேலும், சீனாவில் பல்தேசிய நிறுவனங்களின் இணை நிறுவனங்கள் 15,966 இருந்து வந்தன. வியட்னாமும் சீனாவைப் போலவே மத்தியில் கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை கொண்ட ஒரு நாடாகும். மேலும், அங்கு தாராளமயமாக்கல் மேற்கொள்ளப் பட்டிருக்கவுமில்லை. ஆனால், அந்நாடு இதே காலப் பிரிவின்போது 1100 கோடி அ.டொ. களை வெளிநாட்டு நேரடி முதலீடுகளாக பெற்றிருந்தது. இது இந்தியா பெற்றுக்கொண்ட தொகையான 900 கோடி அ.டொ.களிலும் பார்க்க அதிகமானதாகும். தாராளமயமாக்கல் இல்லாதிருக்கும் நிலையை வெளிநாட்டு நேரடி முதலீடுகள் முதலீட்டுக்கான ஓர் இடையூறாக கருதுவதில்லை என்ற விடயத்தை இது சுட்டிக் காட்டுகின்றது.

மூலதனம் தொடர்பான கட்டுப்பாடுகள் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான ஒரு தடங்கலாக இருந்து வரவில்லை என்ற விடயத்தை சீனாவின் அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது. சீனா ஆசியாவிலே மிகவும் இறுக்கமான மூலதனக் கணக்கு கட்டுப்பாடுகளைக் கொண்ட ஒரு நாடாக இருந்து வருகின்றது. ஆனால், அக்கட்டுப்பாடுகள் எவ்வகையிலும் வெளிநாட்டு நேரடி முதலீட்டாளர்களுக்கு ஓர் இடையூறாக இருந்து வரவில்லை. அவை பொருளாதார வளர்ச்சியை பாதித்திருக்கவும் இல்லை. மூலதனக் கணக்கு தொடர்பான கட்டுப்பாடுகள் ஒரு பொருளாதாரத்துக்கு வெளி அதிர்ச்சிகளிலிருந்து பாதுகாப்பினை வழங்க முடியும் என்பதனையும் சீனாவின் அனுபவம் எடுத்துக் காட்டுகின்றது. கிழக்காசிய நெருக்கடியின் போது சீனா எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. மூலதன கணக்கு தொடர்பாக அது கொண்டிருந்த கட்டுப்பாடுகளே இதற்கான காரணமாகும். சீனாவைப் போலவே தென்னாசியாவும் அதன் நிதித் துறையை தாராளமயமாக்கியிருக்கவில்லை. அத்துடன் அங்கு மூலதனக் கட்டுப்பாடுகளும் நிலவி வந்தன. அதன் காரணமாக கிழக்காசிய நெருக்கடியின் போது குறுங்கால ஊக மூலதனம் அங்கு மிதமிஞ்சிய அளவில் பாய்வதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை

வெளிநாட்டு முதலீட்டினை தெரிவு அடிப்படையில் கட்டுப்படுத்துவதன் மூலம் உயர் பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு சாதித்துக் கொள்ள முடியும் என்பதற்கு தென் கொரியாவும் ஓரளவுக்கு தாய்வானும் உதாரணங்களாக இருந்து வருகின்றன. தென் கொரியாவின் உள்நாட்டு சேமிப்புக்கள் மௌஉஉ வின் 40 சதவீதத்துக்கும் மேற்பட்டதாக இருந்து வருவதனால் அதற்கு வெளிநாட்டு நேரடி முதலீடு தேவைப்படவில்லை. உள்நாட்டு சேமிப்புக்கள் மிகவும் தாழ்ந்த மட்டத்தில் நிலவி வரும் வளர்முக நாடுகளுக்கே இத்தகைய வெளிநாட்டு முதலீடுகள் தேவைப்படுகின்றன. இந்த நிலையில் தென் கொரியா வெளிநாட்டு முதலீட்டின் பாய்ச்சலை தெரிவு அடிப்படையில் கட்டுப்படுத்தியது. உள்நாட்டு தொழில் முயற்சிகளுக்கு உதவுவதற்கு தேவைப்படும் வெளிநாட்டு முதலீடுகளை அது வரவேற்றது. அதே வேளையில், உள்நாட்டு தொழில் முயற்சிகளுடன் போட்டியிட்ட தொழில் முதலீடுகளை அல்லது அவற்றுக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்த முதலீடுகளை அது ஏற்கவில்லை. தெரிவு அடிப்படையிலான இந்தக் கட்டுப்பாடு காரணமாக தென் கொரியாவுக்கான வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சல் சார்புரீதியில் குறைந்த மட்டத்திலேயே நிலவி வந்துள்ளது. இது 1990-1997 காலப் பிரிவின் போது 1100 கோடி அ.டொ. களாக மட்டுமே (சிங்கப்பூர் 5200 கோடி அ.டொ., மலேசியா 4000 கோடி அ.டொ.) இருந்து வந்துள்ளது. தென் கொரியாவுக்கான வெளிநாட்டு முதலீடுகளின் பாய்ச்சல் குறைந்த அளவில் காணப்பட்ட போதிலும் கூட சாதனை மட்டங்களான பொருளாதார வளர்ச்சியை அந்நாடு சாதித்துக் கொள்வதற்கு அது இடையூறாக இருந்து வரவில்லை. அதாவது, 1970-2000 காலப் பிரிவைக் கொண்ட 30 வருடத்தின் போது தென் கொரியாவின் பொருளாதார வளர்ச்சி 9 சதவீதமாக இருந்து வந்துள்ளது. அதேபோல தாய்வானும் சார்புரீதியில் குறைந்த அளவிலான வெளிநாட்டு முதலீட்டை (110 கோடி அ.டொ) பெற்றுக் கொண்டிருந்த போதிலும் இதே காலப் பிரிவின்போது கொரியா சாதித்துக்கொண்ட அதே வளர்ச்சி விகிதத்தை எட்டியிருந்தது.

ஐ.நா. வின் மானிட அபிவிருத்து அறிக்கை (1999) பின்வருமாறு சுட்டிக்காட்டுகின்றது: 'பொருளாதாரக் கொள்கை உருவாக்கம் சித்தாந்தத்தைப் பார்க்கிலும் நடப்பு நிலைமைகளினாலேயே நெறிப்படுத்தப் படுதல் வேண்டும். அதாவது, சிலி நாட்டுக்கு பொருத்தமான ஒரு விடயம் ஆர்ஜன்ரீனாவுக்குப் பயனளிக்காது போகலாம். அதேபோல மொரிஸசுக்கு சரியான ஒரு விடயம் மடகஸ்காருக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம் என்பதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். திறந்த சந்தைகளுக்கு, செயற்படுவதற்கான நிறுவனங்களும் அனுகூலங்கள் மற்றும் வாய்ப்புக்கள் என்பவற்றின் சமத்துவமான பகிர்வினை உத்தரவாதப்படுத்தக் கூடிய கொள்கைகளும் அவசியமாகும். நிறுவனங்கள் மற்றும் பாரம்பரியங்கள் என்பவற்றில் பாரிய அளவிலான வேறுபாடுகள் நிலவி வருகின்றன. இந்த நிலையில் பொருளாதார கொள்கைகளை பின்பற்றுவதிலும் அவற்றின் அமுலாக்கலுக்

கென நேரம் குறிப்பதிலும் உலகெங்கிலும் உள்ள நாடுகள் நெகிழ்ச்சித் தன்மையை கொண்டிருத்தல் அவசியமாகும்'.

**உலகமயமாக்கலும் இலங்கையும்**

இலங்கையின் பொருளாதாரம் கடந்த இருபது வருட காலமாக படிப்படியாக தாராளமயமாக்கப்பட்டு வந்துள்ளது. தீர்வைகள், வர்த்தகக் கட்டுப்பாடுகள் மற்றும் வரிகள் என்பன குறைக்கப் பட்டுள்ளன. விலைக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. வணிகம் தொடர்பான ஒழுங்குவிதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. அரச துறையின் பங்கு குறைக்கப் பட்டுள்ளது. பிரதானமாக சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டுதலின் கீழ் வெளி நாட்டு மூலதனத்தை கவர்ந்திழுப்பதற்கென பெருந்தொகையான ஊக்குவிப்புக்களும் சலுகைகளும் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தனியார் முதலீட்டுக்கு குறிப்பாக வெளிநாட்டு முதலீட்டுக்கு உசிதமான ஒரு சூழ்நிலை நாட்டுக்குள் உருவாக்கப்பட் டுள்ளது. தனியார் துறை வளர்ச்சியை உந்திச் செல்லும் முக்கியமான இயந்திரமாக இருந்து வரும் என்ற விடயத்தை அரசாங்கம் திட்டவட்டமாக தெளிவுபடுத்தியுள்ளது. நாட்டுக்குள் வெளிநாட்டு மூலதனம் வந்து சேர்வதற்கென கதவுகள் அனைத்தும் திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்றும் அரசாங்கம் கூறியுள்ளது. இந்த முயற்சி களின் பின்னணியிலிருந்து வந்த அரசாங்கத்தின் குறிக்கோள் வர்த்தகம் மற்றும் முதலீடு என்பவற்றின் அனுகூலங் களை அறுவடை செய்து கொள்ளும் பொருட்டு நாட்டை உலகளாவிய சந்தை யுடன் ஒருங்கிணைப்பதாகும். நாடு இந்த அனுகூலங்களை பெற்றுக் கொண்டுள்ளதா?

**குறைந்த பொருளாதார வளர்ச்சி**

செல்வச் செழிப்பு நிலைக்கான மிகச் சிறந்த குறிகாட்டி பொருளாதார வளர்ச்சி விகித மாகும். தாராளமயமாக்கல் இடம்பெற்று வந்த வருடங்களின் போது இலங்கை மிதமான ஒரு பொருளாதார வளர்ச்சி விகிதத்தை மட்டுமே அனுபவித்து வந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது. திறந்த பொருளாதாரம் செயற்பட்டு வந்த (1980-1998) 19 வருட காலத்தின்போது சராசரி பொருளாதார வளர்ச்சி 4.7 சதவீதமாக மட்டுமே இருந்து வந்துள்ளது. உலக பொருளாதாரம் வளர்ச்சியடைந்து வந்த ஒரு கால கட்டத்தில் உலக வர்த்தகம் துரிதமாக விரிவடைந்து வந்த ஒரு கால கட்டத்தில் இந்த மிதமான வளர்ச்சி வீதம் எட்டப்பட்டுள்ளது. உண்மையிலேயே (1980-1989) பத்து வருடங்களின் போது சராசரி வளர்ச்சி 4.2 சதவீதமாக இருந்து வந்தது. இது 1990-1998 ஒன்பது வருட காலத்தின்போது மட்டுமே 5.2 சதவீதமாக அதிகரித்திருந்தது. இதற்கு மாறாக ஆசிய வேங்கைகளான தென் கொரியா, தாய்வான், ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் (1960-1996) 37 வருட காலப்பிரிவின் போது ஆண்டொன்றுக்கு சுமார் 9 சதவீதம் நிலையான வளர்ச்சியை சாதித்துக் கொண்டுள்ளன. அதே வேளையில், தென்கிழக்காசிய நாடுகள் 8 சதவீத வளர்ச்சியை சாதித்திருந்தன.

இலங்கையில் பொருளாதார வளர்ச்சி மிகவும் மந்தமான முறையில் இடம்பெற்று வந்தமைக்கான பிரதான காரணம் முதலீட்டு மட்டம் குறிப்பாக வெளிநாட்டு முதலீடுகளின் மட்டம் மிகவும் தாழ்ந்த நிலையில் இருந்து வந்ததாகும். கடந்த 5 வருட காலப் பிரிவின்போது "இலங்கையின் சராசரி உள்நாட்டு முதலீடு மொ.உ.உ வின் 25 சதவீதமாக இருந்து வந்துள்ளது. கிழக் காசிய நாடுகளில் இது 35 சதவீதமாகவும், தென்கிழக்காசிய நாடுகளில் 40 சதவீதமாகவும் இருந்து வந்துள்ளது. 1994-1998 ஐந்து வருட காலப் பிரிவின் போது வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் சராசரி வருடாந்த உட்பாய்ச்சல் 105 மில்லியன் அடொ களாக (அல்லது மொத்த உள்நாட்டு முதலீட்டின் சுமார் 3 சதவீதமாக) இருந்து வந்துள்ளது. இதற்கு மாறாக (1991-1995) ஐந்து வருட காலப் பிரிவின் போது (நெருக்கடிக்கு முன்னர்) மலேசியா வின் சராசரி வருடாந்த வெளிநாட்டு நேரடி முதலீடு 487 கோடி அடொ களாக (இலங்கை பெற்றுக் கொண்ட அளவிலும் பார்க்க 46 மடங்கு அதிகமானதாக) இருந்து வந்தது. உதாரணமாக, 1996 இல் இலங்கைக்குள் வந்த நேரடி வெளிநாட்டு முதலீடு 80 மில்லியன் அடொ களாக (மொ.உ.உ வின் 0.6 சதவீதமாக) இருந்தது. அதேவேளையில், இது மலேசியாவில் 450 கோடி அடொ களாக (மொ.உ.உ வின் 4.5 சதவீதமாக) காணப் பட்டது. எனவே, இலங்கை தாராளமய மாக்கல் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு வெளிநாட்டு முதலீடுகளை பெற்றிருக்க வில்லை என்றே கூற வேண்டியுள்ளது.

நாட்டுக்குள் வந்த சிறிய அளவிலான வெளிநாட்டு முதலீடுகளும் கூட குறிப்பாக ஆடை ஏற்றுமதிக் கைத்தொழில் துறைக்குள்ளேயே சென்றிருப்பது போல் தோன்றுகின்றது. இதற்கு குறைந்த கூலி விகிதங்களும் ஐக்கிய அமெரிக்க சந்தையில் பயன்படுத்தப்படாமலிருக்கும் கோட்டாக்களை இலங்கை வைத்திருப்பதும் காரணமாகும். எனவே, கடந்த 15 வருட காலத்தின்போது நாட்டின் கைத்தொழில் ஏற்றுமதிகள் மொத்த ஏற்றுமதிகளின் 19 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாக அதிகரித்துச் சென்றுள்ளன. கைத்தொழில் ஏற்றுமதிகளில் 62 சதவீதம் ஆடை ஏற்றுமதிகளாக இருந்து வருவதுடன், 7 சதவீதம் புடவை ஏற்றுமதிகளாக உள்ளன. கடந்த 10 வருட காலத்தின்போது கைத் தொழில் ஏற்றுமதிகள் (பிரதானமாக ஆடை ஏற்றுமதிகள்) 8 மடங்கினால் அதிகரித் துள்ளன. இலங்கையின் ஆடை மற்றும் புடவை கைத்தொழிலின் விரிவாக்கத்துக்கு இந்த வகையில் உலகமயமாக்கல் உதவியிருக்க முடியும். ஆனால், ஏனைய கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கோ அதன்மூலம் ஏற்றுமதி அபிவிருத்தியை பன்முகப்படுத்துவதற்கோ அது எத்தகைய பங்களிப்பையும் வழங்கியிருக்கவில்லை. புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் 1998 இல் நாட்டின் கைத்தொழில் ஏற்றுமதிகளில் 69 சதவிகிதமாக இருந்து வந்துள்ளன. இது இலங்கை குறிப்பிட்ட ஒரு கைத்தொழிலில் மிதமிஞ்சிய அளவில் தங்கியிருக்கும் நிலையை சுட்டிக் காட்டுகின்றது. குறிப்பிட்ட ஒரு ஏற்றுமதிப் பண்டத்தின்

**அட்டவணை 3**

**உணவுப் பயிர்களின் உற்பத்தி 1994-1998**
**(மெற்றிக் தொன் '000)**

| | 1994 | 1998 | % மாற்றம் |
|---|---|---|---|
| நெல் | 2,684 | 2,692 | 0.3 |
| சீனி | 72 | 62 | -14.8 |
| பெரிய வெங்காயம் | 81 | 17 | -78.6 |
| சின்ன வெங்காயம் | 82 | 38 | -53.8 |
| உருளைக் கிழங்கு | 71 | 26 | -63.3 |
| மிளகாய் | 32 | 16 | -51.1 |
| சோளம் | 67 | 23 | -49.6 |
| குரக்கன் | 5 | 4 | -13.7 |
| உளுந்து | 23 | 16 | -31.9 |
| கௌபி | 18 | 13 | -25.6 |
| எள்ளு | 15 | 8 | -43.4 |
| நிலக்கடலை | 6 | 6 | -61.4 |
| சோயா அவரை | 3 | 1 | -81.3 |

(மத்திய வங்கி வருடாந்த அறிக்கை, 1998)

மீது - ஆடை ஏற்றுமதிகளில் - மிதமிஞ்சிய அளவில் தங்கியிருக்கும் நிலை 1998 இலும் 1999 இன் முதல் அரைப் பகுதியிலும் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது. இலங்கையின் புடவை மற்றும ஆடை ஏற்றுமதிகளின் பெறுமதி 1997 இல் 20 சததவிகிதத்தினால் அதிகரித்திருந்தது. ஆனால், 1998 இல் இதில் 8 சதவிகித அதிகரிப்பு மட்டுமே ஏற்பட்டிருந்தது. 1999 இன் முதல் அரைப் பகுதியின்போது நிலைமை மேலும் மோசமடைந்திருந்தது. இது நாட்டின் மொத்த ஏற்றுமதிகளில் வீழ்ச்சி தோன்றுவதற்கும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி மந்தமடைவதற்கும வழிகோலியது.

### பண்ட ஏற்றுமதிகளின் மோசமான செயற்பாடு

ஆடைக் கைத்தொழிலை விரிவாக்குவதற்கு உலகமயமாக்கல் உதவி அளித்திருந்தால் விவசாய ஏற்றுமதிகளை தூண்டுவதில் தெளிவாகவே அது தோல்வி கண்டுள்ளது. கைத்தொழில் ஏற்றுமதிகள் பெறுமதி அடிப்படையில் எட்டு மடங்கினால் அதிகரித்திருந்த அதே வேளையில், கடந்த பத்து வருட காலத்தின் போது விவசாய ஏற்றுமதிகள் மூன்று மடங்கினால் மட்டுமே அதிகரித்திருந்தன. விவசாய ஏற்றுமதி களில் ஏற்பட்ட மிதமான வளர்ச்சிக்கு பிரதானமாக பங்களிப்பினை வழங்கிய ஒரு பயிர் தேயிலையாகும். கடந்த பத்து வருடகாலத்தின்போது தேயிலை உற்பத்தியில் 35 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டு வந்துள்ளது. அதே வேளையில் தெங்கு பொருட்களின் உற்பத்தியில் 3 சதவீத அதிகரிப்பே ஏற்பட்டிருந்தது. மறுபுறத்தில் இறப்பர் உற்பத்தியில் 14 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. 1994-1998 ஐந்து வருட காலப்பிரிவை எடுத்து நோக்கினால் சற்று மாறுபட்ட ஒரு தோற்றம் தென்படுகிறது. தேயிலை உற்பத்தியில் 14 சதவிகித அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. தெங்குப் பொருள் உற்பத்தியில் 3 சதவிகித அதிகரிப்பும் இறப்பர் உற்பத்தியில் 9 சதவிகிதமான வீழ்ச்சியும் காணப்படுகிறது. கடந்த ஐந்து வருட காலத்தின்போது பல சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி அளவிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. மரக்கறி வகைகள் 53 வீதம், பழங்கள் 38 வீதம், கோப்பி 64 வீதம், கறுவா 15 வீதம், ஏலக்காய் 38 வீதம், வெற்றிலை 28 வீதம், தயாரிக்கப்பட்ட புகையிலை 26 வீதம், ஏனைய சிறு விவசாயப் பண்டங்கள் 68 வீதம். கடந்த 5 வருட காலத்தின்போது கைத்தொழில் ஏற்றுமதிகளின் அளவு ரீதியில் 32 வீதம் அதிகரிப்பும் விவசாய ஏற்றுமதிகளின் அளவு ரீதியில் 10 சதவிகித அதிகரிப்பும் ஏற்பட்டிருந்தது.

### உள்நாட்டு விவசாயம்

கடந்த ஐந்து வருட காலத்தின்போது பிரதானமாக உலகமயமாக்கல் மற்றும் சுதந்திர வர்த்தகம் என்பவற்றின் விளைவாக உள்நாட்டு விவசாயத்தில் ஒரு சீர்குலைவு நிலை ஏற்பட்டுள்ளது. தீர்வைகள் மற்றும் தீர்வை அல்லாத தடங்கல்கள் என்பவற்றை குறைத்ததன் மூலம் அல்லது நீக்கியதன் மூலம் இறக்குமதிகள் தாராளமயமாக்கப் பட்டன. இதன் விளைவாக சந்தையில் இறக்குமதிப் பண்டங்கள் வந்து குவிந்த துடன், அது உள்நாட்டு விவசாயத்தின் மீது பெரும் பாதிப்பினை எடுத்து வந்தது. அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு பிரதான உணவுப் பயிர்களின் உற்பத்தி ஒன்றில் வீழ்ச்சி கண்டுள்ளது, அல்லது தேக்க நிலையில் இருந்து வருகின்றது. நாட்டின் முதன்மை உணவுப் பண்டமான நெல்லின் உற்பத்தி கடந்த ஐந்து வருட காலமாக அனேகமாக தேக்கமுற்று காணப்படுகின்றது. 1998 இல் பதிவு செய்யப் பட்ட நெல் உற்பத்தி 2,692 மெ.தொ. களாகும். இது 1994 இன் உற்பத்தி மட்டத்துக்கு இணையானதாக இருந்து வருகின்றது. இதே காலப்பிரிவின் போது சீனி உற்பத்தியில் 15 சதவீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 1998 இல் பதிவு செய்யப் பட்ட சீனி உற்பத்தி 61,549 மெ தொ. களாகும். இது உள்நாட்டு நுகர்வின் 10-12 சதவீதத்தை மட்டுமே நிறைவு செய்து வைத்தது. உப உணவுப் பயிர்கள் உற்பத்தியிலேயே மிகப் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இவை தாராளமயமாக்கப் பட்ட இறக்குமதிகளிலிருந்து கடுமையான போட்டியை எதிர்கொண்டிருந்தன. பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம், உருளைக் கிழங்கு, மிளகாய், நிலக்கடலை மற்றும் சோயா அவரை என்பவற்றின் உற்பத்தி அனேகமாக அரைவாசியாக குறைவடைந்தது.

சாகுபடியில் ஈடுபட்டு வரும் விவசாயிகளை தூண்டுவதற்கு உசிதமானதொரு சூழ்நிலை உருவாக்கப்படும் பட்சத்தில் இந்த அனைத்து விதமான உணவுப் பயிர்களிலும் சுயதேவைப் பூர்த்தி நிலையை எட்டக்கூடிய உள்ளார்ந்த ஆற்றலை இலங்கை கொண்டுள்ளது. உலகளாவிய சந்தையுடன் ஒருங்கிணை வதற்கான வர்த்தக தாராளமயமாக்கல் கொள்கை இந்த உசிதமான சூழ்நிலை உருவாக்கப்படுவதைத் தடுத்து வருகிறது. இக்கொள்கையின் பிரகாரம் தாராளமான விதத்தில் இறக்குமதி செய்யப்பட்டிருக்கும் பண்டங்கள் நுகர்வோரை மகிழ்ச்சி நிலையில் வைத்திருக்க முடியும். ஆனால், அது உள்நாட்டு உற்பத்தியை சீர்குலைத்திருப்ப துடன், அபாயகரமான பின்விளைவுகளுடன் கூடியவிதத்தில் கிராமிய உற்பத்தித் துறையில் பாதிப்புக்களை எடுத்து வருகின்றது. பாதுகாப்பு வழங்கப்படாத பட்சத்தில் கிராமிய விவசாயிகளினால் போட்டி விலைகளில் இத்தகைய பண்டங்களை உற்பத்தி செய்ய முடியாது. கட்டற்ற இறக்குமதிகள் ஏனைய உணவுப் பண்டங்களின் மீதும் மிக மோசமான தாக்கங்களை எடுத்து வருகின்றன. அண்மையில் தக்காளி ரசம் தாராளமாக இறக்குமதி செய்யப்பட்டு வருவதன் காரணமாக தக்காளி உற்பத்தி பாதிக்கப் பட்டிருப்பதாக உற்பத்தியாளர்கள் குற்றம் சாட்டியிருந்தனர். அதேபோல கோழி இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தி யாளர்களும் இத்தகைய பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலம் தமது உற்பத்திப் பண்டங்களுக்கு உரிய விலைகள் கிடைப்பதில்லை எனக் குறை கூறியிருந்தனர். அப்பிள் பழம் தோடம்பழம், திராட்சைப் பழம் போன்ற பழ வகைகளினதும் பழரச வகைகளினதும் தங்கு தடையற்ற இறக்குமதிகள் நாட்டின் தோட்டக்கலை மற்றும் பழம் பதனிடல் என்பவற்றை அச்சுறுத்தி வருகின்றன. ஏற்கனவே மலிவான தோடம்பழங்களின் பாரிய அளவிலான இறக்குமதி உள்நாட்டு பச்சை தோடம்பழங்களை சந்தையிலிருந்து முழுமையாக விரட்டி அடித்துள்ளது.

### உள்நாட்டுக் கைத்தொழில்

இறக்குமதி தாராளமயமாக்கல் கைத்தறி மற்றும் ஆடைக் கைத்தொழில், மின் உபகரணங்கள், உலோக உற்பத்திகள், இரசாயனப் பொருட்கள், சைக்கிள் டயர்கள், மூக்குக் கண்ணாடி பிரேம்கள், அச்சடிக்கும் காகிதம் மற்றும் கால்நடை உற்பத்திகள் போன்ற பெருந்தொகையான உள்நாட்டுக் கைத்தொழில்கள் மீது தாக்கத்தினை எடுத்து வந்துள்ளது. புடவைகள் மீதான 35 சதவிகித தீர்வை அண்மையில் ஒழிக்கப்பட்டமை உள்நாட்டு புடவை கைத்தொழிலை பொறுத்தவரையில் ஒரு மரண அடியாக இருந்து வந்தது. புடவைக் கைத்தொழிலின் தேவைக்கென வருடாந்தம் 8200 கோடி ரூபா பெறுமதியான புடவை வகைகள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. உள்நாட்டு ஆடைக் கைத்தொழிலுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டு அதனைத் தரமுயர்த்தினால் இந்தத் தொகையை நாடு சேமித்துக் கொள்ள முடியும். ரூபாவின் பெறுமதி இறக்கம் உள்நாட்டு கைத்தொழில்களுக்கு ஓரளவுக்கு பாதுகாப்பினை வழங்கி வந்துள்ளது. ஆனால், இறக்குமதி செய்யப்படும் உள்ளீடுகளில் தங்கியிருக்கும் கைத்தொழில்களைப் பொறுத்தவரையில் ரூபா பெறுமதி இறக்கத்துடன் இணைந்த விதத்தில் உள்ளீடுகளுக்கான செலவும் அதிகரித்துச் சென்றுள்ளது. குளிர்சாதனப் பெட்டிகள் போன்ற மின்சார உபகரணங் களின் தங்குதடையற்ற இறக்குமதிகளின் காரணமாக உள்நாட்டு குளிர்சாதனப் பெட்டி நிறுவனமொன்று தனது தொழிற்சாலையை மூடியுள்ளது. மரத் தளபாடங்கள் மற்றும் பிரம்புத் தளபாடங்கள் என்பவற்றின் இறக்குமதி உயர் தரம் வாய்ந்த உள்ளூர் தளபாடங்களின் விற்பனைகளை மிக மோசமாக பாதித்துள்ளது. குளியலறை சாதனங்கள், நீர் குழாய்கள், கழிவறை உபகரணங்கள் என்பவை இப்பொழுது நாட்டில் அனேகமாக உற்பத்தி செய்யப்படுவதே இல்லை. மலிவான

இறக்குமதிகளே இதற்கான காரணமாகும். முன்னர் இலங்கையில் தேயிலை உற்பத்தி தொடர்பான இயந்திரங்கள் தயாரிக்கப் பட்டதுடன் கென்யா, இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கும் அவை ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. ஆனால், இப்பொழுது அத்தகைய இயந்திரங்கள் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. எண்ணெய்க்கான இறக்குமதித் தீர்வை 35 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைக்கப்பட்டதனை அடுத்து எண்ணெய் இறக்குமதி தாராளமான விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக தேங்காய் எண்ணெய் ஆலைகள் மூடப்பட்டு வருகின்றன. பெருந்தொகையான சிறு அளவிலான உற்பத்தியாளர்கள் பொருட்களை உள்ளூரில் உற்பத்தி செய்வதிலும் பார்க்க அவற்றை இறக்குமதி செய்து விற்பனை செய்வது பெருமளவுக்கு இலாபகரமானது என்பதனை கண்டறிந்து கொண்டுள்ளனர். ஏற்றுமதி நோக்கிலான அபிவிருத்திக்கும் அதேபோல இறக்குமதி பதிலீட்டுக்கும் அதிகாரிகள் ஊக்குவிப்பினையும் ஆதரவினையும் வழங்கியிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் ஏற்றுமதி வளர்ச்சியை மிகைப்பட வலியுறுத்தி வந்திருப்பதுடன், இறக்குமதி பதிலீட்டினை அலட்சியம் செய்து வந்திருப்பதுபோல் தோன்றுகின்றது.

### வெளித் தாக்கங்கள்

இலங்கையின் பொருளாதாரம் உலகளாவிய பொருளாதாரத்துடன் ஒருங்கிணைக்கப் படுவதானது உலகச் சந்தை சக்திகளினால் நாடு எளிதில் பாதிப்புறக் கூடிய ஒரு நிலைமையை எடுத்து வந்திருப்பதுடன், பொருளாதாரத்தையும் பலவீன நிலைக்குள் தள்ளியுள்ளது. கிழக்காசிய நிதி நெருக்கடியினால் ஏற்பட்ட பொருளாதார மந்தம் காரணமாக ஏற்றுமதி வழிப்பட்ட வளர்ச்சி ஒரு பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல, நாட்டின் ஏற்றுமதிகளின் பெறுமதியில் இப்பொழுது வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது. இதற்கு பொருளாதார மந்தம் காரணமாக கேள்வி வீழ்ச்சி அடைந்து வருவதும், தென்கிழக்கு மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்து வரும் போட்டியும் காரணமாகும். அண்மைக் காலத்தில் உயர் ஏற்றுமதி வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்திருந்த ஆடை ஏற்றுமதித் துறையே மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளையும் உள்ளிட்ட பல நாடுகளில் 1999 இல் பொருளாதார வளர்ச்சி 1998 இல் ஏற்பட்ட வளர்ச்சியிலும் பார்க்க குறைவாகவே இருந்து வரும். ஐக்கிய அமெரிக்காவே இலங்கையின் முதன்மை ஏற்றுமதிச் சந்தையாகும். அந் நாட்டின் மந்தமான வளர்ச்சி ஆடை வகைகள் போன்ற இலங்கையின் ஏற்றுமதி களுக்கான கேள்வியை குறைத்துவிட முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதே வேளையில், ஜப்பானில் ஏற்பட்டிருக்கும் மந்தம் வைரங்கள் போன்ற இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான கேள்வியை ஏற்கனவே குறைவடையச் செய்துள்ளது. கிழக்கு மற்றும் தென் கிழக்காசியாவை சேர்ந்த நாடுகளின் நாணயங்கள் பெறுமதி இறக்கம் செய்யப்பட்டிருப்பதனால் அவற்றின் ஏற்றுமதிகளின் போட்டித் திறன் விருத்தி அடைந்துள்ளது. அது ஆடை வகைகள் இறப்பர் மற்றும் தெங்குப் பொருட்கள் போன்ற இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் போட்டியிடும் திறனை பாதித்துள்ளது. 1997 இல் மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதி 13.3 சதவிகிதத்தினால் அதிகரித்துள்ளது. ஆனால் 1998 இல் அதில் 2.1 சதவீத வளர்ச்சி மட்டுமே ஏற்பட்டிருந்தது. ஏற்றுமதி அளவைப் பொறுத்தவரையில் 1997 இல் 11 சதவீத வளர்ச்சி பதிவு செய்யப்பட்டிருந்த அதேவேளை 1998 இல் 0.1 சதவீத வளர்ச்சி மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தது. 1999 இன் முதல் 6 மாதங்களின் போது இலங்கையின் ஏற்றுமதிகள் முன்னைய வருடத்தின் அதே காலப் பிரிவுடன் ஒப்பிட்டு நோக்கும்போது 9 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டிருந்தன. நாட்டின் வெளிச் சொத்துக்கள் ஏற்றுமதி வீழ்ச்சியை பிரதிபலிக்கும் விதத்தில் 1999 இன் முதல் 6 மாதங்களின் போது 7.6 சதவீதத்தினால் வீழ்ச்சி அடைந்திருந்தன.

நிதிச் சந்தைகளின் ஒருங்கிணைப்பு காரணமாக ஆசிய நிதி நெருக்கடியின் தொடர் தாக்கங்கள் ஏனைய நாடுகளுக்கும் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவியது. இலங்கையின் பங்குச் சந்தையிலும் வர்த்தக கடனளிப்பிலும் வெளிநாட்டு நிதிகள் வரையறுக்கப்பட்ட ஒரு பங்கினையே வகித்து வருகின்றன. இதன் காரணமாக ஆசிய நெருக்கடியினால் இலங்கை அதிகளவுக்கு பாதிக்கப்பட வில்லை. பங்குச் சந்தையில் வெளிநாட்டவர் களின் முதலீடு 1996 ரூ.356 மில்லியனாக இருந்து 1997 இல் ரூ.749 மில்லியனாக அதிகரித்திருந்தது. இது 1998 இல் 152.1 மில்லியனாக வீழ்ச்சியடைந்திருந்தது. கொழும்புப் பங்குச் சந்தையில் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 1998 ஏப்ரலில் 782 ஆக இருந்து 1998 டிசம்பரில் 597 ஆக வீழ்ச்சியடைவதற்கு இதுவே பிரதான காரணமாகும். இது 1999 ஆகஸ்டில் 563 ஆக மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது. இலங்கையின் மோசமான பொருளாதார அடிப்படைகள் காரணமாக பங்குச் சந்தையிலிருந்து வெளிநாட்டு நிதிகள் விலக்கிக் கொள்ளப்பட்டமையே பங்கு விலை வீழ்ச்சிக்கான காரணம் என கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருந்தார். கொழும்புப் பங்குச் சந்தையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சுதந்திரமாக முதலீடுகளை மேற்கொள்ள முடியும். அதேபோல அவர்கள் தமது மூலதன ஆதாயங்களையும் பங்கிலாபங்களையும் சுதந்திரமாக எடுத்துச் செல்லவும் முடியும். இதற்கென விதிக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு கட்டுப்பாடு, இத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் 'பங்கு முதலீட்டு வெளி ரூபா கணக்குகள்' என்றழைக்கப்படும் விசேஷ கணக்குகளுக்கு ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாகும்.

அட்டவணை 4

மொ.உ.உ யின் சதவீதமாக முதலீடு

| வருடம் | மொத்த முதலீடு | தனியார் முதலீடு | பொதுத் துறை முதலீடு |
|---|---|---|---|
| 1993 | 25.6 | 17.6 | 8.0 |
| 1994 | 27.0 | 20.0 | 7.0 |
| 1995 | 25.7 | 17.8 | 7.9 |
| 1996 | 24.2 | 18.0 | 6.2 |
| 1997 | 24.4 | 18.3 | 6.1 |
| 1998 | 25.4 | 19.3 | 6.1 |

உலகமயமாக்கலை ஆதரித்துப் பேசும் பொருளாதார அபிவிருத்தி உத்தி இலங்கையை மற்றொரு 'ஆசிய வேங்கை'யாக மாற்றுவதில் தோல்வி

அட்டவணை 5

மூலதனச் செலவினத்தின் செயற்பாட்டு ரீதியான வகைப்பாடு (மொ.உ.உ யின் சதவீதமாக)

| | 1994 | 1995 | 1996 | 1997 | 1998 |
|---|---|---|---|---|---|
| மொத்த மூலதனச் செலவினம் | 7.5 | 7.4 | 5.7 | 5.7 | 6.8 |
| பொருளாதாரச் சேவைகள் | 5.1 | 5.4 | 4.1 | 3.6 | 4.4 |
| விவசாயம், நீர்ப்பாசனம் | 0.9 | 0.9 | 0.6 | 0.4 | 0.6 |
| போக்குவரத்து | 2.5 | 2.8 | 1.6 | 1.5 | 1.9 |
| வலு | 1.0 | 0.7 | 0.8 | 0.8 | 0.9 |
| சமூக சேவைகள் | 1.3 | 1.5 | 1.3 | 1.3 | 1.5 |
| கல்வி | 0.5 | 0.5 | 0.6 | 0.5 | 0.6 |
| சுகாதாரம் | 0.3 | 0.3 | 0.3 | 0.3 | 0.4 |

(மத்திய வங்கி வருடாந்த அறிக்கை, 1998)

கண்டுள்ளது போல தெரிகிறது. கடந்த ஐந்து வருட காலத்தின் போது பொருளாதார வளர்ச்சி சார்புரீதியில் குறைந்த மட்டத்தில் நிலவி வந்திருப்பதனையும், வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்களுக்கு மத்தியிலும் நாட்டுக்குள் சிறிதளவு வெளிநாட்டு மூலதனம் மட்டுமே வந்திருப்பதனையும், விவசாய ஏற்றுமதிகள் வீழ்ச்சி கண்டிருப்பதனையும், உள்நாட்டு உணவு உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டு வந்திருப்பதனையும், இறக்குமதி பிரதியீட்டுக் கைத்தொழில்கள் புறக்கணிக்கப்பட்டு வந்திருப்பதனையும், ஏற்றுமதி வளர்ச்சி மந்தமடைந்து வந்திருப்பதனையும் நாங்கள் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தோம். மேலும், கடந்த பன்னிரண்டு மாத காலத்தின் போது பங்குச் சந்தை விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டு வந்திருப்பதனையும் சுட்டிக் காட்டினோம். உலகமயமாக்கல் வரையறுக்கப்பட்ட அனுகூலங்களையும், அதே போல எதிர்மறை தாக்கங்களையும் எடுத்து வருவதற்கு இவையனைத்தும் சான்றுகளாக இருந்து வருகின்றன. தனியார் துறையை வளர்ச்சியின் இயந்திரமாக ஆக்கும் அபிவிருத்தி உத்தியின் விளைவாக பொதுத் துறை அல்லது அரச துறை நலிவுற்றுப் போயுள்ளது. ஆனால், தனியார் துறையின் மோசமான செயலாற்றுகை காரணமாக ஒட்டுமொத்த முதலீட்டில் தேக்க நிலை ஏற்பட்டிருப்பதுடன், பொருளாதார வளர்ச்சியும் மந்தமடைந்துள்ளது. தனியார் துறையை நம்பி அரசாங்கம் அதன் முதலீட்டினை பெருமளவுக்கு குறைத்துக் கொண்டிருந்தது. ஆனால், தனியார் முதலீடுகள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே மேற்கொள்ளப்பட்டமையால் பொருளாதாரம் பாதிப்படைந்தது.

இந்தச் செயன்முறையின் போது, தனக்குச் சேர வேண்டிய நிதி வளங்களை குறைந்த வரிகளுக்கு ஊடாக வேண்டுமென்றே குறைத்துக் கொண்டதன் காரணமாக அரசாங்கம் நலிவடைந்தது. 1994இல் மொஉஉ யில் 17.2 சதவீதமாக இருந்து வந்த வரி வருமானம் 1998 இல் 14.5 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது. 1994-1995 இல் மொஉஉ யின் 2.6 சதவீதமாக இருந்த வருமான வரி வருமானம் 1998இல் 2.0 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. விற்பனை மற்றும் மொத்த வியாபார புரள்வு வரிகள் மூலமான வருமானம் 1994 இல் மொஉஉ யின் 5.6 சதவீதமாக இருந்து 1998 இல் 3.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. இறக்குமதித் தீர்வைகள் மூலமான வருமானம் மொஉஉ யின் 3.9 சதவீதத்திலிருந்து 2.8 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. தனியார் முதலீட்டுக்கு தூண்டுதலை அளிக்கும் நோக்கத்துடனும், வரி செலுத்துவோருக்கும் நிவாரணம் வழங்கும் நோக்கத்துடனுமேயே இந்த வரிக் குறைப்புக்கள் செய்யப்பட்டிருந்தன. தனியார் முதலீட்டுக்கு அது சிறிதளவு ஊக்குவிப்பை மட்டுமே வழங்கியிருந்தது. வரி செலுத்துபவர்களுக்கான நிவாரணம் அவசியமற்ற ஒன்றாகும். ஏனெனில், நாட்டில் இடம் பெற்று வந்த போர் வரிக் குறைப்பையன்றி வரி அதிகரிப்பையே அவசியப்படுத்தியிருந்தது. போர் முயற்சிக்கு அவசியமான ஒரு பங்களிப்பாக வரி செலுத்துபவர்கள் இந்த வரி அதிகரிப்புக்களை ஏற்றிருப்பார்கள். ஐக்கிய அமெரிக்க திறந்த சந்தைப் பொருளாதாரத்தில் 1996 இல் வரி வருமானம் மொஉஉ யில் 28.5 சதவீதமாக இருந்து வந்துள்ளது என்பதனையும் இங்கு குறிப்பிட வேண்டும். அங்கு தற்பொழுது கம்பெனி வரி விகிதம் 40 சதவீதமாக இருந்து வருகின்றது.

தேவையற்ற வரி வெட்டுக்களை மேற்கொள்வதன் மூலம் அரசாங்கம் அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவினை நிதிப்படுத்துவதற்காக புதிய வருமானத்தை திரட்டிக் கொள்வதற்கான வாய்ப்பை தனக்கே மறுத்தது. அதிகரித்து வரும் பாதுகாப்புச் செலவுகள் புதிய வரிகள் மூலம் ஈடு செய்யப்படவில்லை. மாறாக, அத்தியாவசிய பொருளாதார, சமூக அபிவிருத்திச் செலவினங்களை வெட்டி விடுவதன் மூலமே அது ஈடு செய்யப்பட்டு வந்தது. 1994 இல் மொஉஉ வின் 7.5. சதவீதமாக இருந்து வந்த அரசாங்கத்தின் மூலதனச் செலவு 1995 இல் 5.7 சதவீதமாகவும், 1998 இல் 6.8 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. பொருளாதாரச் சேவைகளிலான மூலதனச் செலவினம் 1994 இல் மொஉஉ வின் 5.1. சதவீதமாக இருந்து 1998 இல் 4.4 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. விவசாயம், நீர்ப்பாசனம் என்பவற்றிலான மூலதனச் செலவினம் 1994 இல் 0.9 சதவீதத்திலிருந்து 1998 இல் 0.6 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது. அதே போல போக்குவரத்து மற்றும் வலு என்பன தொடர்பான மூலதனச் செலவுகளும் வீழ்ச்சி யடைந்திருந்தன. நிலைமை வேறு விதத்தில் அவசியப்படுத்தியிருந்த பொழுது வரிகளைக் குறைக்கும் தவறான கொள்கை பின்பற்றப்பட்டு வந்தமையின் காரணமாக கடந்த நான்கு ஐந்து வருட காலத்தின் போது அத்தியாவசியத் துறைகளான விவசாயம், நீர்ப்பாசனம், வலு மற்றும் போக்கு வரத்து என்பவற்றில் மூலதனச் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

மறுபுறத்தில், 1994-1997 நான்கு வருட காலப் பிரிவின்போது சமூக சேவைகள் மீதான முதலீடு தேங்கிக் கிடந்தது. இக்காலப் பிரிவின் போது மொஉஉ யின் 1.3 சதவீதமாக இருந்து வந்த அது 1998 இல் 1.5 சதவீதமாக அதிகரித்திருந்தது. கல்வி மீதான முதலீடு தொடர்ந்தும் மொஉஉ யின் 0.5 சதவீதமாகவே இருந்து வந்துள்ளது. சுகாதாரம் மீதான முதலீடு 0.3. சதவீதமாக நிலையாக இருந்து வந்துள்ளது. குறைந்த வரி விதிப்பின் மூலம் அரசாங்கம் தனக்கு வந்து சேர வேண்டிய நிதிகளை வேண்டுமென்றே இழக்காமல் இருந்தால் சமூக சேவைகள் மீது உயர் அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும். அதேபோல புதிய மருத்துவமனைகளும் பாடசாலைகளும் உருவாக்கப்பட்டிருக்கும்.

பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பான மூலதன முதலீடுகளில் சார்பு ரீதியில் ஒரு வெட்டு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக சேவைகளின் பராமரிப்பு தொடர்பான நடைமுறைச் செலவினத்திலும் ஒரு வெட்டு இடம் பெற்றிருந்தது. எனவே, சமூக சேவைகள் மீதான நடப்புச் செலவினம் 1995 இல் மொஉஉ யின் 8.6 சதவீதமாக இருந்து வந்து 1998 இல் 6.3 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்தது. பாடசாலைகள் மீதான செலவினம் 2.4 சதவீதத்திலிருந்து 2.0 சதவீதமாகவும், சுகாதாரம் மீதான செலவினம் 1.3 சதவீதத்திலிருந்து 1.0 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. பொருளாதாரச் சேவைகள் மீதான நடப்புச் செலவினம் 1995 இல் மொஉஉயின் 1.21 சதவீதமாக இருந்து 1998 இல் 1.0 சதவீதமாக குறைவடைந்திருந்தது.

## முனைப்பற்ற அரசு

உலகமயமாக்கல் வலியுறுத்துவது போல பொருளாதார அபிவிருத்தி என்ற மிக முக்கிய பணியை அரசு சுதந்திர சந்தையின் பொறுப்பில் விட்டு விட்டு, தனியார் தொழில் முயற்சி என்ற மாயா ஜாலம் வளர்ச்சியை எடுத்து வரும் வரையில் பொறுமையுடன் காத்துக் கொண்டிருக்க முடியாது. இலங்கையைப் போன்ற ஒரு வளர்முகப் பொருளாதாரத்தில் தனியார் துறை இன்னமும் முழுமையாக வளர்ச்சியடைந்திருக்கவில்லை. இந்த நிலையில், பொருளாதார அபிவிருத்தி முயற்சியில் கூடிய சுமையை அரசு நேரடியாக ஏற்க வேண்டியுள்ளது. நாங்கள் ஒரு தலையிடாக் கொள்கையை பின்பற்ற முடியாது. அவ்வாறு பின்பற்றினால் துரித பொருளாதார வளர்ச்சிக்கும் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கத்துக்கும் அவசியமான திட்டங்களையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் உருவாக்குவதற்கான வாய்ப்புக்களை நாங்கள் இழந்துவிடுவோம். வளர்முக நாடுகளில் பொதுத்துறை முதலீடு ஒரு குறைநிரப்புப் பணியையே மேற்கொண்டு வருகின்றது. வளர்ந்து வரும் பொருளாதாரமொன்றில் பொதுத் துறையும் தனியார் துறையும் சக வாழ்வு நடத்துவதற்கு தாராளமாக இட மிருக்கின்றது.

# எழுச்சி கண்டு வரும் புதிய உலகளாவிய பொருளாதாரத்தில் வளர்முக நாடுகளின் நிலை

## ஒரு புதிய *"அபிவிருத்தி அத்தியாயம்"* உருவாக்கப்பட வேண்டிய தேவை

காமினி கொரயா
(முன்னாள் அங்டாட் செயலாளர் நாயகம்)

உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயன்முறை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வர்த்தக நிறுவனம் போன்ற சர்வதேச நிறுவனங்களால் தீவிரமாக ஆதரித்துப் பேசப்பட்டு வருவதுடன், வளர்முக நாடுகள் எதிர்நோக்கி வரும் சகல பொருளாதார பிரச்சினைகளுக்குமான சர்வரோக நிவாரணியாக அது சிபார்சு செய்யப்பட்டும் வருகின்றது. ஒரு சில வளர்முக நாடுகள் – குறிப்பாக தென்கிழக்காசியாவையும் கிழக்காசியாவையும் சேர்ந்த சில நாடுகள் – ஆரம்பத்தில் இதன் மூலம் ஓரளவுக்கு பயனடைந்திருந்தன என்பது உண்மைதான். ஆனால், இதன் அனுகூலங்கள் பெருமளவுக்கு வளர்ச்சியடைந்த நாடுகளுக்கே கிட்டி வருகின்றன என்ற உண்மை பிற்பாடு தெரிய வந்தது. ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது, வளர்முக நாடுகள் உலகமயமாக்கல் – தாராளமயமாக்கல் செயன்முறையிலிருந்து குறிப்பிடத்தக்க எத்தகைய அனுகூலங்களையும் இதுவரையில் ஈட்டிக் கொண்டிருக்கவில்லை. உண்மையிலேயே இக்கால கட்டத்தில் உலக வருமானப் பகிர்வு செல்வந்த நாடுகளுக்கு சாதகமான விதத்தில் மாற்றமடைந்து சென்றுள்ளது. மறுபுறத்தில், வளர்முக நாடுகளுக்குள்ளேயும் வருமான ஏற்றத்தாழ்வுகள் தீவிரமாக அதிகரித்துச் சென்றுள்ளன.

இந்தப் பின்புலத்தில், சர்வதேச மட்டத்தில் தற்பொழுது பின்பற்றப்பட்டு வரும் கொள்கைகள் வறிய நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் ஒரே விதத்தில் அனுகூலங்களை எடுத்து வருகின்றன என்ற அனுமானத்தினை வளர்முக நாடுகள் நிராகரிக்க வேண்டியுள்ளது என்றும், இன்றைய கால கட்டத்தில் எழுச்சி கண்டு வரும் உலகளாவிய பொருளாதாரத்துக்குப் பொருத்தமான புதிய அபிவிருத்தி அத்தியாயம் ஒன்றை அவை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் இங்கு வலியுறுத்தும் முன்னாள் அங்டாட் செயலாளர் நாயகம் கலாநிதி காமனி கொரயா, வளர்முக நாடுகள் உலக பொருளாதாரத்தின் சாதகமான அபிவிருத்திகளிலிருந்து பயனடைந்து கொள்ளும் அதே வேளையில், அவற்றின் எதிர்மறைத் தாக்கங்களுக்கு எதிரான போதிய பாதுகாப்பு வழிமுறைகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார்.

இரண்டாம் உலகப்போரை அடுத்து வந்த தசாப்தங்களில் நிலவி வந்த உலகளாவிய பொருளாதார சூழ்நிலையில் வளர்முக நாடுகள் பெரும்பாலும் அரசின் வழிகாட்டுதலின் கீழ் திட்டமிடப்பட்ட பொருளாதார வளர்ச்சி குறித்த உத்திகளை பின்பற்றி வந்தன. அந் நாடுகளில் பெரும்பாலானவை அப்பொழுது தான் காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றிருந்தன. அந்த நிலையில் பெரும்பாலான வளர்முக நாடுகளில் தனியார் துறை பலவீனமானதாக இருந்து வந்ததுடன், கைத்தொழில் ஆற்றல்களும் பெருமளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. மேலும், அந்நாடுகளில் போதிய அளவில உள்கட்டமைப்பு வசதிகளும் திறன்களும் இருந்து வரவில்லை. அதேவேளையில், அவற்றின் முக்கிய ஏற்றுமதி வருமான மூலமான ஆரம்ப பண்டங்களுக்கான சந்தைகள் ஸ்திரமற்றவையாகவும் அடிக்கடி மந்த நிலையை அடைபவையாகவும் இருந்து வந்தன. தொழிற்சாலை தயாரிப்புக்களுக்கான ஏற்றுமதி வாய்ப்புக்களும் மிகக் குறைந்த மட்டத்திலேயே நிலவி வந்தன. இத்தகைய ஒரு பின்புலத்தில் இந்த வளர்முக நாடுகள் தமது அபிவிருத்தி முயற்சிகளுக்கு வளர்ச்சி அடைந்த கைத்தொழில் நாடுகளின் ஆதரவை நாடி நின்றன. கடுமையற்ற நிபந்தனைகளின் கீழ் வெளி நிதிப்படுத்தலை வழங்குதல், பண்டச் சந்தைகளை பலப்படுத்துவதற்கான திட்டங்களை ஆரம்பித்து வைத்தல், வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளுக்கு முன்னுரிமை தீர்வை சலுகையை வழங்குதல், அபிவிருத்திக்கென வெளிப் பொருளாதார சூழலை விருத்தி செய்வதற்கான பல்வேறு வழிமுறைகள் என்பவற்றின் வடிவில் வளர்ச்சியடைந்த நாடுகள் தமக்கு உதவ வேண்டும் என இந்நாடுகள் விரும்பின. இந்த ஆதரவு வழிமுறைகளை ஐநா செயலகமும் குறிப்பாக (வர்த்தகம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றுக்கான ஐ நா மாநாட்டு அமைப்பு) அங்டாட் அமைப்பும் 1964 தொடக்கம் வலியுறுத்தி வந்துள்ளன. இது பல சந்தர்ப்பங்களில் பல்தரப்பு பேச்சுவார்த்தைகளில் மிக முக்கியமான ஒரு விடயமாக கவனத்தில் எடுக்கப்பட்டு வந்துள்ளது. கெடுபிடியுத்த பகைமைகள் இடம்பெற்று வந்த கால கட்டத்தின் போது வளர்முக நாடுகள் பொதுவாக சர்வதேச அரங்குகளில் சோஷலிச அணியைச் சேர்ந்த நாடுகளின் ஆதரவைப் பெற்று வந்தன. வளர்முக நாடுகளின் தேவைகள் முழுமையான அளவில் திருப்தி அளிக்கக்கூடிய விதத்தில் இன்னமும் நிறைவு செய்து வைக்கப்படவில்லை என்பது உண்மைதான். ஆனால், பல சர்வதேச மாநாடுகளில் வளர்ச்சியடைந்த நாடுகளின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் மற்றும் வழிமுறைகள் என்பன ஒரு சில துறைகளில் ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதனை காட்டுகின்றன.

எவ்வாறிருப்பினும், 1980 களின் தொடக்கத்தின் போது ஒரு புதிய நிலைமை எழுச்சியடையத் தொடங்கியிருந்தது. சுதந்திர தொழில் முயற்சிகளுக்கென தம்மை அர்ப்பணித்துக் கொண்ட வலதுசாரி அரசாங்கங்கள் பல முன்னணிக் கைத்

தொழில் நாடுகளில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தன. அவை உள்ளக பொருளாதார சுருக்கம் தொடர்பான கொள்கைகளை அறிமுகம் செய்து வைத்தன. மேலும், சோஷலிச அணியின் சீர்குலைவினை அடுத்து உலக அளவில் நிலவி வந்த இருவேறு வல்லரசு அமைப்புக்களின் பகைமை முடிவுக்கு வந்தது. இந்த மாற்றங்களின் விளைவாக மேலைய உலகைச் சேர்ந்த கைத்தொழில் நாடுகள் முன்னர் சர்வதேச அபிருத்தி ஒத்துழைப்புக்கு ஆதரவு வழங்கி வந்த பல தூண்களை ஒட்டுமொத்தமாக நிராகரித்தன. அதனிடத்தில் உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் தொடர்பான கருதுகோள் முன்வைக்கப் பட்டது. அது சந்தைச் சக்திகளையும் தனியார் துறை வகிக்க வேண்டியிருக்கும் பங்கினையும் வலியுறுத்தியது. இந்த புதிய கருதுகோள் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்ந்த நாடுகளுக்கும் பயனளிக்கக்கூடிய ஓர் அகிலம் தழுவிய சர்வலோக நிவாரணியாக முன்வைக்கப் பட்டது. உலகமயமாக்கல் பாதை சந்தைகளின் ஒருங்கிணைப்பினை நோக்கியும், பூகோள கிராமத்தினை நோக்கியும் எம்மை இட்டுச் செல்லும் என கூறப்பட்டது. இந்த புதிய தோற்றப்பாட்டுக் கான நிறுவன ரீதியிலான ஆதரவை பல்தரப்பு நிதி நிறுவனங்களும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட உலக வர்த்தக நிறுவனமும் வழங்க வேண்டியிருந்தன. இந்த நிறுவனங்கள் பெருமளவுக்கு வளர்ச்சி யடைந்த நாடுகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றன. அமைப்புரீதியிலான சீராக்கல் திட்டங்களின் மூலம் வளர்முக நாடுகளின் உள்நாட்டுக் கொள்கைகள் ஒரே சீரான விதத்தில் எடுத்து வரப்பட்டன. சர்வதேச வர்த்தக முறையின் ஒழுங்கு விதிகள் புதிய வர்த்தக துறைகள் மற்றும் செலாவணி என்பவற்றுக்கும் விரிவாக்கப்பட்டன. அபிவிருத்திக்கு ஆதரவு வழங்கும் முன்னைய உத்திகள் பயனற்றவை என்றும் தலையீட்டுத்தன்மை வாய்ந்தவை என்றும் புறமொதுக்கப்பட்டன.

உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் என்பவற்றை நோக்கிய புதிய பாய்ச்சல் ஆரம்பத்தில் ஒரு சில நல்ல பெறுபேறுகளை எடுத்து வந்தது. தொடர்பாடல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் என்பவற்றில் ஏற்பட்டிருந்த முன்னேற்றங்களுடன் இணைந்த விதத்தில் உலக வர்த்தகம் மற்றும் தனியார் மூலதன பாய்ச்சல்கள் என்பன முன்னெப்போதும் இருந்திராத மட்டங்களை எட்டின. ஒரு சில வளர்முக நாடுகள் குறிப்பாக கிழக்காசியாவிலும் தென்கிழக்காசியாவிலும் இருந்த சில வளர்முக நாடுகள் சிறந்த பொருளாதார செயலாற்றுகையை காட்டியிருந்ததுடன், அந்நாடுகளின் அனுபவங்கள் புதிய உத்தியின் வெற்றிக்கான சான்றுகளாக எடுத்துக் காட்டப்பட்டன. ஆனால், புதிய தாராளமயமாக்கல் செயன்முறைகளின் அனுகூலங்கள் இன்னமும் பெருமளவுக்கு வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு மட்டுமே கிட்டி வருகின்றன என்ற விடயம் பிற்பாடு தெரிய வந்தது. இதன் மூலம் பெரும்பாலான வளர்முக நாடுகள் எத்தகைய அனுகூலங்களையும் பெற்றுக்கொண்டிருக்க வில்லை. உண்மையிலேயே இக்கால கட்டத்தில் உலக வருமானப் பகிர்வில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் செல்வந்த நாடுகளுக்கு சாதகமான விதத்தில் தீவிரமாக அதிகரித்துச் சென்றிருந்தன. இதேபோல நாடுகளுக்குள்ளேயும் குறிப்பாக வளர்முக நாடுகளுக்குள்ளேயும் வருமான ஏற்றத் தாழ்வுகள் தீவிரமாக அதிகரித்துச் சென்றிருந்தன. இதேபோல நாடுகளுக் குள்ளேயும் குறிப்பாக வளர்முக நாடுகளுக் குள்ளேயும் வருமான ஏற்றத்தாழ்வுகள் தீவிரமடைந்தன. இதன் விளைவாக இந்நாடுகளில் சமூக மற்றும் அரசியல் கொந்தளிப்புக்கள் எழுச்சியடைந்தன.

ஆனால், இந்தப் புதிய செயன்முறையின் எதிர்மறை அம்சங்களில் இவை மட்டுமன்றி வேறுபல விடயங்களும் அடங்கியிருந்தன. 1990 களின் பிற்பகுதிகளின் போது ஒரு பாரிய நெருக்கடி தோன்றியதுடன், அது உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் என்பனவற்றின் வெற்றி தொடர்பாக பல கேள்விகளை எழுப்பியது. கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் பரந்த மட்டத்திலான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பினவிளைவுகளை எடுத்து வந்த நெருக்கடி ஒன்றுக்குள் சிக்கிக் கொண்டன. இந்த நெருக்கடியின் எதிரொலி ரஷ்யாவிலும் இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் பிரதிபலித்தது. 1930 களில் ஏற்பட்டதைப் போன்ற ஓர் உலகளாவிய பொருளாதார மந்தம் ஏற்பட முடியும் என்ற வகையில் அச்சங்களும் தோன்றியிருந்தன. பெருமளவுக்கு சர்வதேச நிதி நிறுவனங்களால் இது தொடர்பாக முன்வைக்கப்பட்டிருந்த நிவாரணங்கள் இந்நாடுகளை மேலும் நெருக்கடிக்குள் தள்ளி விடுவனவாகவே இருந்து வந்தன. இந்த வழிமுறைகளில் வெளியுலகில் இருந்து வரும் தமது நிதி மற்றும் வர்த்தக பங்காளர்களின் நலன்களைப் பாதுகாத்துக் கொள்ளும் ஒரு போக்கினையே இந்நிறுவனங்கள் எடுத்துக் காட்டியிருந்தன. உலகளாவிய நெருக்கடி யொன்று தொடர்பாக இருந்த அச்சுறுத்தல் இப்பொழுது ஓரளவுக்கு பின்னடைவுற்றிருந்த போதிலும் அந்த அபாயம் முற்றிலுமாக ஒழிந்துவிடவில்லை.

இவை அனைத்தும் உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயன்முறை தொடர்பாக பல்வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளன. கடந்த காலத்தின் எதிர்மறை அனுபவங்களை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு இந்த செயன்முறை சிறப்பான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும் என ஒரு சிலர் கருதுகின்றனர். உலகளாவிய பொருளாதாரத்தின் நல்லாட்சிக்கென புதிய பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும், பல்பக்க நிதி நிறுவனங்கள் மீளமைப்பு செய்யப்பட்டு பலப்படுத்தப்பட வேண்டும் என்ற வகையிலும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இதில் வளர்முக நாடுகளின் ஆழ்ந்த அக்கறைக்குரிய பல விடயங்கள் இருந்து வருகின்றன. குறிப்பாக தீர்மானங்களை எடுக்கும் அரங்குகளில் வளர்முக நாடுகளின் குரல்களுக்கு மதிப்பளிக்கக் கூடிய ஒரு நிலைமை உருவாக்கப்பட வேண்டியது முதல் தேவையாகும். ஆனால், இது மட்டும் போதாது. உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயன்முறை வளர்முக நாடுகளின் முதன்மை குறிக்கோள் மற்றும் அக்கறை என்பவற்றின் மீது- அவற்றின் பொருளாதார மட்டம் சமூக நிலைமாற்றம் மற்றும் தமது சொந்த நிலைமைகள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்பவற்றின் அடிப்படையில் தமது குறிக்கோளை முன்னெடுத்துச் செல்லும் முயற்சியின் மீது- தாக்கங்களை எடுத்து வருகின்றது. ஏற்கனவே குறிப்பிடப்பட்டதுபோல உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் என்பன அபிவிருத்தி துறையில் இதுவரையில் குறிப்பிடத்தக்க தாக்கம் எதனையும் எடுத்து வரவில்லை. செல்வந்த நாடுகளுக்கும் வறிய நாடுகளுக்கும் இடையிலான வருமான ஏற்றத்தாழ்வு இடையறாது அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இதன் காரணமாக பல வறிய நாடுகள் புறமொதுக்கப்பட்டுள்ளன. அதேபோல பல வளர்முக நாடுளுக்களுக் குள்ளேயே வருமான ஏற்றத்தாழ்வுகளும் சமூக கொந்தளிப்புக்களும் பெருகியுள்ளன.

புதிதாக எழுச்சி கண்டுவரும் உலகளாவிய பொருளாதாரத்துக்கும் அபிவிருத்தி செயன் முறைக்கும் இடையிலான தொடர்பினை இவை அனைத்தும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. கெடுபிடி யுத்தத்தின் முடிவை அடுத்து பிரதான கைத்தொழில் நாடுகளின் - குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய யூனியன் என்பவற்றின் - அரசியல் மற்றும் பொருளாதாரச் செல்வாக்கு வலுவடைந்தது. இதனை அடுத்தே உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயன்முறை முன்னெடுக்கப்பட்டது. இந்நாடுகள் உள்நாட்டில் சந்தை நோக்கிலான வலதுசாரி மத்திய கொள்கைகளை பின்பற்றின. அவற்றுக்கிடையே வர்த்தக பாய்ச்சல்களிலும் மூலதன அசைவுகளிலும் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. இவை அனைத்தும் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு தொடர்பாக முன்னர் நிலவி வந்த கருதுகோள்கள் மற்றும் அணுகுமுறைகள் என்பவற்றை மாற்றி அமைத்தன. வளர்முக நாடுகளில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி செயன்முறை முதன்மையாக சந்தை

நோக்கினைக் கொண்டதாக இருந்து வர வேண்டும் என்ற கருத்தினை முன்னணிக் கைத்தொழில் நாடுகள் உருவாக்கிக் கொண்டிருந்தன. இதன் மூலம் இந்நாடுகளில் செயல்திறனும் செயல் முனைப்பும் அதிகரிக்கும் என்றும் வெளியுலகுடனான பயன்மிக்க பிணைப்புக்கள் உருவாக்கப்படும் என்றும் இந்நாடுகள் நம்பின.

மூன்று பிரதான வழிமுறைகளுக்கூடாக இந்தக் கருத்து வளர்முக நாடுகளின் மீது திணிக்கப்பட்டது. முதலாவதாக, உலக வர்த்தக அமைப்பின் ஒரு சீர்திருத்த செயன்முறை எடுத்து வரப்பட்டது. இது வரைகாலமும் 'GATT' - அமைப்பின் அனுசரணையின் கீழ் இருந்து வந்த உலக வர்த்தக அமைப்பில் ஒரு மாற்றம் கொண்டு வரப்பட்டது. இரண்டாவதாக, பல்பக்க நிதி நிறுவனங்கள் அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்களுக்கூடாக பெரும்பாலான வளர்முக நாடுகளின் கொள்கைகளுக்குள் ஊடுருவல் செய்தன. அதாவது, இந்நிறுவனங்கள் நிதி உதவி, கடன் நிவாரணம் மற்றும் கொடையாளிகளுக்கு அறிக்கையிடல் என்பவற்றுக்கென வளர்முக நாடுகள் மீது நிபந்தனைகளை விதித்தன. மூன்றாவதாக, முன்னர் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்புடன் சம்பந்தப்பட்டிருந்த பெரும்பாலான பொறிமுறைகளும் வழிமுறைகளும் ஒழித்துக்கட்டப்பட்டன. குறிப்பாக ஐநா அனுசரணையின் கீழ் இயங்கி வந்த பல பொறிமுறைகள் இவ்விதம் ஒழிக்கப்பட்டன. உள்நாட்டுக் கொள்கை உருவாக்கத்தில் வளர்முக நாடுகள் இதுவரையில் அனுபவித்து வந்த தன்னாதிக்க அதிகாரம் இந்த வழிமுறைகளுக்கூடாக செயற்படுத்தப்பட்ட செல்வாக்குகளின் காரணமாக பெருமளவுக்கு நலிவடைந்தது. ஆனால், இந்த மாற்றங்கள் இதுவரையில் குறிப்பிடத்தக்க அளவிலான வெற்றி எதனையும் எடுத்து வரவில்லை. இவற்றுக்கூடாக அபிவிருத்திச் செயன்முறை துரிதப்படுத்தப்படவும் இல்லை. எனவே, இந்த நிலையில் உலகமயமாக்கலுக்கும் தாராளமயமாக்கலுக்கும் அபிவிருத்திக் கொள்கைக்கும் இடையில் நிலவி வரும் உறவினை மீள்பரிசோதனை செய்வதற்கும் மீள நிர்ணயம் செய்வதற்கும் இப்பொழுது தருணம் வந்துள்ளது.

ஆரம்ப கால கட்டத்தில் அரசியல் பொருளாதார மற்றும் சித்தாந்த சூழ்நிலைகளின் பின்புலத்தில் பல வளர்முக நாடுகள் தீவிரமான தலையீட்டுத் தன்மை வாய்ந்த கொள்கைகளை பின்பற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தன. அதே கொள்கைகளுக்கு அந்நாடுகள் மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டும் என்பதை எந்த வகையிலும் இந்த மாற்றங்கள் எடுத்துக் காட்டவில்லை. மாறாக, தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் - என்பவற்றினால் உந்திச் செல்லப்பட்டு வரும் புதிய உலகளாவிய பொருளாதாரத்துக்கு வளர்முக நாடுகள் கட்டுப்படுத்தப்பட்ட முறையில் தெரிவு அடிப்படையிலான ஓர் எதிர்விளைவினைக் காட்டவேண்டும் என்பதனையே இது சுட்டிக் காட்டுகின்றது. இந்தப் பின்னணியில் இரண்டு விஷயங்களை கவனத்திலெடுப்பது அவசியமானதாகும். முதலாவதாக, வளர்முக நாடுகள் தமக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய தாக்கங்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் அதே வேளையில், மாறிவரும் உலக பொருளாதார அமைப்பின் சாதகமான அம்சங்களிலிருந்து பயனடைந்து கொள்ள வேண்டும். இதற்கென உள்நாட்டுக் கொள்கைகளில் தெரிவு அடிப்படையிலான ஓர் அணுகுமுறை பின்பற்றப்படுவது அவசியமாகும். அதாவது, ஒவ்வொரு நாட்டினதும் வேறுபட்ட நிலைமைகளுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் தனியார் முயற்சிகளுக்கும் அரச முயற்சிகளுக்குமிடையிலும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளுக்கிடையிலும் பொருத்தமான விதத்தில் ஒரு சமநிலை பேணப்பட்டு வருதல் வேண்டும். வெளிச் சந்தைகள் திறந்து விடப்படுதல், வெளிமூலதனப் பாய்ச்சல்கள் மற்றும் தொழில்நுட்ப மாற்றம் என்பவற்றின் விளைவாக வளர்முக நாடுகள் பயனடைய முடியும். ஆனால், அவை ஓரளவுக்கு கட்டுப்பாட்டுடன் செயற்பட்டு தமது உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ற விதத்தில் அனுசரித்துச் செல்ல வேண்டியுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளினதும் வளர்முக நாடுகளினதும் உள்நாட்டுக் கொள்கைகளில் அகிலம் தழுவிய ஒரே சீரான பொதுவான சுதந்திரமொன்றை பிரயோகிப்பதானது எந்த வகையிலும் பயனளிக்கப் போவதில்லை.

இரண்டாவதாக, இன்று அதிகரித்த அளவில் முக்கியத்துவம் பெற்று வரும் விடயம் என்னவென்றால் சர்வதேச நிறுவனங்களினால் உள்நாட்டுக் கொள்கைகள் விதித்துரைக்கப்படும் ஒரு போக்காகும். இதில் உலக வர்த்தக நிறுவனம், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்கள் முதன்மையாக சம்பந்தப்பட்டுள்ளன. ஆரம்ப காலத்தில் ஐநா வுடனும் அதன் முகவரகங்களுடனும் இதேபோல ஏற்பாடுகள் செய்து கொள்ளப்பட்டிருந்தன. ஆனால், இப்பொழுது அவை முக்கியத்துவத்தை இழந்துள்ளன. அக்காலத்தில் எடுக்கப்பட்ட பல முடிவுகள் இப்பொழுது பின்பற்றப்படுவதில்லை. ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டது போல சர்வதேச நிறுவனங்களினால் விதித்துரைக்கப்படும் விதிமுறைகள் அனைத்து நாடுகளுக்கும் - செல்வந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் - பொதுவானவையாகவே இருந்து வருகின்றன.

மேலே குறிப்பிடப்பட்ட மாற்றங்கள் அனைத்தும் இன்றைய சூழ்நிலையில் மிக முக்கியமான ஒரு தேவையை சுட்டிக்காட்டுகின்றன. அதாவது, தீவிரமாக மாற்றமடைந்து வரும் உலகளாவிய பொருளாதாரச் சூழலில் அபிவிருத்திக் கொள்கையின் தேவைகளை மீள் பரிசீலனை செய்வதற்கும் மீள எடுத்து விளக்குவதற்குமான தேவை இப்பொழுது நிலவி வருகின்றது. உலக பொருளாதாரத்தின் பரிணாம வளர்ச்சியை வழிநடத்துவதற்கான தற்போதைய கொள்கைகள் - அதாவது உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் போன்ற கொள்கைகள் - கைத்தொழில் நாடுகளில் உருவாகிய கொள்கைகளாகும். எனவே, அவை அந்த வகையில் அந்நாடுகளின் அக்கறைகளையும் கருதுகோள்களையும் பிரதிபலிப்பனவாக இருந்து வருகின்றன. அத்தகைய கொள்கைகள் அபிவிருத்தி செயன்முறையின் கூறுகள் தொடர்பாக எத்தகைய விசேட கவனத்தையும் செலுத்தவில்லை. அவை தமது பொருத்தப்பாடும் அனுகூலத் தாக்கங்களும் அகிலம் தழுவியவை என பெருமளவுக்கு அனுமானித்து வருகின்றன. கட்டற்ற திறந்த சந்தைகளையும் உற்பத்திக் காரணிகளின் நகர்வினையும் ஆதரித்துப் பேசிய சாஸ்திரிய பொருளாதார கோட்பாட்டின் கருதுகோள்களுக்கு இணையானதாகவே இந்த தர்க்கம் காணப்படுகின்றது. ஆனால், இந்த செயன்முறையின்போது ஏகபோக வர்த்தக கூட்டுக்களினால் உருவாக்கப்பட்டிருக்கும் திரிபு நிலைகள், விவசாயப் பண்டங்களைப் பொறுத்தவரையில் சீராக்கல் செயன்முறையின் பலவீனங்கள் என்பவை புறக்கணிக்கப்பட்டுள்ளன. உண்மையிலேயே வரலாற்றின் பழைய அனுபவத்திலிருந்தும் இதற்கு இணையான ஒரு சம்பவத்தை சுட்டிக்காட்ட முடியும். அதாவது, இங்கிலாந்து முன்னோடி கைத்தொழில் நாடு என்ற வகையில் கட்டற்ற வர்த்தகம் மற்றும் தலையிடாக் கொள்கை என்பவற்றை முன்வைத்து, அதன் சொந்த நலன்களை விருத்தி செய்து கொள்ளும் விதத்தில் கைத்தொழில் துறையில் முன்னேறிக் கொண்டு சென்றபொழுது பெரிதும் பின்தங்கியிருந்த ஏனைய நாடுகள் தமது எதிர்ப்பினை தெரிவித்திருந்ததுடன், பாதுகாப்புவாதக் கொள்கைகளையும் பெருமளவுக்கு தெரிவு ரீதியிலான கொள்கைகளையும் தொடர்ந்தும் பின்பற்றி வந்தன.

உலக பொருளாதார நிலைமைகள் தீவிரமாக மாற்றமடைந்து வருவதுடன், வளர்முக நாடுகள் அவற்றுக்கு உடனடியாக எதிர்விளைவு காட்டவேண்டிய தேவை உள்ளது. இந்த புதிய சூழ்நிலையில் வளர்முக நாடுகள் பின்பற்ற வேண்டியிருக்கும் அபிவிருத்திக் கொள்கையை அவை மீள வடிவமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல்

என்பவற்றைக் கொண்ட போக்குகளுடன் சமரசம் செய்து கொள்வது எப்படி என்பதே அவை எதிர்நோக்கியிருக்கும் பெரிய சவாலாகும். சர்வதேச மட்டத்தில தற்பொழுது பின்பற்றப்பட்டிருக்கும் கொள்கைகள் வறிய நாடுகளுக்கும் செல்வந்த நாடுகளுக்கும் ஒரே விதத்தில் அனுகூலங்களை எடுத்து வருகின்றன என்ற அனுமானத்தினை வளர்முக நாடுகள் நிராகரிக்கின்றன. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இன்றைய கால கட்டத்தில் எழுச்சி கண்டுவரும் உலகளாவிய பொருளாதாரத்துக்குப் பொருத்தமான புதிய 'அபிவிருத்தி அத்தியாயம்' ஒன்றை அவை உருவாக்கிக் கொள்வது அவசியமாகும். இந்த அபிவிருத்தி அத்தியாயம் உலக பொருளாதாரத்தின் சாதகமான அபிவிருத்திகளிலிருந்து பயனடைந்து கொள்ளும் அதேவேளையில், அவற்றின் எதிர்மறைத் தாக்கங்களுக்கு எதிரான போதிய பாதுகாப்பு முறைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். முன்னைய அபிவிருத்திக் கொள்கையின் ஒருசில கூறுகள் இதற்கென மாற்றி அமைக்கப்படுதல் வேண்டும். அதேவேளையில், அதன் செல்லுபடியாகக் கூடிய கூறுகளை தக்கவைத்துக் கொள்ளவும் வேண்டும். மாறிவரும் புதிய சூழ்நிலையை சிறந்த முறையில் பிரதிபலிக்கக்கூடிய புதிய அணுகுமுறைகள் முன்வைக்கப்படுவதும் அவசியமாகும்.

முன்வைக்கப்பட வேண்டிய 'அபிவிருத்தி அத்தியாயம் ' அபிவிருத்தி செயன்முறை குறித்த அனைத்துமடங்கிய பகுப்பாய்வொன்றை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை. மேலும், அதனுடன் சம்பந்தப்பட்டிருக்கும் சிக்கலான கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் என்பவற்றை அது விரிவாக எடுத்து விளக்க வேண்டிய தேவையும் இருந்து வரவில்லை. வளர்ச்சியடைந்த நாடுகளினாலும் சர்வதேச நிறுவனங்களினாலும் முன்னெடுக்கப்பட்ட புதிய மாற்றங்கள் காரணமாகவே பிரதானமாக தற்போதைய நெருக்கடிகள் தோன்றியுள்ளன. எனவே, நாம் உத்தேசிக்கும் புதிய 'அபிவிருத்தி அத்தியாயம்' இப்பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதுடன், அபிவிருத்தி தேவைகள் மீதான அவற்றின் தாக்கத்தினையும் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக மூன்று விசேஷ துறைகள் மீது கவனம் செலுத்துவது அவசியமாகும். உலக வர்த்தக நிறுவனத்தின் ஸ்தாபிதத்துடன் அதன் அனுசரணையின் கீழ் பல விதிமுறைகளும் கட்டுப்பாடுகளும் அறிமுகம் செய்து வைக்கப்படுகின்றன. இவற்றுடன் கூடிய விதத்தில் தற்பொழுது எழுச்சி கண்டு வரும் உலக வர்த்தக முறைமை இதில் முதலாவதானதாகும். இரண்டாவது அம்சம் வளர்முக நாடுகளின் உள்நாட்டுக் கொள்கைகளை உருவாக்குவதுடன் சம்பந்தப்பட்டுள்ளது. குறிப்பாக உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் இத்தகைய கொள்கைகளை ஆதரித்துப் பேசி வருவதுடன் அவற்றை வலியுறுத்தியும் வருகின்றன. அவை கடன்கள் மற்றும் ஏனைய உதவிகள் என்பவற்றுக்கான நிபந்தனைகளாக இக்கொள்கைகளை முன்வைத்து வருகின்றன. மூன்றாவது விடயம் ஐநா அமைப்பின் பல்வேறு கூறுகளின் பங்களிப்புக்களாகும். ஒரு சில சந்தர்ப்பங்களில் ஐநா முன்னர் வழங்கிய பங்களிப்புக்களிலிருந்து பின்வாங்கியுள்ளது.

உலக வர்த்தக முறைமையை பொறுத்த வரையில் வளர்முக நாடுகள் எத்தகைய சர்வதேச வர்த்தக முறையை ஸ்தாபிக்க விரும்புகின்றன என்பதனை தெரிந்து கொள்ள வேண்டிய தேவை இருந்து வருகின்றது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அபிவிருத்தி செயன்முறை துரிதப்படுத்தப்படுவதனை பாதுகாத்து, தூண்டக் கூடிய உலக வர்த்தக முறைமையொன்றின் பண்புக் கூறுகளை எடுத்து விளக்க வேண்டிய தேவை இருந்து வருகின்றது. பகிரங்கமான எவருக்கும் பாரபட்சம் காட்டாத உலக வர்த்தக முறை ஒன்று அதில் பங்கேற்கும் அனைவருக்கும் ஏதோ ஒரு வகையிலான அனுகூலங்களை பெற்றுக் கொடுக்கும். 'GATT' அமைப்பு முதலில் வளர்முக நாடுகளினால் 'பணக்காரர்களின் கழகம்' என நோக்கப்பட்டு வந்தது. ஆனால், பிற்பாடு முன்னைய தர்க்கவியலை அடிப்படையாகக் கொண்டு 'GATT' அமைப்பில் அவர்கள் அதிகரித்த அளவில் பங்கேற்றனர். 'GATT' அமைப்பின் விதிமுறைகள் குறிப்பாக பாகம் 4 க்கு ஊடாக வளர்முக நாடுகளுக்கென விசேட ஏற்பாடுகளை கொண்டிருந்தன. அதாவது 'சிறப்பு மற்றும் வித்தியாசமான' கவனம் செலுத்தப்பட வேண்டும் என்ற விடயம் அங்கீகாரம் பெற்றிருந்தது.

புதிய உலக வர்த்தக அமைப்பு, வளர்முக நாடுகள் 'GATT' அமைப்பின் கீழ் அனுபவித்து வந்த ஒரு சில சலுகைகளையும் கூட இல்லாமல் செய்துள்ளது என்ற ஓர் உணர்வு இப்பொழுது நிலவி வருகின்றது. உலக வர்த்தக நிறுவன உடன்படிக்கையின் கீழ் வளர்முக நாடுகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் ஒரேயொரு விசேட சலுகை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதில் அவற்றுக்கு வளர்ச்சியடைந்த நாடுகளிலும் பார்க்க சற்று அதிகமான கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதாகும். மேலும், சேவைகள், மூலதனப் பாய்ச்சல்கள் மற்றும் அறிவுசார் சொத்து என்பவற்றையும் உள்ளடக்கும் பரந்த அடிப்படையிலான கொடுக்கல் வாங்கல்களையும் சட்டரீதியாக மேற்கொள்ள வேண்டியிருக்கும் ஒழுக்காற்று முறை என்பவற்றையும் உள்ளடக்குகின்றது. இது மிக முக்கியமான ஒரு விடயமாகும். 'GATT' அமைப்பின் கீழ் பண்ட வர்த்தகம் மட்டுமே இதன் கீழ் எடுத்துவரப்பட்டிருந்தது. இத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் சர்வதேச வர்த்தக விதிமுறைகளுக்குள் உள்ளடக்கப்பட்டிருப்பதானது நாடுகளின் இறைமையின் மீதும் உள்நாட்டுக் கொள்கைகளை வகுப்பதிலும் பிரயோகிப்பதிலும் அவை இதுவரை காலமும் அனுபவித்து வந்த நெகிழ்ச்சித் தன்மையின் மீதும் தாக்கங்களை எடுத்து வருகின்றது. உலக வர்த்தக நிறுவனத்தின் புதிய விதிமுறைகள் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் பொருந்துவனவாக இருந்து வந்தபோதிலும், புதிய விதிமுறைகள் மற்றும் ஒழுக்காற்று நெறிமுறைகள் என்பன பொருந்தக்கூடிய துறைகளை பொறுத்த வரையில் வளர்முக நாடுகள் பொதுவாக இறக்குமதி நாடுகளாகவே இருந்து வருகின்றன. ஏற்றுமதி நாடுகளாக அனேகமாக அவை இருந்து வரவில்லை. எனவே, வழங்கப்பட்டிருக்கும் சலுகைகள், பாதுகாப்புக்கள் மற்றும் உத்தரவாதங்கள் எனபவற்றின் மூலம் அவை பயனடையப் போவதில்லை.

வர்த்தக அமைப்பின் விதிமுறைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த துறைகள் இப்பொழுது விரிவுபடுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பாக வளர்முக நாடுகள் காட்டும் எதிர்விளைவு தற்காப்புத் தன்மை வாய்ந்ததாகவும், சேதத்தைக் குறைத்துக் கொள்ளும் இயல்பினைக் கொண்டதாகவும் இருந்து வருகின்றது. இதுவரையில் மிகவும் குறைந்த அளவிலேயே இதன் மூலம் பயனுள்ள விளைவுகள் கிட்டியுள்ளன. பொதுவாக உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயன்முறையினால் எடுத்து வரப்பட்ட குறைபாடுகள், சமனின்மைகள் மற்றும் நெருக்கடி நிலைமைகள் என்பன மேலோங்கி காணப்பட்டன. உருகுவே சுற்றுப் பேச்சு வார்த்தைகளின் ஒரு சில முடிவுகள் அமுல் செய்யப்பட்டது தொடர்பாக ஏமாற்றங்கள் காணப்படுகின்றன. விவசாயம் மற்றும் புடவைகளிலான வர்த்தகம் என்பவற்றின் மூலம் வளர்முக நாடுகளுக்கு கிட்டும் அனுகூலங்கள் ஏமாற்றமளிப்பவையாகவே இருந்து வந்துள்ளன. அது மட்டுமன்றி உலக வர்த்தக நிறுவன ஆள்புல எல்லையை மேலும் புதிய துறைகளை நோக்கி விரிவுபடுத்துவதற்கென வளர்ச்சியடைந்த நாடுகள் மேற்கொண்டு வரும் முயற்சிகள் தொடர்பாகவும் ஆழ்ந்த கவலை தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த புதிய துறைகள் முதலீட்டுக்கு ஒரு பல்பக்க அமைப்பு, வர்த்தகம் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான விதிமுறைகள், வர்த்தகம் மற்றும் ஊழியம் தொடர்பான விதிமுறைகள் மற்றும் போட்டிக் கொள்கை என்பவற்றையும் உள்ளடக்குகின்றன. வளர்முக நாடுகள் இவற்றிற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த போதிலும் வளர்ச்சியடைந்த நாடுகள் - குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய

யூனியன் மற்றும் ஜப்பான் முதலியவை - மேலே குறிப்பிடப்பட்ட புதிய துறைகளையும் உள்ளடக்குவதற்கென ஒரு புதிய பேச்சுவார்த்தை சுற்று ஆரம்பிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வருகின்றன. தமது சொந்த நலன்கள் மற்றும் முன்னுரிமைகள் என்பவற்றை பிரதிபலிக்கக் கூடிய விதத்தில் உலக வர்த்தக முறைமை உருவாவதனை உறுதி செய்து கொள்வது எப்படி என்ற சவாலை இப்பொழுது வளர்முக நாடுகள் எதிர்கொண்டுள்ளன.

எழுச்சி கண்டு வரும் புதிய சூழ்நிலையில் இந்நாடுகள் வெறுமனே எதிர்விளைவு காட்டும் அடிப்படையிலும் தற்காப்பு அடிப்படையிலும் மட்டும் நடந்து கொள்வதால் பயனேற்படப் போவதில்லை. அதற்கு மாறாக, தமது தேவைகளுக்கு நேரடியாக உதவக் கூடியதும், அபிவிருத்தி செயன்முறையை துரிதப்படுத்தக் கூடியதுமான ஒரு புதிய வர்த்தக முறைமையை வடிவமைத்து முன்வைக்க வேண்டிய தருணம் இப்பொழுது வந்துள்ளது. அத்தகைய ஒரு வடிவமைப்பை வளர்முக நாடுகள் உலக வர்த்தக நிறுவனத்திடமும் அதன் அனைத்து உறுப்பினர்களிடமும் சமர்ப்பிக்க வேண்டும். அது பேச்சுவார்த்தைகளுக்கான ஓர் அடிப்படையாக வளர்ச்சியடைந்த நாடுகள் முன்வைத்திருக்கும் யோசனைகளுக்கு இணையான விதத்தில் முன்வைக்கப்படுதல் வேண்டும். இந்த நிலையில் இறுதியில் கருத்துகளுக்கிடையிலான ஒரு சமரசம் தோன்ற முடியும். இதனை அடுத்து தோன்றும் பெறுபேறு முன்னைய 'GATT' இல் உள்ளடக்கப்பட்டிருந்தது போல் வளர்முக நாடுகளுக்கு பொருந்தக்கூடிய விசேஷ ஏற்பாடுகளை உள்ளடக்கியிருக்க வேண்டும். ஆனால், அது உள்ளடக்கப்பட்டிருக்கும் புதிய துறைகளை கவனத்தில் எடுத்து கணிசமான அளவில் அனைத்து விடயங்களையும் உள்ளடக்கக் கூடிய விதத்தில் இந்த ஏற்பாடுகள் உருவாக்கப்படுதல் வேண்டும். உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டபொழுது வளர்முக நாடுகள் வேறுவழியின்றி அவற்றை ஏற்றுக் கொண்டன. பேச்சுவார்த்தைக்கு எடுத்துக் கொள்ளப்படும் புதிய துறைகளில் வளர்முக நாடுகள் எதிர்கொண்டு வரும் விசேஷ பிரச்சினைகள் மற்றும் அவற்றின் தேவைகள் என்பன குறித்து அனேகமாக எத்தகைய பகுப்பாய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை. அடுத்து வரும் கூட்டத் தொடர்களின்போது இந்தக் குறை நிவர்த்தி செய்யப்படுவது மிக முக்கியமான ஒரு தேவையாக இருந்து வருகின்றது.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல முதலில் விரிவான 'அபிவிருத்தி அத்தியாயம்' ஒன்றுக்கான தேவை இருந்து வருகின்றது. அது உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் செயன்முறைக்கும் அபிவிருத்தி தேவைகளுக்கும் இடையிலான சாதகமான மற்றும் பாதகமான இடைத் தொடர்புகளை முன்வைத்தல் வேண்டும். குறிப்பாக எழுச்சிகண்டு வரும் புதிய சர்வதேச விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் என்பவற்றின் மீதும் சர்வதேச நிறுவனங்களின் மூலம் அது சிறப்பாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. வளர்முக நாடுகள் மாறுபடும் நிலைமைகளின் கீழ் தமது உள்நாட்டு பொருளாதாரக் கொள்கைகளை நிர்ணயித்துக் கொள்ளும் விடயத்தில் ஓரளவுக்கு தன்னாதிக்கத்தை வேண்டி நிற்கின்றன. பொருளாதார முன்னேற்றத்தின் ஒரு குறிக்கோளாக உள்ளூர் ஆற்றல்களை கட்டியெழுப்ப வேண்டிய தேவை, உள்நாட்டுக் கொள்கை கருவிகளின் உருவாக்கம் மற்றும் பிரயோகம் என்பவற்றில் கணிசமான அளவிலான நெகிழ்ச்சித் தன்மைக்குத் தேவை எற்படும் சந்தர்ப்பங்களில் சில விடயங்களை வேறுபடுத்தி நோக்க வேண்டிய தேவை முதலியவற்றை இந்த தன்னாதிக்கம் பிரதிபலிப்பது அவசியமாகும். சர்வதேச வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட 'அபிவிருத்தி அத்தியாயம்' இத்தகைய தேவைகளை கவனத்தில் எடுக்க வேண்டும். சர்வதேச வர்த்தகத்தின் ஒரு சில துறைகளில் வளர்முக நாடுகள் ஓரளவிலான ஒழுக்காற்றுக்கான கடப்பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியும். அத்துடன் காலக் கெடுவுடன் கூடிய நடவடிக்கையினையும் ஏற்றுக் கொள்ளலாம். ஏனைய துறைகளில் தன்னாதிக்கத்துக்கான ஓரளவு தேவை பாதுகாக்கப்படுதல் வேண்டும். வருங் காலத்தில் உலக வர்த்தக நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் ஆரம்பிக்கப்படக் கூடிய புதிய பேச்சுவார்த்தைகளின் போது தமது அணுகுமுறையை நிர்ணயித்து நெறிப்படுத்திச் செல்லும் பொருட்டு இந்த விடயங்களை நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கிக் கொள்ள வேண்டும்.

உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஒரு சில முடிவுகள் செயற்படுத்தப்பட்டு வரும் விதம் குறித்து பல வளர்முக நாடுகள் ஏற்கனவே கவலை தெரிவித்துள்ளன. மேலும், வளர்ச்சியடைந்த நாடுகளினால் முன்வைக்கப்பட்டு வரும் ஒருசில புதிய விடயங்கள் தொடர்பாகவும் அச்சங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இத்தகைய யோசனைகள் பெருமளவுக்கு வளர்ச்சியடைந்த நாடுகளின் அக்கறைகள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றையே பிரதிபலிக்கின்றன. வளர்முக நாடுகள் இவற்றுக்கு அவசியமான திருத்தங்களை எடுத்து வரக்கூடிய விதத்தில் தமது எதிர்விளைவுகளை முன்வைப்பது மிக முக்கியமாகும்.

ஆனால், சர்வதேச வர்த்தக பிரச்சினை களை உள்ளடக்கும் ஒரு புதிய 'அபிவிருத்தி அத்தியாயம்' அதற்கும் அப்பால் செல்ல வேண்டும். சாதகமான முறையில் தமது நலன்களை மேம்படுத்தி, அபிவிருத்தி செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு உதவக்கூடிய சர்வதேச வர்த்தக முறையொன்றின் ஏற்பாடுகளையும் குணாம்சங்களையும் அது இனங்கண்டு உருவாக்குதல் வேண்டும். இத்தகைய ஏற்பாடுகளில் சில உருகுவே சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன்னரான ஏற்பாட்டில் இருந்து வந்தன. ஆனால், பிற்பாடு அவை கைவிடப்பட்டன. முன்னுரிமைகளின் பொதுமைப்படுத்தப்பட்ட முறை, தெரிவு செய்யப்பட்ட வளர்ச்சியடைந்த மற்றும் வளர்முக நாடுகளின் புதிய வர்த்தகக் கூட்டுக்கள் காரணமாக உறுப்பினர் அல்லாத வளர்முக நாடுகளுக்கு பாரபட்சம் காட்டுதல், அங்டாட் மற்றும் ஐநா வின் ஏனைய முகவரகங்கள் என்பவற்றின் கீழ் முன்னர் முடிவாக்கப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் என்பவற்றையும் இவை உள்ளடக்குகின்றன. ஐநா முகவரகங்களின் கீழ் முன்னர் வரையறைகளுடன் கூடிய வர்த்தக நடைமுறைகள், கப்பற்படுத்தல், தொழில்நுட்ப இடமாற்றம், பல்தேசிய நிறுவனங்களின் நடத்தை, பண்டச் சந்தைகளை பலப்படுத்தி ஸ்திர நிலைக்கு எடுத்துவருதல் போன்ற விடயங்களை உள்ளடக்கக் கூடிய விதத்தில் பல உடன்படிக்கைகள் முடிவாக்கப்பட்டிருந்தன. இத்தகைய உடன்படிக்கைகளுக்கும் ஏனைய ஏற்பாடுகளுக்குமான தேவை உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் காரணமாக இப்பொழுது மேலோங்கியுள்ளது. பொருளாதார சக்தி மற்றும் அபிவிருத்தி மட்டம் என்பவற்றில் உலக அளவில் நிலவி வரும் பாரிய ஏற்றத்தாழ்வுகளுக்கு மத்தியில் உலக வர்த்தகம் தொடர்பான ஒரு பகிரங்கமான நடைமுறை இப்பொழுது அவசியமாகியுள்ளது. உலக வர்த்தகம் தொடர்பாக எந்த ஒரு 'அபிவிருத்தி அத்தியாயத்திலும்' இந்த விடயங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

எழுச்சிகண்டு வரும் உலகளாவிய பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி செயன்முறை என்பவற்றுக்கிடையிலான இடைத் தொடர்புகளில் வேறு சில பரிமாணங்களும் காணப்படுகின்றன. இவை பன்முகப்பட்டவையாகும். ஆனால், சர்வதேச நிறுவனங்கள் வகித்து வரும் முதன்மையான பங்கின் பின்புலத்தில், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களினால் விதித்துரைக்கப்படும் கொள்கை விதிமுறைகள் குறித்து குறிப்பாக நாங்கள் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இக்கொள்கைகளின் பிரகாரம் உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் கொள்கைகளில் வளர்முக நாடுகளின் பங்கேற்பு அனைத்து நாடுகளையும் ஒற்றுமைப்படுத்தும் ஒரு பொதுவான போக்காக நோக்கப்பட்டு வருகின்றது.

வளர்முக நாடுகளின் உள்நாட்டு கொள்கைகளில் பெரும்பாலானவை சர்வதேச நிதி நிறுவனங்களின் செல்வாக்கை கொண்டுள்ளன. நிதி உதவி மற்றும் ஏனைய வகைகளிலான உதவி என்பவற்றுக்கென விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கூடாக இச்செல்வாக்கு பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. அண்மைய வருடங்களில் கொள்கைகளிலான இத்தகைய தலையீடுகள் வரவர அதிகரித்து வந்துள்ளன. நிதியுதவி கோரும் செய்திட்டங்கள் தொழில்நுட்ப ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் சாத்தியத்திறன் கொண்டவையாக இருந்து வரவேண்டும் என வலியுறுத்துவதிலிருந்து தொடங்கி படிப்படியாக இத்தலையீடு விரிவடைந்து சென்றுள்ளது. உறுதியான நாணயம் மற்றும் இறைக் கொள்கை முகாமை, ஒழுங்குவிதி தளர்ப்பு தொடர்பான பரவலான கொள்கைகள், தனியார்மயமாக்கல், சந்தைச் சக்திகளின் செயற்பாட்டிற்கென அதிகரித்த அளவில் வாய்ப்பளித்தல் என இந்நிபந்தனைகள் விரிவடைந்து சென்றுள்ளன. அண்மைக் காலத்தில் வறுமை ஒழிப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பு வலைகள் என்பன தொடர்பாகவும் இந் நிறுவனங்கள் கவனஞ் செலுத்தி வருகின்றன. குறிப்பாக, சர்வதேச நிதி நிறுவனங்களின் ஆலோசனை மற்றும் விதப்புரை என்பவற்றின் காரணமாகவே அண்மைக் காலத்தில் பெரும்பாலான நாடுகளில் இறக்குமதி தாராளமயமாக்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பல சந்தர்ப்பங்களில் இந்நிறுவனங்கள் விதித்துரைக்கும் கொள்கைகள் உள்நாட்டு அதிகார இணைப்புக்களுடன் சம்பந்தப்பட்டிருந்த சீர்குலைவு அரசியல் சக்திகளையும் ஏனைய அழுத்தங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய ஒழுக்காற்றுக் கூறுகளை அறிமுகம் செய்து வைப்பதற்கு உதவியுள்ளன. அதேவேளையில், அவை பல குறைபாடுகளையும் கொண்டுள்ளன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இக்கொள்கை நடைமுறைகள் கோட்பாட்டு கண்ணோட்டத்தில் ஒரே சீரான இயல்பினை கொண்டதாக இருந்து வருவதுடன், தனிப்பட்ட வளர்முக நாடுகளின் வேறுபட்ட நிலைமைகளுக்கேற்ப அனுசரித்துச் செல்வதற்கான வாய்ப்பினை அனேகமாக அவை வழங்குவதில்லை. மிதமிஞ்சிய அளவுக்கு சித்தாந்த ரீதியிலான நிலைப்பாடுகளை அவை பிரதிபலிப்பதுடன், தாம் பிரயோகிக்கப்படும் அரசியல் மற்றும் சமூகச் சூழல் தொடர்பாக அவை எத்தகைய கவனத்தையும் செலுத்துவதில்லை. மேலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒழுக்காறு மற்றும் உறுதியான முகாமைத்துவம் என்பவற்றின் பெயரில் அவை பொருளாதார சுருக்கக் கொள்கைகளில் மிதமிஞ்சிய அளவுக்கு கவனம் செலுத்தி வருவதுடன், அவை தூண்டக்கூடிய அரசியல் மற்றும் சமூக கொந்தளிப்புக்களை அலட்சியம் செய்கின்றன. மேலும், உள்நாட்டுக் கொள்கை உருவாக்கத்தில் வளர்முக நாடுகள் வைத்திருக்கக் கூடிய தன்னாதிக்கத்தை பதிலீடு செய்வதற்கு அவை முயலுகின்றன. சர்வதேச நிறுவனங்களின் ஆலோசனை எவ்வளவு தான் பெறுமதிமிக்கதாக இருந்து வந்த போதிலும், உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் என்பனவற்றின் உள்நாட்டுக் கொள்கை பணியை அந்நிறுவனங்களின் பொறுப்பில் விட்டுவிடக்கூடாது. அபிவிருத்தி தொடர்பான முக்கியமான பல பிரச்சினைகளில் அந்நிறுவனங்கள் முடிவெடுப்பதற்கு இடமளிக்கக முடியாது.

ஒரு 'அபிவிருத்தி அத்தியாயம்' அபிவிருத்தி செயன்முறையில் வேறுபட்ட சூழ்நிலைகளில் வகிக்க வேண்டியிருக்கும் பங்கினை மீண்டும் வலியுறுத்துவது அவசியமாகும். உள்நாட்டு தொழில் முயற்சிகளுக்கு ஓர் அளவுக்கேனும் - விதிமுறைகளுடன் கூடிய வரையறுக்கப்பட்ட மற்றும் காலக் கெடுவை கொண்ட விதத்தில் - பாதுகாப்பு வழங்கப்பட வேண்டிய தேவையை அது அங்கீகரித்தல் வேண்டும். துளிர்விடும் கைத்தொழல்களின் தேவைகளை மட்டுமன்றி பௌதீக, நிதி மற்றும் நிறுவனரீதியான கட்டடமைப்பு வசதிகளில் அவை எதிர்கொண்டு வரும் கடுமையான வரையறைகளை கருத்தில் கொண்டு இப்பாதுகாப்பு வழங்கப்படல் வேண்டும். மேலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் முயற்சிகளுக் கிடையில் கற்றுக்கொள்ளும் விடயத்துக்கு முக்கியத்துவமளிகக்கும் விதத்தில் சாதகமான இடைத் தொடர்புகள் உருவாக்கப்பட வேண்டிய தேவையையும் அது அங்கீகரித்தல் வேண்டும். இந்த இடைத் தொடர்புகள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் அறிவு உள்நாட்டுத் திறன்களை வளர்த்துக் கொள்வதற்கு உதவும். மேலும், அரச துறைக்கும் தனியார் துறைக்குமிடையில் கூட்டுமுயற்சி உறவொன்று இருந்து வரவேண்டிய தேவையையும் அது அங்கீகரிக்க வேண்டியுள்ளது. அது மட்டுமன்றி வருமானங்கள் மற்றும் வேலைவாய்ப்பு என்பவற்றின் பகிர்வுக்கெனவும், அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஏனைய காரணங்களுக்கெனவும் சமூக மற்றும் சுற்றுச்சூழல் பரிமாணங்களுக்கும் அது வாய்ப்பளித்தல் வேண்டும். வளர்முக நாடுகள் உலகளாவிய பொருளாதாரத்தில் எழுச்சி கண்டுவரும் போக்குகளுக்கு ஏற்றவிதத்திலான ஒரு கட்டமைப்புக்குள் தமது உள்நாட்டுக் கொள்கைகளை வகுத்துக் கொள்ள வேண்டும். சந்தைகளை சென்றடையக் கூடிய வாய்ப்புக்கள் பெருகி வருவதுடன், மூலதன நகர்வுகளும் அதிகரித்து வருகின்றன. அனைத்துக்கும் மேலாக தொழில்நுட்ப துறையில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதுடன், அது தொடர்பாடல், போக்குவரத்து போன்ற துறைகளில் பெருந்தொகையான வாய்ப்புக்களை உருவாக்கியுள்ளது. வளர்முக நாடுகள் இந்த மாற்றங்களிலிருந்து பயனடைந்து கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். உலகமயமாக்கல் செயன்முறையின் சாதகமான அம்சங்களிலிருந்து உச்சமட்ட பயன்களை பெற்றுக் கொள்வதே வளர்முக நூடுகள் இன்று எதிர்கொண்டு வரும் சவாலாகும். அதேவேளையில், இச்செயன் முறை எடுத்து வரும் தீய விளைவுகளை அவை தவிர்த்துக் கொள்ளவும் வேண்டும். சர்வதேச நிதி நிறுவனங்களின் அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித்திட்டங்கள் ஒவ்வொரு நாட்டிலும் நிலவிவரும் வேறுபட்ட நிலைமைக்கேற்ப வளைந்து கொடுக்கக்சுடிய வித்தில் உருவாக்கப்பட வேண்டும். மேலும், அவை வளர்முக நாடுகளின் கொள்கைகளுக்கு பதிலீடு செய்யாமல் அவற்றுக்கு ஆதரவும் வழிகாட்டுதலும் வழங்கி வர முயற்சிக்க வேண்டும். இந்த வகையில், இந்நிறுவனங்கள் வகித்து வரும் பாத்திரத்தை கணிசமான அளவில் மேம்படுத்திக் கொள்ள முடியும்.

புதிய 'அபிவிருத்தி அத்தியாயம்' கவனத்தில் எடுக்க வேண்டியிருக்கும் மூன்றாவது விடயம் உலக வர்த்தக நிறுவனம் மற்றும் சர்வதேச நிதி நிறுவனம் என்பன தவிர ஐநா அமைப்பின் பங்களிப்புக்கள் தொடர்பான விடயமாகும். இரண்டாவது உலகப் போரை உடனடுத்து வந்த தசாப்தங்களின்போது ஐநா அமைப்பும் அதன் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்த ஒரு சில முகவரகங்களும் அபிவிருத்திக்கான வெளிச் சூழலை பலப்படுத்தி விருத்தி செய்யும் பணியில் கணிசமான அளவில் ஈடுபட்டு வந்தன. குறிப்பாக அங்டாட் அமைப்பு 1964 தொடக்கம் உலகளாவிய பொருளாதாரத்துடன் சம்பந்தப்பட்ட பல துறைகளை இனங்கண்டிருந்ததுடன், அவற்றுக்கூடாக அபிவிருத்தி செயன் முறைக்கு ஆதரவு வழங்கி, அதனை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளுக்கான முன்னுரிமை தீர்வைகள், வளர்ச்சி அடைந்த நாடுகளினால் வழங்கப்படும் சலுகை ரீதியிலான உதவிக்கான இலக்குகள், பண்டங்களுக்கான ஒருங்கிணைந்த ஒரு நிகழ்ச்சித்திட்டத்துக்கான முன்முயற்சிகள், ஏற்றுமதி சம்பாத்தியங்களில் வீழ்ச்சி ஏற்படும்பொழுது நட்டஈட்டு நிதிப்படுத்தல் தொடர்பான யோசனைகள், வளர்முக நாடுகளுக்கான ஒத்துழைப்புக்கான திட்டங்கள், சர்வதேச திரவத்தன்மையை உயர்த்துவதற்கென ஒரு புதிய ஒதுக்குச் சொத்தினை உருவாக்குவது தொடர்பான யோசனைகள், தொழில்நுட்ப இடமாற்றம் தொடர்பான பெருந்தொகையான ஏற்பாடுகள் என்பவற்றையும இவை உள்ளடக்கி யிருந்தன. அபிவிருத்தியில்

(28ஆம் பக்கம் பார்க்க)

# "உலகமயமாக்கல் அதன் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமானால் கைத்தொழில் நாடுகள் அபிவிருத்திக்கென கடினமாக உழைக்க வேண்டும்"

– அங்டாட் அறிக்கை –

வளர்முக நாடுகள் உலகளாவிய வர்த்தக மற்றும் நிதி அமைப்புடன் நெருக்கமாக ஒருங்கிணைவதன் மூலம் துரித வளர்ச்சி ஏற்படுவதில்லை. ஆனால், அதிகரித்த அளவிலான வெளிப் பற்றாக்குறைகளும் ஸ்திரமற்ற நிலையுமே ஏற்படுகின்றது. அங்டாட் அமைப்பு அதன் வர்த்தக மற்றும் அபிவிருத்தி அறிக்கையில் (1999) எங்கு தவறு நடந்துள்ளது என்பதனை விளக்குவதுடன், அபிவிருத்திக் கொள்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்துகின்றது.

'இன்றைய கால கட்டத்தில் உலக பொருளாதாரம் அண்மைக் கால வரலாற்றில் முன்னெப்பொழுதும் இருந்திராத அளவுக்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. ஆனால், வளர்முக நாடுகள் ஆழமாக வேரூன்றிப் போயுள்ள வறுமை மற்றும் குறைவிருத்தி என்பவற்றை ஒழிப்பதற்கு போதிய வளர்ச்சி வீதங்களை சாதித்துக் கொள்ளும் பொருட்டு வெளி மூல வளங்களில் இப்பொழுது மேலும் அதிக அளவில் தங்கியிருந்து வருகின்றன' என இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது. 'உடன் கிடைக்கும் பணம்' அன்றி சந்தையை அணுகும் வாய்ப்பே வெற்றிக்கான திறவுகோலாக இருந்து வருகின்றது என்பதனை நேரடி அனுபவங்களின் பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்டு அது வலியுறுத்துகின்றது.

இப்பொழுது வளர்முக நாடுகளின் பெரும்பாலான பாகங்களில் வர்த்தகம் தாராளமயமாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், பொருளாதார வளர்ச்சி பாரிய இறக்குமதிகளின் மூலம் உறிஞ்சிக் கொள்ளப்படுகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளுக்கான அதிகரித்த அளவிலான இறக்குமதிகளுக்கு ஊடாக சென்மதி நிலுவை இடைவெளியை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சிகள் மந்தமான சந்தைகள், மோசமான வர்த்தக நியதிகள் மற்றும் பாதுகாப்புவாதம் போன்ற இடையூறுகளை எதிர்கொண்டு வருகின்றன. இதன் விளைவாக வளர்ச்சி வேகத்தை தக்க வைத்துக் கொள்வதற்கு பெருமளவில் ஏதோ ஒரு வகையிலான வெளிநாட்டு மூலதனத்திலேயே தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## கைத்தொழில் நாடுகளின் பாதுகாப்புவாதம்

வளர்முக நாடுகள் உலக பொருளாதாரத்தில் மிக நெருக்கமாக ஒருங்கிணைவதற்கென கணிசமான அளவிலான செலவுடன் கடுமையான பிரயத்தனங்களை மேற்கொண்டு வந்துள்ளன. ஆனால்,வளர்ச்சியடைந்த நாடுகளில் நிலவி வரும் பாதுகாப்புவாதம் வளர்முக நாடுகள் முழுமையாக போட்டி அனுகூலத்தை பயன்படுத்திக் கொள்வதை தடுத்து வருகின்றது. வர்த்தக தடங்கல்கள் காரணமாக வளர்முக நாடுகள் குறைந்த தொழில்நுட்ப கைத்தொழில்களில் மட்டும் 70,000 கோடி அமெரிக்க டொலர் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களை வருடாந்தம் இழந்து வருகின்றன என இந்த அறிக்கை மதிப்பிட்டுள்ளது. இது 1990 களில் இடம்பெற்ற (வெளிநாட்டு நேரடி முதலீட்டையும் உள்ளிட்ட) சராசரி வருடாந்த தனியார் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களின் நான்கு மடங்குக்கு இணையானதாகும்.

'தென் மண்டலத்துடன் வர்த்தகத்தை விரிவாக்கிக் கொள்வதன் மூலம் அதிக அளவிலான தொழில் வாய்ப்புக்கள் மற்றும் வருமான அதிகரிப்பு என்பவற்றின் வடிவில் நேரடி அனுகூலங்கள் இருந்து வருகின்றன என்ற விடயத்தை வடபுல அரசாங்கங்கள் (ஓரளவுக்கு சந்தேகக் கண்கொண்டு நோக்கும்) அந்நாடுகளின் மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும்' என அங்டாட் செயலாளர் நாயகம் இந்த அறிக்கைக்கான முன்னோட்டத்தில் குறிப்பிடுகிறார்.

வளர்ச்சியடைந்த நாடுகளில் வழங்கப்படும் சந்தை வாய்ப்புக்கள் 'சாதகமான வர்த்தக செயல்திட்டமொன்றின்' மைய அம்சமாக இருந்து வர வேண்டும் என அங்டாட் வலியுறுத்துகின்றது. தீர்வைகள் நீக்கப்பட வேண்டும் என்பதனையும், வளர்முக நாடுகள் அக்கறை கொண்டிருக்கும் (பாதணிகள், தோல் மற்றும் பிரயாணப் பொருட்கள், புடவை மற்றும் ஆடை வகைகள், பொம்மைகள், விளையாட்டுப் பொருட்கள், பலகை மற்றும் காகித உற்பத்திகள், இறப்பர். பிளாஸ்டிக் மற்றும் வேளாண் பொருட்கள் முதலிய) பண்டங்களின் உற்பத்தி பெருக வேண்டும் என்பதனையும இது குறிக்கிறது. மேலும், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பைச் சேர்ந்த (OECD) நாடுகளில் விவசாயத் துறைக்கு வழங்கப்பட்டு வரும் 35,000 கோடி அ.டொ. மானியம் நீக்கப்பட வேண்டும் என்றும் அது கோருகிறது. இந்த மானியத்தின் அளவு வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளின் பெறுமதியிலும் பார்க்க இரு மடங்காகும்.

வளர்முக நாடுகளில் வெள்ளமெனப் பெருகி வரும் இறக்குமதிகளைக் குறைப்பதற்கும், ஏற்றுமதிகளைப் பெருக்குவதற்கும் போட்டிக் கைத்தொழில்கள் இருந்து வர வேண்டிய அவசியத்தையும் இவ்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது. இங்கும் கூட சர்வதேச வர்த்தக முறையில் நிலவி வரும் பாரபட்சங்கள் வளர்முக நாடுகளின் அக்கறைகளுக்க எதிராக செயற்பட்டு வருகின்றன. செல்வந்த நாடுகள் முதிர்ச்சியடைந்துள்ள தமது கைத்தொழில் உற்பத்தியாளர்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கென கணிசமான அளவிலான நிதி வளங்களை செலவிட்டு வருகின்றன. இது வர்த்தக-கொள்கை கலந்துரையாடல்களின் ஓர் உள்ளார்ந்த பாகமாக குழந்தைப் பருவ கைத்தொழில் கருதுகோளை முன்வைப்பதனை நியாயப்படுத்துகின்றது. வர்த்தகம் சம்பந்தப்பட்ட அறிவுசார் சொத்து உரிமைகள் (TRIPS) மற்றும் வர்த்தகம் சம்பந்தப்பட்ட முதலீட்டு வழிமுறைகள் (TRIMS) உலக வர்த்தக நிறுவனத்தில் மீளாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் பொழுது, வளர்முக நாடுகளுக்கு தீங்கு விளைவிக்கும் கூறுகள் அவற்றிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும். மேலும், வளர்முக நாடுகளுக்கான விசேஷ, வேறுபட்ட முறையிலான கவனிப்பு, விதிகளை அடிப்படையாகக் கொண்ட வர்த்தக முறையின் ஒப்பந்த ரீதியான கடப்பாடுகளின் ஒரு பாகமாக்கப்படுதல் வேண்டும்.

இதுவரை காலமும் உலகளாவிய பொருளாதார முறைமையில் 'நிதியியல் கட்டமைப்பு' தொடர்பான சீர்திருத்தம் வர்த்தக முறைமையின் செயற்பாடுகளிலிருந்து புறம்பான விதத்தில் கலந்துரையாடப்பட்டு வந்துள்ளது. ஒன்றிலொன்று தங்கியிருக்கும் இன்றைய உலகில் இந்த இரு துறைகளிலுமான சீர்திருத்தங்கள் ஒன்றாக மேற்கொள்ளப்பட வேண்டுமென அங்டாட் கேட்டுக்கொள்கிறது.

நடைமுறைக் கணக்குக்கும் மூலதனக் கணக்கு கொள்கைகளுக்கும் இடையிலான ஒரே சீரான தன்மை ஆரம்பப் புள்ளியாக இருந்து வர வேண்டும். வளர்முக நாடுகளின் வெளி நிதி நிலை அதிகரித்த அளவில் ஊறுபடத்தக்கதாக இருந்து வருவதனால், ஒரு நாடு புதிய கடன்களைப் பெற்றுக் கொள்ளாமல் ஒரு வருட கால நிதிக் கட்டப்பாடுகளை நிறைவு செய்து வைக்கக் கூடிய விதத்தில் ஆறு மாத கால இறக்குமதி அளவுக்கு மேற்பட்ட ஒதுக்கினைக் கொண்டிருக்க வேண்டும் என்ற விடயம் இப்பொழுது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

1980 களின் கடன் நெருக்கடியின் பின்னர் மீளவரும் கொடுப்பனவு நெருக்கடிகளை எதிர்கொள்ளும் விதத்தில் உருவாக்கப்பட்ட கொள்கைகளே இன்னமும் வளர்முக நாடுகளில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. துரித தாராளமயமாக்கல் இதற்கென சிபார்சு செய்யப்பட்ட மருந்தாகும். வெளிநாட்டு மூலதனம், சந்தைகள் மற்றும் தொழில் நுட்பம் என்பவற்றின் மூலம் வளர்ச்சி ஏற்படும் என வாக்குறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால், கிட்டும் என எதிர்வு கூறப்பட்ட அனுகூலங்கள் இந்நாடுகளுக்கு கிட்டவில்லை. வளர்முக நாடுகளின் வளர்ச்சி 1990 களில் 1980 களின் மட்டங்களைப் பார்க்கவும் துரிதப்படுத்தப்பட்டிருந்தது. அது 1970 களின் வளர்ச்சி விகிதத்தைப் பார்க்கிலும் 2 சதவீதம் குறைவாக இருந்து வந்தது. அதே வேளையில், சராசரி வர்த்தகப் பற்றாக் குறை 3 சதவீதம் உயர்வாக இருந்து வந்தது.

இந்த அறிக்கையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கும் ஏறத்தாழ அரைவாசி வளர்முக நாடுகளில் வர்த்தக இடைவெளி தொடர்ந்தும் அதிகரித்துவரும் போக்கு நிலவி வருவதுடன், பொருளாதார வளர்ச்சி ஒன்றில் வீழ்ச்சி கண்டு வருகிற, அல்லது பின்னடைவு ஏற்பட்டு வருகின்றது. வளர்முக நாடுகளில் வருமான அதிகரிப்பிலும் பார்க்க வேகமாக பற்றாக் குறைகள் ஏன் அதிகரித்து வருகின்றன என்பதற்கு அங்டாட் மூன்று காரணங்களை இனங்கண்டுள்ளது:

0 ஒட்டுமொத்த தாராளமயமாக்கல் வளர்முக நாடுகளில் இறக்குமதிகளின் பிரவாகமொன்றை எடுத்து வந்திருப்பதுடன், இதற்கு இணையான விதத்தில் ஏற்றுமதிகளில் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கவில்லை.

0 1970 களின் ஆரம்ப காலம் தொடக்கம் கைத்தொழில் நாடுகளில் ஒரு மந்தம் ஏற்பட்டு வந்துள்ளது. இது வளர்முக நாடுகளின் பற்றாக்குறைகளுக்கு மேலும் ஒரு வீதப் புள்ளியை சேர்த்துள்ளது.

0 வளர்முக நாடுகளின் வர்த்தக நியதிகள் இடயறாது வீழ்ச்சியடைந்து கொண்டு வருவதுடன், அதன் காரணமாக வளர்முக நாடுகளின் ஏற்றுமதிகளின் கொள்வனவுச் சக்தி வரவர வீழ்ச்சி கண்டு வருகிறது.

இந்தப் பின்னணியில், வளர்முக நாடுகள் வர்த்தக தாராளமயமாக்கல் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு வெளி தனியார் மூலதனத்தை துரத்திச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. ஆனால், மூலதனப் பாய்ச்சல்களின் தாராளமயமாக்கல் நிலைமைகளை மேலும் மோசமடையச் செய்துள்ளது. அதாவது, அது செலாவணி விகித பெறுமதியேற்றத்தையும், ஸ்திரமற்ற நிலையையும் எடுத்து வந்திருப்பதுடன், அதன் மூலம் வர்த்தகத் துறையின் செயற்பாட்டை அலட்சியப்படுத்தியுள்ளது. இந்த அறிக்கை 58 வளர்முக நாடுகளில் செலாவணி விகித அசைவுகளை பரிசீலனை செய்துள்ளது. நாணயப் பெறுமதிகளின் மோசமான நிர்வாகம் 1970 களிலும் பார்க்க இப்பொழுது மிகவும் தீவிரமான ஒரு பிரச்சினையாக இருந்து வருவதாக இவ்வறிக்கை குறிப்பிடுகின்றது. 'வளர்முக நாடுகள் உலகளாவிய வர்த்தக அமைப்புக்குள் உயர் அளவில் ஒருங்கிணைந்து பயனடைந்து கொள்ள வேண்டுமானால் அவை தமது செலாவணி விகிதங்களின் முகாமையை விருத்திசெய்து கொள்வது அவசியமாகும்' என அது கூறுகிறது. வளர்முக நாடுகளின் கொள்கைப் பொறித் தொகுதியில் மூலதனக் கட்டுப்பாடுகள் உள்ளார்ந்த ஒரு பாகமாக இருந்து வருதல் வேண்டும்.

அபிவிருத்தி நிதியின் தனியார்மயமாக்கலானது வளர்முக நாடுகளின் வளர்ச்சிக்கு தடங்கலாக இருந்து வரும் வெளி இடையூறுகளை பெருமளவுக்கு குறைத்துவிடும் என எதிர்பார்க்கப்பட்டது. இது எதிர்பார்த்த விதத்தில் நிறைவேறவில்லை. இருந்த போதிலும், நிதிப் பாய்ச்சல்களின் உள்ளடக்கத்தில் மிகத் தீவிரமான ஒரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. மொத்த மூலதன உட்பாய்ச்சல்களில் உத்தியோகபூர்வ நிதிப்படுத்தல் 1980 களில் 50 சதவீதமாக இருந்து வந்து 1990 களில் 20 சதவீதமாக வீழ்ச்சியடைந்திருந்தது. இந்த வீழ்ச்சி கடந்த தசாப்தத்தின் போது உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியில் ஒரு பாரிய வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதுடன், தனியார் மூலதனப் பாய்ச்சல்களில் கணிசமான அளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பதனையும் குறித்துக் காட்டுகிறது.

இவ்விதம் பாரிய அளவில் புதிய தனியார் மூலதன உட்பாய்ச்சல்கள் இடம்பெற்றிருந்த போதிலும், அவை அனைத்தும் அபிவிருத்தியின் நலன்களைக் கருத்தில் கொண்டு உற்பத்திசார் நோக்கங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இது ஏன் என்பதனை இந்த அறிக்கை விளக்குகிறது:

0 புதிய மூலதனத்தில் பெரும் பகுதி ஊக வணிகத் தாக்கங்களுக்கெதிரான பாதுகாப்பாக ஒதுக்குகளை திரட்டிக் கொள்வதிலோ அல்லது குடிமக்களின் பண வெளிப்பாய்ச்சல்களுக்கு ஈடுசெய்து கொள்வதற்காகவோ உறிஞ்சிக் கொள்ளப்பட்டுள்ளன. 1990 களில் எழுச்சி கண்டு வரும் சந்தைகளுக்குள் எடுத்து வரப்பட்ட ஒவ்வொரு அமெரிக்க டொலரிலும் நடைமுறைக் கணக்கை நிதிப்படுத்துவதற்கு 40 சதவீதத்துக்கும் குறைவான தொகையே கிடைத்தது. ஒதுக்குகளைப் பொறுத்த வரையில் அவற்றின் சம்பாத்தியத்தைக் காட்டிலும் செலவு அதிகமாக இருந்து வருகின்றது. இந்த நிலையில், 1990 களில் வளர்முக நாடுகளில் திரண்ட ஒதுக்குகளின் விலை 5000 கோடி அ.டொ. அளவில் மிக உயர்வாக இருந்து வந்துள்ளது.

0 1990 களில் இடம்பெற்ற நிறுவனங்களின் இணைப்பு மற்றும் கையகப்படுத்தல்கள் என்பவற்றின் காரணமாகவே பிரதானமாக வெளிநாட்டு நேரடி முதலீட்டின் செழிப்பு நிலை தூண்டப்பட்டிருந்தது. இந்நிறுவனங்கள் பெரும்பாலானவை சேவைத் துறையையும், வர்த்தகம் சாராத துறையையும் சேர்ந்தவையாக இருந்து வந்தமையால் அவை கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பினைக் கொண்டிருந்தன. வெளிநாட்டு நேரடி முதலீட்டிலிருந்து தோன்றும் அன்னியச் செலாவணி பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்து வைப்பதற்காக (அதாவது அதிகரித்த அளவிலான இறக்குமதிகள் மற்றும் வெளிநாடுகளுக்கு பணம் அனுப்புதல்) அதே வகையிலான உட்பாய்ச்சல்களுக்கு ஊக்கமளிப்பதானது பெரும் நாசத்தை எடுத்து வரக்கூடியதாக இருக்கும் என இந்த அறிக்கை எச்சரிக்கின்றது.

0 இலாபங்களை நாடிச் செல்லும் பண மூலதனம் அபிவிருத்தி நிதிகளுக்குப் பரவலான ஒரு ஸ்திரமற்ற நிலையை தோற்றுவித்துள்ளது. பங்கு மூலதனம் மற்றும் குறுங்காலக் கடன்கள் என்பன 1990 களில் 10,000 கோடி அ.டொ. மட்டத்தை எட்டியிருந்தது. ஆனால், ஆசிய மற்றும் ரஷ்ய நெருக்கடிகளின்

பின்னர் அவை 1998 இன் முடிவில் 1,500 கோடி அ.டொலர்களாக வீழ்ச்சியடைந்தன.

1990 களின் போது வளர்முக நாடுகளை நோக்கி இடம்பெற்றுள்ள திமர் மூலதனப் பாய்ச்சல்களை உன்னிப்பாக அவதானிக்கும் அங்டாட், இந்தப் புள்ளிவிவரங்கள் உண்மையிலேயே மந்தம் நிலவிய 1980 ளின் பின்னர் பழைய போக்குக்குத் திரும்புவதனையே காட்டுகிறது எனக் குறிப்பிடுகிறது. மொ.உ.உ யில் சராசரியாக 5 சதவீதம். இந்த அளவு கடன் நெருக்கடிக்கு முன்னர் இருந்த 7 சிறந்த வருடங்களின் (1975-82) அளவைவிட வேறுபட்டதல்ல. மறுபுறத்தில், கடந்த காலத்தைப் பார்க்கிலும் இப்பொழுது மூலதனப் பாய்ச்சல்கள் குறிப்பிட்ட பிரதேசங்களில் ஒன்று திரண்டு காணப்படுகின்றன. அதாவது, 20 எழுச்சியடைந்து வரும் சந்தைகளைக் கொண்ட ஒரு சிறு குழு 1990 களில் மொத்த உட்பாய்ச்சல்களில் 90 சதவீதத்துக்கு மேற்பட்டவற்றைப் பெற்றுக் கொண்டுள்ளன. கடன் நெருக்கடி ஏற்படுவதற்கு முன்னர் இவை 50 சதவீத்தையே பெற்று வந்தன.

1990 களில் வளர்முக நாடுகளுக்கான மூலதன உட்பாய்ச்சலில் கணிசமான ஒரு பகுதி 'கடனை உருவாக்காததாக' இருந்து வருவதாக கூறப்பட்ட போதிலும், வெளிக் கடன் சுமை மீண்டும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இலத்தீன் அமெரிக்காவில் 1998 இல் ஏற்றுமதி-கடன் விகிதம் 200 சதவீதத்துக்கும் கூடுதலாக அதிகரித்துச் சென்றிருந்தது.

நிதிக் கட்டமைப்பில் மேற்கொள்ளப்படவிருக்கும் சீர்திருத்தம், அபிவிருத்தி நிதியை வழங்குவதில் தனியார் மூலதனச் சந்தைகள் கொண்டிருக்கும் வரையறைகளை அங்கீகரிக்க வேண்டும் என்றும் இந்த அறிக்கை வலியுறுத்துகின்றது. 'சர்வதேச சமூகம் கடனாளிகளின் உரிமைகளையும் அதேபோல கடப்பாடுகளையும் அங்கீகரிக்கும் விதத்தில் உத்தியோகபூர்வ நிதிப்படுத்தலுக்கு உயர் பங்கினை வழங்க வேண்டியிருப்பதுடன், மிக வறிய வளர்முக நாடுகளுக்கு முழுமையான கடன் நிவாரணத்தையும் வழங்க வேண்டும்'.

(25 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெளிச்சூழல் வகிக்கும் முக்கியத்துவம் மற்றும் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு என்பன ஐநா அமைப்பினால் 'அபிவிருத்தி தசாப்தங்கள்' மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச உத்திகள் என்பவற்றின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டன.

இவை அனைத்தும் ஏதோ ஒரு வழியில் ஆரம்ப காலத்தில் நிலவி வந்த உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைக்கு பொருத்தமான 'அபிவிருத்தி அத்தியாயம்' ஒன்றின் கூறுகளுக்கு பங்களிப்புச் செய்திருந்தன. அண்மைக் காலத்தில் கெடுபிடி யுத்த பகைமைகள் முடிவுக்கு வந்ததனை அடுத்தும், வளர்ச்சி அடைந்த நாடுகள் அதிக அளவுக்குச் சந்தை நோக்கிலான கொள்கைகளை பின்பற்றத் தொடங்கியதனை அடுத்தும் நிலைமை மாற்றமடைந்தது. இது ஐநா அமைப்பின் மீதும் அது முன்னர் வகித்துவந்த பாத்திரத்தின் மீதும் தாக்கத்தை எடுத்து வந்துள்ளது. ஐநா அமைப்புக்குள் கவன மையம் பொருளாதாரத்திலிருந்து அரசியல் நிலைமைகளை நோக்கி திசை திரும்பியது. பொருளாதார பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகளிலும் அதிகரித்த அளவுக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன. மேலும், உலக அரங்கில் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி மற்றும் உலக வர்த்தக நிறுவனம் என்பவற்றின் பாத்திரம் முக்கியத்துவம் பெற்று வந்தது. வணிகத் துறையிலிருந்தும் அரசு சாராத் துறைகளிலிருந்தும் புதிய நபர்கள் இத்துறைகளுக்குள் பிரவேசித்தார்கள். இவை அனைத்தும் ஒரு அபிவிருத்தி அத்தியாயத்துக்கு ஓர் ஆரம்பத்தையேனும் வழங்கிய பழைய முறையை புதிய பதிலீடு எதுவும் இல்லாமல் புறமொதுக்கியுள்ளன. உண்மையிலேயே உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் என்பவற்றை நோக்கிய இன்றைய பாய்ச்சலில் பிரதிபலிக்கப்படும் சந்தை சக்திகள் மீதான நம்பிக்கை இத்தகைய ஒரு பதிலீட்டுக்கான தேவையையும்கூட நிராகரிப்பதாகவே இருந்து வருகின்றது.

வளர்முக நாடுகள் தற்போதைய விவகாரங்களை எந்த வகையிலும் அதே விதத்தில் ஏற்றுக்கொள்ள முடியாது. சுதந்திரமான சந்தைகள் துரிதப்படுத்தப்பட்ட அனைத்து மடங்கிய செயன்முறையொன்றை தானாகவே உருவாக்கும் என்ற நம்பிக்கைக்கு கோட்பாட்டு ரீதியான அடிப்படை எதுவும் இல்லை. அண்மைக் காலத்தில் உலகமயமாக்கலிலிருந்தும் தாராளமயமாக்கலிலிருந்தும் கிடைத்துள்ள நடைமுறை பெறுபேறுகள் காரணமாக, வளர்முக உலகின் பல பாகங்களில் தோல்விகள், ஏற்றத்தாழ்வுகள் மற்றும் நெருக்கடிகள் என்பன தோன்றியுள்ளன. இதிலிருந்து நாங்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய முடிவுகள் நிச்சயமாக கசப்பானவையாகவே இருந்து வருகின்றன. அடுத்து வரும் வருடங்களிலும் உலகமயமாக்கல் மற்றும் தாராளமயமாக்கல் சக்திகள் உலகளாவிய பொருளாதாரத்தைத் தொடர்ந்தும் வழி நடத்திச் செல்ல முடியும். அதே வேளையில், அபிவிருத்திச் செயன்முறையைத் துரிதப்படுத்துவதற்கு அவசிமான கொள்கைகள், பொறிமுறைகள் மற்றும் நடவடிக்கைகள் என்பற்றை உருவாக்கக் கூடிய உடனடித் தேவையும் இருந்து வருகின்றது. அதாவது, வேறு வார்த்தைகளில் சொல்வதானால் வளர்முக நாடுகள் மாறிவரும் உலக பொருளாதாரச் சூழல் வழங்கும் அனுகூலங்களை முழுமையாக பெற்றுக் கொள்ளும் அதே வேளையில் அதன் குறைபாடுகளை தவிர்த்துக் கொள்ள வேண்டியும் உள்ளது. புதிய 'அபிவிருத்தி அத்தியாயம்' ஒன்றின் அடிப்படை நோக்கம் இதுவாகும். இது வர்த்தகம் மற்றும் நிதி ஆகிய துறைகளில் சர்வதேச நிறுவனங்களின் நடவடிக்கைகளை உள்ளடக்குவதுடன், ஐநா அமைப்பு மற்றும் அதன் முகவரகங்கள் என்பவற்றின் நடவடிக்கைகளையும் உள்ளடக்கிக் கொள்ள வேண்டும்.

திருத்தி அமைக்கப்பட்ட அத்தகைய ஒரு அத்தியாயம் ஐநா வின் ஆரம்ப முயற்சிகளில் பொருத்தமானவற்றை தக்கவைத்துக் கொள்ள வேண்டும். அதாவது, சலுகை நியதிகளில் நிதி வசதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தேவை, கடன் நிவாரணம், சக்தி வாய்ந்த பண்டச் சந்தைகள், வளர்முக நாடுகளைச் சேர்ந்த கைத்தொழில் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கான வழிவகைகள் என இவற்றை குறிப்பிட முடியும். ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டது போல இந்தப் புதிய அத்தியாயம் வர்த்தகம் மற்றும் நிதி ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படும் புதிய மாற்றங்களையும் உள்ளடக்க வேண்டும். மேலும், அத்தகைய ஓர் அத்தியாயம் சர்வதேச சமூகத்தின் முடிவுகளை எடுக்கும் செயன்முறைகளில் - குறிப்பாக உலக வர்த்தக நிறுவனம், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் என்பனவற்றின் செயற்பாடுகளில் - வளர்முக நாடுகளின் பங்கேற்பு தொடர்பாக சிறப்பாகக் கவனம் செலுத்துவது அவசியமானதாகும். வளர்முக நாடுகள் முக்கியமான ஒரு விடயத்தை மறந்துவிடக் கூடாது. அதாவது, சர்வதேச அமைப்புக்களில் அவற்றிற்குள்ள முக்கிய சக்தி தமது உறுப்பினர்களின் பலத்திலிருந்தே வருகின்றது என்பதனை அவர்கள் மறந்துவிடக் கூடாது. இது ஒற்றுமைக்கான தேவையை சுட்டிக் காட்டுகின்றது. இந்நாடுகள் தமது பொதுவான அக்கறைகள், வேறுபாடுகள் தொடர்பாக சமரசங்களையும் செய்து கொள்ள வேண்டும். அத்தகைய ஆதரவை வழங்கக்கூடிய ஒரு பொறிமுறையை ஸ்தாபித்துக் கொள்ளும் விடயத்தில் வளர்முக நாடுகள் இதுவரையில் தோல்வி கண்டே வந்துள்ளன. அவை வளர்ச்சி அடைந்த நாடுகளின் அனுபவத்தை பின்பற்ற தவறியிருப்பதுடன், பெரும்பாலும் ஐநா அமைப்புக்களின் பணிகளிலேயே தங்கியிருந்து வந்துள்ளன. எனினும், அத்தகைய முகவரகங்கள் இப்பொழுது இப்பங்கினை வகித்து வரவில்லை. எனவே, ஏதோ ஒரு வகையில் நிரப்பப்பட வேண்டிய ஒரு இடைவெளி இருந்து வருகின்றது. துரிதமாக மாற்றமடைந்து வரும் உலகளாவிய நிலைமைகளை எதிர் கொள்வதற்கு வளர்முக நாடுகளி லிருந்து பயனுள்ள விதத்திலான ஓர் அமைப்பை உருவாக்குவதன் மூலமே இந்த இடைவெளியை நிரப்ப முடியும்.

# சிறு தொழில்கள் தொடர்பான கருதுகோளும் அண்மைக்கால போக்குகளும்

அனோமா கொலொன்கஹபிட்டிய
(சிரேஷ்ட விரிவுரையாளர், வணிகவியல் துறை பேராதனைப் பல்கலைக்கழகம்)

## அறிமுகம்

எந்தவொரு பொருளாதாரத்தினதும் வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி என்பன குறித்து கலந்துரையாடும் பொழுது தற்பொழுது அதனுடன் சம்பந்தப்பட்டிருக்கும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கருதுகோள் சிறுதொழில்கள் தொடர்பான கருதுகோளாகும். இலங்கையின் பொருளாதாரம் காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்று 52 வருடங்கள் கடந்து சென்றிருப்பதுடன், அக்கால கட்டத்தின்போது பொருளாதாரத்தில் ஏற்பட்டிருந்த மாற்றங்களை சுருக்கமாக எடுத்துக்காட்ட முடியும். இலங்கை பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றுக்கொண்ட பொழுது அது இரட்டைப் பொருளாதார முறையொன்றை வாரிசுரிமையாக பெற்றுக்கொண்டது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். அதன் கீழ் பாரம்பரிய (நெல் மற்றும் ஏனைய பயிர்களைக் கொண்ட) பிழைப்பூதிய விவசாயத் துறை ஒரு புறமும் (தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்கிய) வர்த்தக அடிப்படையிலான பெருந்தோட்டப் பொருளாதாரம் மறுபுறமும் இருந்து வந்தது. இதில் தேயிலை பயிர்செய்கைத் துறை மிக முக்கியமான ஒரு துறையாக இருந்து வந்ததுடன், பொருளாதாரத்துக்கு கணிசமான அளவிலான பங்களிப்பினையும் வழங்கியது. எனினும், தற்பொழுது இந்த துறைகள் பொருளாதாரத்துக்கு வழங்கிவரும் பங்களிப்புக்களை அவதானிக்கும் பொழுது அவற்றில் சில மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதனை காண முடிகிறது. ஒட்டுமொத்த விவசாயத்துறை 1948 இல் தேசிய உற்பத்திக்கு வழங்கிய பங்களிப்பு 40% ஆக இருந்து வந்தது. இது 1980 இல் 35% ஆகவும், 1998 இல் 18% ஆகவும் படிப்படியாக வீழ்ச்சியடைந்து கொண்டு வந்திருப்பதனை இலங்கை மத்திய வங்கியின் தரவுகள் எடுத்துக் காட்டுகின்றன. அதேவேளையில், தேசிய உற்பத்திக்கு கைத்தொழில் துறை வழங்கும் பங்களிப்பு 1948 இல் 24% ஆக இருந்து 1998 இல் 30% ஆக உயர்ந்து சென்றிருந்தது. இலங்கையின் பொருளாதாரம் விவசாய பொருளாதார முறையிலிருந்து கைத்தொழில் பொருளாதார கட்டமைப்பொன்றை நோக்கி படிப்படியாக நகர்ந்து செல்வதனை இது புலப்படுத்துகின்றது.

சமூக, பொருளாதார அபிவிருத்தியை கவனத்தில் எடுக்கும் பொழுது குடித்தொகை வளர்ச்சி 1998 இல் 1.1% அளவில் மிகவும் குறைந்த ஒரு மட்டத்தில் இருந்து வந்ததுடன், ஏனைய சமூகக் குறிகாட்டிகளான சிசு மரண விகிதம் (1998 1000:16) மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்து வந்ததுடன் சராசரி ஆயுள் எல்லை (1998: 72 வயது) எழுத்தறிவு (1998: 90%) என்பன மிகவும் உயர் மட்டத்தில் நிலவி வந்தன. இப்புள்ளிவிவரங்கள் இலங்கை சமூக, பொருளாதார வளர்ச்சி அடிப்படையில் உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளின் மட்டங்களுக்கு இணையான மட்டங்களை சாதித்துக் கொண்டுள்ளது, என்பதனை காட்டுகின்றன.

எவ்வாறிருப்பினும், இலங்கைப் பொருளாதாரம் எதிர்கொண்டு வரும் பொருளாதார சிக்கல்களைப் பொறுத்தவரையில் சுதந்திரம் கிடைத்த காலத்தின் போது நாடு எதிர்கொண்ட பல சிக்கல்களை அண்மைக் காலத்திலும் எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது என்பதனை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அண்மைக் காலத்தில் இலங்கைப் பொருளாதாரம் எதிர்கொண்டிருக்கும் மிகவும் தீவிரமான ஒரு பொருளாதாரப் பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டமும் அதனுடன் இணைந்த விதத்தில் தோன்றும் இளைஞர் விரக்தியுமாகும். சுதந்திரம் கிடைத்த காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினை நாட்டில் அறவே இருந்து வரவில்லை என்றே கூற வேண்டும். ஏனெனில் அக்காலத்தில் தென்னிந்தியாவிலிருந்து கூட தொழிலாளர்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டனர். 1948 தொடக்கம் 1997 வரையில் வேலையில்லாத் திண்டாட்ட விகிதம் நிலவி வந்துள்ள விதத்தை நோக்கினால் இப் பிரச்சினையின் தற்போதைய நிலவரத்தை நாங்கள் புரிந்து கொள்ள முடியும்.

| வருடம் | வேலையின்மை % |
|---|---|
| 1948 | - |
| 1953 | 16 |
| 1963 | 13 |
| 1973 | 24 |
| 1994 | 14 |
| 1997 | 10 |

மூலம்: இலங்கை மத்தியவங்கி அறிக்கைகளிலிருந்து தொகுக்கப்பட்டது.

இரண்டாவது மிகப்பெரிய பொருளாதார பிரச்சினை வாழ்க்கைச் செலவு துரிதமாக அதிகரித்துச் செல்வதாகும். பணவீக்க போக்கின் வளர்ச்சியிலிருந்து இதனை கண்டு கொள்ளலாம்.

| வருடம் | வருடாந்த பணவீக்க வேகம் (%) |
|---|---|
| 1948-60 | 0.7 (ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை) |
| 1961-70 | 16 |
| 1971-80 | 13 (ஒரு தீவிரப் பிரச்சினை) |
| 1981-90 | 24 |
| 1992-95 | 14 |
| 1996-97 | 10 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி அறிக்கைகளிலிருந்து தொகுக்கப்பட்டது.


பணவீக்கம் இவ்விதம் தீவிரமாக உயர்ந்து செல்வதன் விளைவாக சமூகத்தின் அனைத்துப் பிரிவினரதும் வாழ்க்கைச் செலவுகள் வருமான மட்டங்களிலும் மிகைத்துக் காணப்படும் ஒரு நிலை ஏற்பட்டது. இதன் இறுதி விளைவு வறுமை மேலும்

திவிரமாக அதிகரிப்பதாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட விதத்திலான அடிப்படைப் பொருளாதார பிரச்சினைகளுக்கான முறையான ஒரு தீர்வாக இலங்கையின் பொருளாதாரத்தை கைத்தொழில்மயமாக்கலை நோக்கி நெறிப்படுத்துதல் இருந்து வருகின்றது என்பதனை இன்றைய பொருளாதார, சமூக வல்லுனர்களும் கொள்கை கர்த்தாக்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். இதன் அடிப்படையில் 1978 தொடக்கம் நாட்டில் பல்வேறு வகைப்பட்ட கைத்தொழில்மயமாக்கல் உத்திகளை அறிமுகம் செய்து வைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. இத்தகைய ஒரு மாற்றத்தின் மூலம் பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்திக் கொள்வதற்கும் தொழில்வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்வதற்கும் வாய்ப்புக் கிடைக்கும் என பொருளியலாளர்கள் கருதுகின்றனர். இதன் பிரகாரம் இலங்கையின் கைத்தொழில் கொள்கையை விரிவுபடுத்துவதற்காக 1987, 1989 மற்றும் 1995 ஆகிய வருடங்களில் பாரிய முயற்சிகள் எடுக்கப்பட்டன. இக் கொள்கை குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்கென பின்பற்றப்பட்டு வரும் உத்திகளில் சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களை விரிவாக்குதல் மற்றும் அதற்கு தேவைப்படும் வசதிகளை வழங்குதல் என்பன மிகவும் முக்கியமான ஒரு உத்தியாக இருந்து வருகின்றது. இதன் காரணமாக சிறு தொழில் முயற்சி கருதுகோளின் மீது இன்றைய சூழ்நிலையில் எமது சிறப்புக் கவனம் ஈர்க்கப்பட வேண்டியுள்ளது என நாங்கள் கருதுவதனால் இக்கட்டுரையில் ஒரு சிறு தொழில் முயற்சியை இனங்காணல், அதற்கு வரைவிலக்கணம் வழங்குதல் மற்றும் சிறுதொழில் கருதுகோளின் வரலாற்று முக்கியத்துவம் மற்றும் அது தொடர்பான அண்மைக்கால போக்குகள் தொடர்பாக கலந்துரையாடப்படுகின்றது.

### தொழில்முயற்சிகளை வகைப்படுத்தல்

சிறு தொழில் குறித்த கருதுகோளை நோக்கும் பொழுது அதனை அடிப்படை தொழில் வகைப்படுத்தலுக்கு ஊடாக நாங்கள் கவனத்தில் எடுக்கலாம். வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களிலும் அதேபோல வளர்முக பொருளாதாரங்களிலும் ஒரே விதத்தில் நிலவி வரக் கூடிய தொழில் வகைப்படுத்தலொன்றை பின் வரும் விதத்தில் இனங்கண்டு கொள்ள முடியும். இந்த வகைப்படுத்தலுக்கான அடிப்படை குறிப்பிட்ட ஒரு தொழில் பெற்றிருக்கும் சந்தைப் பங்கு அல்லது முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்தின் அளவு அல்லது வேலைவாய்ப்புக்கள் எண்ணிக்கை என்பனவாகும்.




### வரலாற்று ரீதியான வளர்ச்சி

சிறு தொழில் கருதுகோளின் வரலாற்று ரீதியான அபிவிருத்தியை நோக்கும் பொழுது, 18 ஆம் நூற்றாண்டில் கைத்தொழில் புரட்சியுடன் ஆரம்பமாகிய அடிப்படை கைத்தொழில்மயமாக்கல் யுகத்தின் போது இக்கருதுகோள் எந்த வகையிலும் முக்கியத்துவம் அற்ற, பொருளாதார ரீதியில் ஆரோக்கியமற்ற ஒரு கருதுகோளாகவே கருதப்பட்டு வந்ததனை காண முடிகிறது. அக்கால கட்டத்திலும் அதற்கு பிற்பட்ட காலகட்டத்திலும் சமூக விஞ்ஞானிகளும் கொள்கைக் கர்த்தாக்களும் பாரிய உற்பத்தி (Mass Production) கைத்தொழில் கருதுகோள் குறித்தே பெருமளவுக்கு கவனம் செலுத்தி வந்தனர். இத்தகைய ஒரு நிலைமையின் கீழ் சிறுதொழில் என்பது பொருளாதார வளர்ச்சியைப் பொறுத்தவரையில் தேவையற்ற ஒரு கருதுகோள் என்ற எண்ணப்போக்கு பரவலாக நிலவி வந்தது. அதன் காரணமாக பாரிய உற்பத்தியை மேற்கொள்வதன் மூலம் தரத்தைப் பேணி, அளவுச் சிக்கனங்களை சாதித்துக் கொள்ள முடியும் என்றும் அதன் காரணமாக பாரிய அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் பல்தேசிய கம்பெனிகள் என்பன குறித்த கருதுகோள் பொருளாதார முன்னேற்றத்துக்கு பெருமளவுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றது என்றும் அவர்கள் உறுதியாக நம்பினர். இந்த எண்ணப்போக்கு செயற்படத்தொடங்கியதுடன் இணைந்த விதத்தில் புதிய தொழில்நுட்ப முன்னேற்றங்கள் வர்த்தகமயமாக்கலுடன் துரித கதியில் ஒருங்கிணைந்தன. அதற்கூடாக கைத்தொழில்களுக்குத் தேவையான உள்ளீடுகளை பெற்றுக் கொள்ளும் சென்முறையையும் அந்த உள்ளீடுகளை முடிவுப் பொருட்களாக மாற்றியமைக்கும் செயன்முறையையும் பெருமளவுக்கு செயல்திறன் மிக்கவையாக ஆக்கிக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டது. பிற்காலத்தில் அதாவது 1960களின் போது சிறு தொழில் முயற்சி என்ற கருதுகோளின் பொருளாதார முக்கியத்துவம் குறித்து ஒரு விழிப்புணர்வு வளர்முக நாடுகளில் தோன்றியது. பாரிய மட்டத்திலான கைத்தொழில்மயமாக்கல் முயற்சியின் ஒரு துணைக் குறிக்கோளாக சிறு தொழில் குறித்த கருதுகோள் குறித்து அரச கொள்கை வகுப்போரிடையேயும் அரச மற்றும் தனியார் தொழில் முனைவோரிடையேயும் அக்கறை ஏற்பட்டிருந்தது. பாரியளவிலான கைத்தொழில்களை மையமாகக் கொண்டு சிறுதொழில் துறை வளர்ச்சியடைய முடியும் என்பதே அவர்களுடைய கருத்தாக இருந்து வந்தது. இவ்விதம் சிறு தொழில் தொடர்பான கருத்தாக்கம் வளர்ச்சி அடைந்து வந்த காலகட்டத்தில், பிரிட்டிஷ் அரசாங்கம் சிறுதொழில்துறை குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கென 1969 இல் ஜே. ஈ. போல்டன் என்பவரின் தலைமையில் ஓர் ஆணைக்குழுவை நியமனம் செய்தது. இந்த அறிக்கையில் முன்வைக்கப்பட்டிருந்த கருத்துக்களுக்கு ஊடாக வளர்ச்சியடைந்த நாடுகளில் சிறுதொழில் துறை தொடர்பான கருதுகோளின் முக்கியத்துவம் மேலும் ஊர்ஜிதமாகியது. பிரிட்டனின் சிறுதொழில் துறை தொடர்பாக 1969-71 காலப்பிரிவின் போது மேற்கொள்ளப்பட்ட ஒரு வெளிக்கள ஆய்வின் அடிப்படையில் பிரிட்டனில் சிறுதொழில் துறையின் முக்கியத்துவம் மற்றும் அதன் செயற்பாடு என்பன குறித்த ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அவர்கள் கவனத்தில் எடுத்திருந்த ஒரு முக்கியமான விடயம் சிறுதொழில் கருதுகோள் அந்நாட்டின் பொருளாதாரத்தின் ஆரோக்கிய நிலை மீது சாதகமான ஒரு தாக்கத்தை எடுத்து வருகின்றது என்பதாகும். இவ்விதமாக 1971 இல் வெளியிடப்பட்ட போல்டன் அறிக்கையின் பிரகாரம் சிறுதொழில் ஒன்றில் காணப்படக்கூடிய மூன்று அடிப்படை குணாம்சங்கள் பின்வரும் விதத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன:

(1) ஒரு சிறுதொழில் முயற்சியின் முகாமைத்துவம் அதன் உரிமையாளரினால் அவருடைய விருப்பம் மற்றும் ஆற்றல் என்பவற்றுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படுகிறது.

(2) பொருளாதார இயல்பைப் பொறுத்தவரையில் இத்தகைய ஒரு சிறுதொழில் முயற்சி சாதாரணமாக ஒரு சிறு

சந்தைப் பங்கினையே பெற்றுக்கொள்கிறது.

(3) அது ஒரு சுதந்திரமான தொழில் முயற்சியாக இருந்து வருகின்றது; ஒரு பாரிய தொழில் முயற்சியின் ஒரு பாகமாக அது இருக்கவில்லை. முடிவுகளை எடுக்கும் விஷயத்தில் உரிமையாளர் வெளிச் செல்வாக்குகளுக்கு உட்படுவதில்லை.

**வரைவிலக்கணம்**

1971 இல் வெளியிடப்பட்ட போல்டன் அறிக்கையின் பிரகாரம் ஒரு சிறு அளவிலான தொழில் என்பது அந்தந்த கைத்தொழில் துறையைப் பொறுத்து பல்வேறு விதங்களில் அமைந்துள்ளது. இந்த வகைப்படுத்தலில் பயன்படுத்தப்பட்டுள்ள அளவுகோல்களாக முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்தின் பெறுமதி, தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வருடாந்த மொத்த வியாபாரம் போன்ற விடயங்களை குறிப்பிட முடியும். பிற்காலத்தில் ஜிம்டி ஹுஹேஸ்ட் மற்றும் போல் போர்ஸ் ஆகியோர் இந்த வரைவிலக்கணத்தை மேலும் விரிவாக்கி முன்வைத்திருப்பதுடன், அதன் பிரகாரம் குறிப்பிட்ட ஒரு தொழிலை சிறு தொழிலாக இனங்காண்பதற்கு அது பின்வரும் அளவுகோல்களில் ஆகக் குறைந்தது இரு அளவுகோல்களையேனும் நிறைவு செய்திருத்தல் வேண்டும்:

(1) வருடாந்த வியாபார புரள்வு 1.4 மில்லியன் ஸ்டேர்லிங் பவுணுக்கு மேற்படாதிருத்தல்.

(2) வருடாந்த ஐந்தொகைப் பெறுமதி 0.7 மில்லியன் ஸ்டேர்லிங் பவுணுக்கு மேற்படாதிருத்தல்.

(3) ஒரு வாரத்தில் வேலையில் ஈடுபடுத்தப்படும் ஊழியர் எண்ணிக்கை 50 க்கு மேற்படாதிருத்தல்.

அவுஸ்திரேலியாவின் வில்ஷெயார் ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் ஒரு சிறு தொழில் என்பது வருடாந்தம் 100 க்கு குறையாத ஊழியர்களை வேலையில் ஈடுபடுத்தி வரும் ஒரு தொழிலாகும்.

| * சிறுதொழில் வகை முடிவுப் பொருள் | பயன்படுத்தப்பட்ட அளவுகோல் |
|---|---|
| | கைத்தொழில் 2000 ஊழியர் |
| கட்டடவாக்கத் தொழில் | 25 ஊழியர் |
| தரைவழிப்போக்குவரத்து தொழில் | 5 வாகனங்களுக்குமேல் |
| சில்லறை வர்த்தகம் | வருடாந்தப் புரள்வு 50,000 பவுண் அல்லது அதற்கு குறைவாக |
| பல்வேறு சேவைகள் | வருடாந்தப் புரள்வு 50,000 பவுண் அல்லது அதற்கு குறைவாக |

(1971 இல் 50,000 பவுண் எனக் குறிப்பிடப்பட்டிருப்பது தற்பொழுது பணவீக்கம் காரணமாக 500,000 பவுண்களாக கருதப்பட் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது).

மேலே குறிப்பிடப்பட்டவை சிறுதொழில்கள் தொடர்பாக வளர்ச்சியடைந்த நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் வரைவிலக்கணங்கள் மற்றும் அளவுகோல்கள் என்பனவாகும். எனினும், எமக்கு மிக நெருக்கமான ஆசியப் பிராந்தியத்தைச் சேர்ந்த மலேசியா, கொரியா, தாய்லாந்து, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இது தொடர்பாக பயன்படுத்தப்பட்டு வரும் வரைவிலக்கணங்களை கவனத்தில் எடுப்பது மிகவும் பொருத்தமானதாகும். மலேசிய வரைவிலக்கணத்தின் படி முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனம் 500,000 மலேசிய ரிங்கிட்டுகளுக்கு குறைவாக இருந்து வரும் தொழில்கள் சிறு தொழில் வகையைச் சேர்ந்தவை என கருதப்படுகின்றன. அதேபோல 500,000 ரிங் கிட்டுகளுக்கும் 2500,00 ரிங்கிட்டுகளுக்கும் இடையில் மூலதன முதலீடுகளை கொண்டிருக்கும் தொழில்கள் நடுத்தர அளவுத் தொழில்களாக கருதப்பட்டு வருகின்றன. ஊழியர் படையின் அடிப்படையில் நோக்கும் பொழுது 1989 இல் மொத்த ஊழியர் படையில் சுமார் 40% இனர் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் துறைக்கு பங்களிப்பினை வழங்கி வந்துள்ளனர்.

தாய்லாந்து ஒரு தொழிலில் முதலீடு செய்யப்பட்டிருக்கும் மூலதனத்தின் மதிப்பு மற்றும் வேலைசெய்வோரின் எண்ணிக்கை ஆகிய இரு அளவுகோல்களையும் அடிப்படையாகக் கொண்டு வரைவிலக்கணத்தை முன் வைத்துள்ளது. அங்கு 50க்கு குறைவாக தொழிலாளர்களை கொண்டிருக்கும் தொழில்கள் சிறு தொழில் எனவும், 51 தொடக்கம் 300 வரையிலான தொழிலாளர்களை கொண்டிருக்கும் தொழில்கள் நடுத்தர அளவு தொழில்கள் எனவும் வரைவிலக்கணங்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

எமது அயல் நாடான இந்தியாவை எடுத்து நோக்கும் பொழுது அங்கு இயந்திர உபகரணங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்தின் மதிப்பு 6 மில்லியன் ரூபாவுக்கு குறைவாக இருந்து வரும் தொழில்கள் சிறுதொழில்கள் எனக் கருதப்படுகின்றன. பொருளாதாரத்துக்கு வழங்கப்படும் பங்களிப்பைப் பொறுத்த வரையில் கைத்தொழில் துறையின் மொத்த வெளியீட்டுப் பெறுமதியில் 35% இனை சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்களே பங்களிப்புச் செய்கின்றன. தொழிலாளர் எண்ணிக்கை அடிப்படையில் 200 க்கு குறைவான தொழிலாளர்களை கொண்டிருக்கும் தொழில்கள் சிறுதொழில்கள் என பொருள் விளக்கம் அளிக்கப்படுகின்றது.

இலங்கையில் சிறிய மற்று நடுத்தர அளவு தொழில்கள் தொடர்பாக ஒரு பொது வரைவிலக்கணம் முன்வைக்கப் பட்டுள்ளது. இது ஒரு சிறப்புப் பண்பாக இருந்து வரும் அதே வேளையில், பகுப்பாய்வுகளை மேற்கொள்ளும் பொழுது பிரதிகூலமான ஒரு நிலையை தோற்றுவிக்கின்றது. இதன் காரணமாக நாம் ஒரு சிறுதொழிலை அதற்கே உரிய ஒரு தனித்துவமான அடையாளத்துடன் இனங்கண்டு கொள்ள முடியாதிருப்பது ஒரு பிரதிகூல நிலையாகவே உள்ளது. முன் வைக்கப்பட்டிருக்கும் வரைவிலக்கணங்கள் முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்தின் மதிப்பு அல்லது வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகிய அளவுகோல்களை அல்லது அவை இரண்டினதும் கூட்டுத்தொகையை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இதன் பிரகாரம் இலங்கையின் சிறு அளவு தொழில்களை இனங்கண்டு கொள்வதற்கு தனியொரு வரைவிலக்கணம் இருந்து வரவில்லை என்பதையே நாங்கள் கூற வேண்டியிருக்கின்றது. அந்தந்த சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட வர்த்தக தொழிற்பாடுகளுக்கு ஏற்ப சிறு தொழில்கள் தொடர்பான வரைவிலக்கணங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன. முதலீடு செய்யப்பட்டுள்ள மூலதனத்தின் பெறுமதி ரூ. 5 மில்லியனுக்கு குறைவாக இருந்து வருவதுடன், வேலைசெய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 50 க்கு குறைவாக இருந்து வரும் தொழில்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்கள் என இலங்கையின் சிறுகைத்தொழில் திணைக்களம்

வகைப்படுத்தியுள்ளது. கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் முன்வைக்கப்பட்டிருக்கும் வரைவிலக்கணத்தின் பிரகாரம் ரூ. 4 மில்லியனுக்கு குறைந்த மூலதனத்தையும், 50 க்கு குறைவான தொழிலாளர்களையும் கொண்டிருக்கும் தொழில்கள் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்கள் என கருதப்பட்டு வருகின்றன. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் என்ற பதத்துக்கு, நிதியுதவித் திட்டம் ஒன்றின் கீழ் பெறப்பட்டுள்ள இயந்திர உபகரணங்களின் மதிப்பு ரூ. 1 மில்லியனுக்கு குறைவாக இருந்து வருவதுடன், மொத்த வருடாந்தப் புரள்வு ரூ. 25 மில்லியனாகவும் அதில் ஏற்றுமதி வர்த்தகம் ரூ. 8 மில்லியன்களாகவும் இருந்து வரும் தொழில்கள் என வரைவிலக்கணம் வழங்கியுள்ளது.

தேசிய அபிவிருத்தி வங்கியினால் **(NDB)** செயற்படுத்தப்பட்டு வரும் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்கள் கடன் திட்டத்தின் **(SMI Scheme)** கீழ் மொத்தச் சொத்துக்களின் மதிப்பு (நிலம் மற்றும் கட்டடம் என்பவற்றின் பெறுமதியைச் சேர்க்காமல்) ரூ. 20 மில்லியனுக்கு குறைவாக இருந்துவரும் தொழில்கள் சிறுதொழில்கள் என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளன. அண்மைக்கால வரைவிலக்கணங்களில் மூலதன முதலீட்டு மதிப்பு மற்றும் தொழிலாளர் எண்ணிக்கை ஆகிய இரு அளவுகோல்களும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளன. இதன் பிரகாரம், ஒரு சிறு தொழில் என்பது மூலதன முதலீட்டு மதிப்பு ரூ. 500,000 க்கு மேற்படாமலும் தொழிலாளர் எண்ணிக்கை 20 க்கு மேற்படாமலும் இருந்து வரும் தொழில்கள் சிறு தொழில்கள் என எடுத்து விளக்கப்பட்டுள்ளன. மிக அண்மைக் காலத்தில் (1999 இல்) தொழிலாளர் எண்ணிக்கை அடிப்படையில் சிறு தொழில்களுக்கும் பின்வரும் பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது:

| தொழிலாளர் எண்ணிக்கை | தொழிலின் அளவு |
|---|---|
| 9க்கு குறைவு | மிகச் சிறு தொழில்கள், குடும்பத் தொழில்கள் |
| 10 19 | சிறு தொழில்கள் |

குடித்தொகை கணிப்பீட்டு புள்ளி விவர திணைக்களம் 1996 இல் வெளியிட்டுள்ள புள்ளி விபரத் தொகுப்பின் பிரகாரம் சிறிய மற்றும் நடுத்தர அளவு கைத்தொழில்களில் 46% க்கும் மேற்பட்டவை கொழும்பு, கண்டி, மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலேயே பரவிக் காணப்படுகின்றன.

## பொருளாதாரச் செல்வாக்கு

சிறு அளவுத் துறையில் ஏற்பட்டு வந்த படிப்படியான வளர்ச்சி மற்றும் பொருளாதாரத்துக்கு அது வழங்கிய பங்களிப்பு எந்த அளவில் இருந்து வந்தது என்பது தொடர்பான விடயங்களை ஆய்வு செய்வதில் முதலில் நாங்கள் ஆசிய வலயத்தில் உள்ள நிலைமைகளை கவனத்தில் எடுப்பது பொருத்தமாக இருக்கும். ஆசிய பிராந்தியத்தில் புதிதாக தொழில் வளர்ச்சி கண்டுள்ள பொருளாதாரங்களின் மீது சிறிய தொழில் துறையின் தாக்கம் என்பன எந்த அளவுக்கு இருந்து வந்துள்ளன என்பதனை இங்கு தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து புரிந்து கொள்ளலாம். ஆசியாவின் பெரும்பாலான நாடுகளில் சிறுதொழில் துறை பரவலாக உருவாகி வருவதுடன், சீனா மற்றும் கொரியா போன்ற நாடுகளின் மொத்த வெளியீட்டில் 40% க்கும் மேற்பட்ட அளவை இந்தத் துறை பங்களிப்புச் செய்து வருவதனை காண முடிகிறது. அந்நாடுகளின் பொருளாதாரங்களின் மீது சிறு தொழில்துறை சாதகமான தாக்கத்தை எடுத்து வருகின்றது என்பதனையே இது காட்டுகிறது. மேலும் கொரியா, இந்தியா மற்றும் சீனா போன்ற நாடுகளின் ஏற்றுமதி வருமானங்களின் 40% க்கும் மேற்பட்ட பகுதிக்கு இத்தொழில் துறையே பங்களிப்பை வழங்கி வருகின்றது. மலேசியா, சீனா போன்ற நாடுகளின் வேலை வாய்ப்புக்களில் சுமார் 40% க்கு இத்துறையே பொறுப்பாக இருந்து வருகின்றது. இவை அனைத்தும் இந்நாடுகளின் பொருளாதாரங்களைப் பொறுத்த வரையில் சிறு தொழில்துறை குறித்த கருதுகோள் மிகவும் சக்திவாய்ந்த ஒரு கூறாக செயற்பட்டு வருவதனை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் தொழில் துறையில் சிறுதொழில் துறையின் பங்களிப்பு 86% க்கு மேற்பட்டதாக இருந்து வந்த போதிலும், மொத்த வெளியீட்டுக்கான இத்துறையின் பங்களிப்பு 18% அளவில் மிகவும் குறைந்த மட்டத்திலேயே இருந்து வருகின்றது. எனவே, ஏனைய ஆசிய நாடுகளில் போல இலங்கையில் சிறு தொழில்துறை பொருளாதார அமைப்புக்கு சாதகமான ஒரு பங்களிப்பினை வழங்கி வரவில்லை என்றே வேண்டியுள்ளது.

| பொருளாதாரம் | SMI அளவு (மொத்தத்தில் சதவீதம்) | வெளியீட்டுப் பெறுமதி (மொத்தத்தில் சதவீதம்) | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதமாக | வேலை வாய்ப்பு (மொத்த வேலை வாய்ப்புகளில் சதவீதம்) |
|---|---|---|---|---|
| கொரியா | | 43.0 | 40.0 | |
| மலேசியா | 90.6 | | - | 40.00 |
| தாய்லாந்து | 99.9 | | - | |
| இந்தியா | | 35.9 | 45.0 | - |
| சீனா | 99.9 | 66.5 | 73.3 | 78.8 |
| இலங்கை | 86.0 | 18.00 | | 24.0 |

மூலம்: SMED ஆய்வறிக்கையிலிருந்து (1999) தொகுக்கப்பட்டது.

## தொழில்கள் நலிவடைதலும் பிரச்சினைகளை இனங்கண்டு கொள்வதும்

சமூக விஞ்ஞானிகள் மற்றும் பொருளாதார கொள்கை வல்லுனர்கள் ஆகியோர் எதிர்பார்த்தவாறு சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறை இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகத்தை முடுக்கிவிடும் ஒரு உந்து சக்தியாக உருவாகாமல் இருந்ததற்கான காரணங்களை கவனத்தில் எடுக்கும் பொழுது அந்தத் துறையில் திடீர் நலிவு நிலை பெருமளவுக்கு இருந்து வந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது. சிறுதொழில்களின் நலிவு நிலை மற்றும் அவை எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பன தொடர்பாக பல ஆய்வாளர்கள் ஆய்வறிக்கைகளை சமர்ப்பித்துள்ளனர். இலங்கை வணிக அபிவிருத்தி மையம் 1989 இல் சமர்ப்பித்த ஓர் அறிக்கையில் சிறு தொழில் துறையில் தொழில்கள் நலிவடையும் நிலை அடிக்கடி ஏற்பட்டு வருவதாகவும், இதற்கு அத்தொழில் துறையில் ஈடுபட்டு வருபவர்கள் எதிர்கொள்ளும் தொடரான பல பிரச்சினைகளே காரணமாக இருந்து வருகின்றன என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இத்தொழில்துறையினர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் 04 பிரிவுகளில் அடங்குகின்றன:

(1) சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்சினைகள்
(2) தொழில்நுட்ப மற்றும் உற்பத்திப் பிரிவு தொடர்பான பிரச்சினைகள்
(3) நிதி தொடர்பான பிரச்சினைகள்
(4) முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகள்

இது தவிர 1990 1995 காலப் பிரிவின் போது பட்டப்பின் படிப்பு ஆய்வொன்றுக்காக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டாய்வு